# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 28

விலை - 30ரூபா

சுடர் 34 கதிர் 309 புரட்டாதி 17ஆம் நாள் வெள்ளிக்கிழமை 04 ஒக்ரோபர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050


## வடமராட்சி கிழக்கில் யானைகள் நடமாட்டம்

வடமராட்சி, ஒக். 4

வடமராட்சிகிழக்குப் பகுதியில் அண்மைக்காலமாக யானைகளின் நடமாட்டம் தென்படுகிறது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். போக்கரப்பு, நித்திய வெட்டை, புல்லாவளி ஆகிய பகுதிகளிலேயே யானைகளின் தடங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. பருவ மழையை அடுத்து குறித்த பகுதிகளில் விவசாய நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ள நிலையில் மேற்படி தடங்கள் அவதானிக்கப்பட்டுள்ளமையானது அந்தப் பகுதி மக்களிடையே பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

வடமராட்சி கிழக் 03

## களமிறங்குகிறார் குமார வெல்கம!

கொழும்பு, ஒக். 4

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் வேட்பாளராக களமிறங்க நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தீர்மானித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பாதுகாப்பு அமைப்பின் ஊடாக சுயேச்சை வேட்பாளராக குமார வெல்கம தேர்தலில் களமிறங்கவுள்ளார் என்று குறித்த அமைப்பின் செயலர் சட்டத்தரணி ரஜித கொடிதுவக்கு தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் 25

# கோத்தாவின் குடியுரிமை மனு இன்று காலை மீளவிசாரணை

## நாடெங்கும் பாதுகாப்புத் தீவிரம்

கொழும்பு, ஒக். 4

கோத்தபாய ராஜபக்சவை இலங்கைக் குடிமகனாக அங்கீகரிப்பதை தடுத்து உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான விசாரணை இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி 25

## கோத்தாவுக்குச் சிக்கலெனின் களமிறங்கத் தயாராகச் சமல்

### வாசு கூறுகின்றார்

கொழும்பு, ஒக். 4

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவின் இலங்கைக் குடியுரிமை தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு 03

# அரசமைப்பு மறுசீரமைப்புகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்

## ஐ.தே.க. மாநாட்டில் தீர்மானம்

கொழும்பு, ஒக்ரோபர் 4

ஐக்கிய தேசியக் கட்சி அரசால் ஆரம்பிக்கப்பட்ட அரசமைப்பு மறுசீரமைப்புக்களைத் தொடர்ந்தும் முன்னெடுப்பது என்று நேற்றையசிறப்பு மாநாட்டில் தீர்மானமொன்றை நிறைவேற்றியது ஐக்கிய தேசியக் கட்சி. 25

## தேர்தல் விஞ்ஞாபனங்கள் என்பவை எழுத்துமூல ஆவணத்துக்கு நிகரே!

*சொல்கின்றார் அவைத்தலைவர் சீ.வீ.கே*

யாழ்ப்பாணம், ஒக். 4

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெளிவான கருத்தைக் கூறியுள்ளார். அதாவது அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் தங்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்ட பின் 03

## இலங்கையிலும் நோட்டா முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும்

### உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம், ஒக். 4

அரச தலைவர் தேர்தலின்போது வாக்குச் சீட்டில் வேட்பாளர்களின் பெயரின் இறுதியில், 'எவருக்கும் வாக்களிக்க விருப்பமில்லை' (NOTA- None of The Above) என்ற தெரிவையும் 25

## வடக்கு-கிழக்கில் இந்த வருடம் 260,000 பனம்விதைகள் நடுகை

யாழ்ப்பாணம், ஒக். 4

பனை அபிவிருத்திச் சபை இம்முறை வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இரண்டு லட்சத்து 60 ஆயிரம் பனம் விதைகளை நடுகை செய்யவுள்ளது. பனம் விதைகள் யாவும் கடந்த வருடத்தைப் போன்று பிரதேச செயலகங்கள் ஊடாக நடுகை செய்யப்பட்டு 25

## கெமி குழுவை இதுவரை ஏன் கைதுசெய்யவில்லை

*நீதிவான் பீற்றர்போல் பொலிஸாரிடம் கேள்வி உடன் நடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவு*

யாழ்ப்பாணம், ஒக். 4

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக பெரும் அடாவடியில் ஈடுபட்டு வரும் கெமி குழுவினரை கைதுசெய்து மன்றில் விரைவில் முற்படுத்த வேண்டும்என்று 25

## சு.க. செயற்குழு இன்று கூடுகிறது

கொழும்பு, ஒக். 4

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்துக்கு அந்தக் கட்சியின் தலைவரான அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளார்.

அரச தலைவ 03

## இரும்பக உரிமையாளர் கொலை கோண்டாவிலில் முழு அடைப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 4

வாள்வெட்டுக் கும்பலின் தாக்குதலால் உயிரிழந்த இரும்பக உரிமையாளரின் இறுதிக் கிரியைகள் நேற்று இடம்பெற்றன. அவரது கொலையைக் கண்டித்தும் நீதிகோரியும் கோண்டாவில் 03

## பலாலி வானூர்தி நிலையம் பெயர் மாற்றம் பெற்றுள்ளது

யாழ்ப்பாணம், ஒக். 4

பலாலி வானூர்தி நிலையம் யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையம் என்று பெயர்மாற்றம் செய்யப்பட்டு 03




DFCC சிறுவர் சேமிப்பு

சிறு பிள்ளைகளுடன் பரிசும் வளரும்

DFCC JUNIOR

இன்றே DFCC வங்கிக்கு வந்து ஜூனியர் கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000

www.dfcc.lk

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

DFCC வங்கி

உங்கள் வளர்ச்சிக்கு

Digitized by Noolaham Foundation.

noolaham.org | aavanaham.org

# சுக்கிரன் பெயர்ச்சி - 2019



## செல்வத்தை அள்ளி வழங்கும்

சுக்கிரன் சுகபோகங்களின் அதிபதி. சந்தோசங்களையும் சுகங்களையும் தரக்கூடியவர். இவர் ஆட்சி உச்சம் பெற்றிருக்கும் போது கொடுக்கும் பலன்கள் அலாதியானது. சில ஜாதகங்களில் நீசம் பெற்றிருந்தாலும் நீசபங்க ராஜயோக நிலையைப் பெறும்போது நல்ல பலன்களை தருவார்.

கடந்த ஒரு மாத காலமாக கன்னி ராசியில் சுக்கிரன் இருந்த போதும் ஆட்சி உச்சம் பெற்ற புதன் இருந்ததால் நீசபங்க ராஜ யோகம் பெற்றிருந்தார் சுக்கிரன். இப்போது புதன் துலாம் ராசிக்கு மாறிவிட்டதால் சுக்கிரன் நீசம் பெற்று செவ்வாய் சூரியனுடன் சேர்ந்திருக்கிறார். இன்னும் ஒரு நாள்தான் ஒக்ரோபர் 4ஆம் திகதி முதல் சுக்கிரன் தனது ராசியான துலாமில் ஆட்சி பெற்று அமரப் போகிறார். இந்த சுக்கிர பெயர்ச்சி சில ராசிக்காரர்களுக்கு விபரீத ராஜயோகத்தையும், சிலருக்கு மாளவ்யா யோகத்தையும் தரப் போகிறார்.

சுக்கிரனின் சொந்த ராசிகளான ரிஷபம், துலாம் ராசிகளில் ஆட்சி நிலையில் இருந்தாலும், தனக்கு நட்பு கிரகமான சனி ஆட்சி செய்யும் மகரம், கும்ப ராசிகளில் நட்பு நிலையிலும், புதனின் ராசியான மிதுனத்தில் நட்பாகவும், கன்னி ராசியில் நீசமும் அடைகிறார்.

தனக்கு சம பலமுள்ள செவ்வாய் ஆட்சி செய்யும் மேஷம், விருச்சிக ராசியில் சம நிலையில் இருக்கிறார். சூரியன் ஆட்சி செய்யும் சிம்ம ராசியிலும் சந்திரன் ஆட்சி செய்யும் கடக ராசியிலும் பகை நிலையை அடைகிறார். தனக்கு நிகரான பலம் வாய்ந்த, ஆனால் பகை கொண்ட கிரகமான குரு, ஆட்சி செய்யும் தனுசு ராசியில் நட்பாகவும் மீனத்தில் உச்சமாகவும் இருக்கிறார். எதிரியின் வீட்டில் உச்சம் அடையும் ஒரே கிரகம் சுக்கிரன்தான். சுக்கிரன், தான் நின்ற ராசியில் இருந்து 7ஆம் பார்வையாகப் பிற ராசியைப் பார்ப்பார். சுக்கிரன் அசுர குரு. யோகத்தையும் சுகத்தையும் தருவார் சுக்கிரன். அறுசுவை உணவை சுவைக்க வைப்பார். சொகுசு வாழ்க்கை வாழ வைப்பவர் அவர்தான். சுக்கிரன் பாதிக்கப்பட்டிருந்தால் மறைமுகமான நோய்களை தருவார்.

இந்த சுக்கிர பெயர்ச்சியால் மேடம் முதல் மீனம் வரை 12 ராசிக்காரர்களுக்கும் பலன்கள் எப்படி என்று பார்க்கலாம்;




### மேடம்

மேட ராசிக்கு சுக்கிரன் 2ஆம் வீடான தனம் வாக்கு களத்திர ஸ்தான அதிபதி காதல் நாயகன் சுக்கிரன் உங்கள் ராசிக்கு 7ஆம் இடத்தில் களத்திர ஸ்தானத்தில் அமரப்போவதால் வாழ்க்கை துணை உடனான காதல் உணர்வுகள் அதிகரிக்கும். நேரடியாக சுக்கிரன் பார்வை உங்கள் ராசி மீது விழுவதால் சிலருக்கு காதல் கணிந்து திருமணத்திலும் முடிய வாய்ப்பு உள்ளது. தொழில் விடயத்தில் ஜாக்கிரதையாக இருக்கவும். ஏற்கனவே புத்தி நாதன் புதன் ஏழாம் விட்டில் அமர்ந்து உங்க ராசியை பார்வையிடுவது நன்மை தரும் அமைப்பாகும். புதன் சுக்கிரன் பார்வை உங்கள் ராசிக்கு கிடைப்பதால் மகிழ்ச்சி அதிகரிக்கும். இதுநாள்வரை தடைப்பட்டிருந்த காரியங்கள் இனி வெற்றிகரமாக முடிவடையும். தொழில் விடயத்தில் அவதானமாக இருக்கவும். சிறிய அளவில் உடல்நலக்குறைவு ஏற்படும்.




### இடபம்

ராசிநாதன் சுக்கிரன் உங்கள் ராசிக்கு 6ஆவது இடத்தில் மறைவதால் உங்கள் உடல் நலனையும் உங்களிடம் உள்ள பணத்தையும் பத்திரமாக பார்த்துக்கொள்ளவும். வீட்டில் வாழ்க்கைத்துணையால் சின்னச்சின்ன சச்சரவுகள், ஊடல்கள் ஏற்பட்டு, அதனால் சிலருக்கு மன அழுத்தம் ஏற்படும். வேலை பார்க்கும் இடத்தில் கடும் உழைப்பை கொடுக்க வேண்டிய காலமிது. அம்மன் கோவிலுக்கு அரிசியும் வெல்லமும் தானமாக கொடுப்பதன் மூலம் நன்மைகள் நடைபெறும்.




### மிதுனம்

சுக்கிரன் உங்கள் ராசிக்கு 5ஆம் வீட்டுக்கு வருகிறார். பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சுக்கிரன் அமர்வதால் காசுக்கு மேல் காசு வந்து கொட்டுகிற நேரமிது. உற்சாகம் கொப்பளிக்கும். உங்களுக்கு கற்பனை வளமும் அழகுணர்ச்சியும் அதிகரிக்கும். வீட்டில் மனைவி, குழந்தைகள் மீது அன்பும் பாசமும் அதிகரிக்கும். சுக்கிரன் பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு பெயர்ச்சி அடைவதால் குழந்தைகளிடம் இருந்த தடைகள் நீங்கும். பிள்ளைகளுக்கு வேலைகள் கிடைக்கும். வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பீர்கள். பொருளாதார நிலை உயரும். படிப்பில் நாட்டம் அதிகரிக்கும். பூர்வீக சொத்துக்களின் பாக பிரிவினையில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். ஆசைகள் நிறைவேறும். வெற்றிகரமான கால கட்டம் இது. நண்பர்களுடன் கூட்டணி அமைத்து தொழில் செய்வீர்கள். பணவரவு அதிகரிக்கும். காசுக்கு மேல் காசு வந்து கொட்டுகிற நேரமிது. வெளிநாடு பயணம் சென்று வர நல்ல சமயம் இதுவாகும். வெள்ளிக்கிழமை துர்க்கை அம்மன் கோவில்களில் விளக்கேற்றி வழிபடலாம்.

(தொடரும்)

# 2019ஆம் ஆண்டுக்குரிய குருப்பெயர்ச்சி ஆரம்பமாகவுள்ளது



வாக்கிய பஞ்சாங்கத்தின்படி நிகழும் மங்களகரமான விகாரி வருடம் 29.10.2019, ஐப்பசி மாதம் 12ஆம் நாள், சித்த யோகம், விசாக நட்சத்திரத்தில், அதிகாலை 3.49 மணிக்கு கன்னியா லக்னத்தில் குருபகவான் விருச்சிக ராசியிலிருந்து தனுசு ராசிக்கு இடப்பெயர்ச்சி ஆகிறார்.

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி வரும் 2019 நவம்பர் மாதம் 5ஆம் திகதி காலை 9.30 மணிக்கு விருச்சிக ராசியிலிருந்து தனுசு ராசிக்கு குருபகவான் இடப்பெயர்ச்சி ஆகிறார்.

மேலும், பங்குனி 15ஆம் திகதி 28.3.2020 சனிக்கிழமை அன்றைய தினம் குருபகவானின் அதிசாரம் தொடங்குகிறது. கிட்டதட்ட 90 நாள்கள் அதிசாரத்தில் இருப்பார்.

குருபகவான் எம் சரீரத்தில் மூளைப் பகுதியில் அமர்ந்திருக்கிறார். எனவே, இவர் சிந்திக்கும் ஆற்றலை எமக்குத் தருபவர். பூர்வ ஜென்ம ஞாபகங்களை அளிப்பவர், நல்ல நினைவாற்றலைத் தருபவரும் இவரே. ஆனால், குருபகவான் அஷ்டமத்தில் அமர்ந்து நீச்சமாகி பாபகிரகங்களைப் பார்க்கும்போது தான் நினைவாற்றலை இழக்கும் நிலை ஏற்படுகிறது. இது அபகீர்த்தி யோகம் என்று அழைக்கப்படுகிறது.

- தனுசு ராசிக்கு வரும் குரு பகவான் தொடர்ந்து ஒரு வருட காலத்துக்கு இந்த ராசியில் சஞ்சாரம் செய்து அருளாசி வழங்குவார்.
- தனுசு ராசிக்கு வரும் குரு பகவான் அடுத்த வருடம் ஒக்ரோபர் மாதம் மகர ராசிக்கு மாறுகிறார்.
- தனுசு ராசியில் இருந்து தனது ஐந்தாம் பார்வையால் மேட ராசியையும், ஏழாம் பார்வையால் மிதுன ராசியையும், ஒன்பதாம் பார்வையால் சிம்ம ராசியையும் பார்க்கிறார்.
- குரு பகவானுக்கு ஸ்தான பலத்தை விட த்ருக் பலமே அதிகம். அதாவது இருக்கும் இடத்தின் பலத்தை விடப் பார்க்கும் பலமே அதிகம். எனவே, குருவின் பார்வை பெறும் ராசிகள் பூரண பலன்கள் பெறும்.
- குருபகவான் தனுசு, மீன ராசிக்கு அதிபதியாவர். குருவின் அதிதேவதை இந்திரன். விசாகம், புனர்பூசம், பூரட்டாதி குருபகவானின் நட்சத்திரங்களாகும்.
- குருபகவான் கடக ராசியில் உச்சமடைந்தும், மகர ராசியில் நீசமடைகிறார். ஒருவரின் ஜாதகத்தில் குருபகவான் நல்ல நிலையில் இருந்தால் அவர் வாழ்க்கையில் சகலவிதமான நன்மைகளையும் பெறுவார்கள்.
- கிட்டத்தட்ட 12 வருடங்களுக்குப்பிறகு குருபகவான் தனுசு ராசிக்கு வருகை தருகிறார். அவர் ஆட்சியாக இருக்கிறார். இதனால், இந்த ராசிக்கு பெரிய விடிவுகாலம் என்று சொல்லலாம். அபரிமிதமான நன்மைகளையும் இவர்கள் பெறப்போகிறார்கள்.

2019 - 2020ஆம் ஆண்டுக்கான குருப் பெயர்ச்சி பலன்களில், பொதுபலன்கள், அதிர்ஷ்டத்தை அள் எப்போகும் ராசிக்காரர்கள் யார், பரிகாரம் செய்ய வேண்டிய ராசிக்காரர்கள் யார்? சில நாள்களில் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலாலி...

பதிவு செய்யப்பட்டுள்ளது.

போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்திச் சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க சமர்ப்பித்த பரிந்துரை அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்தி சேவைகள் அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச வானூர்தி நிலையமாக இருந்து வந்த யாழ்ப்பாண பலாலி வானூர்தி நிலையம் பிராந்திய மற்றும் பன்னாட்டு வானூர்தி நிலையமாக அபிவிருத்தி செய்யும் பணி போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்தி சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவின் தலைமையில் கடந்த ஜூலை மாதம் 5ஆம் திகதி ஆரம்பமானது. இந்த அபிவிருத்திப் பணிகள் இந்த மாதம் 10ஆம் திகதி அளவில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. (ம)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



எமது கல்லூரியில் விஞ்ஞான பாட ஆசிரியராகக் கடமையாற்றிய திருமதி
**அ. அன்ரனி டினேஸ்**
அவர்கள் போட்டிப்பரீட்சையில் சித்தி எய்தி இலங்கை நிர்வாக சேவை தரம் III இற்கு தெரிவுசெய்யப்பட்டமையை பாராட்டுவதுடன் மேலும் பல பதவியுயர்வுகள் பெற இறைவனை வேண்டுகின்றோம்.
யா/டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி, வட்டமேசை.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**
திருமதி **ராஜினி துஷ்யந்தன்**
(B.A.Hons, Diploma in Education,S.L.T.S. 2 [I])



எமது கல்லூரியின் உபஅதிபர் திருமதி ராஜினி துஷ்யந்தன் அவர்கள் தேசிய கல்வி அமைச்சினால் நடாத்தப்படும் 2019 ஆம் ஆண்டிற்கான சாதனையாளர் கௌரவிப்பு விழாவில் சிறந்த ஆசிரியருக்கான **"குரு பிரதீபா பிரபா"** விருதினை (04.10.2019) இன்று பெற்றுக் கொள்வதையிட்டு அகமகிழ்ந்து பாராட்டுவதோடு அவர் மேலும் பல சாதனைகளை புரிந்து உயர்வு பெற வாழ்த்துகின்றோம்.
கல்லூரி சமூகம்
கிளி/ கிளிநொச்சி இந்துக்கல்லூரி.
C11396(16/17)

**மரண அறிவித்தல்**

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 20 . 08 . 1934 | 03 . 10 . 2019 |



திருமதி **சின்னத்தம்பி நேசமலர்**

சூறாவத்தை சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், இணுவில் தெற்கு இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி நேசமலர் நேற்று (03.10.2019) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.10.2019) வெள்ளிக்கிழமை மதியம் 12 மணியளவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
CS28462(16/1

4ஆம் மைல், இணுவில் தெற்கு, இணுவில்.
தகவல்:- குடும்பத்தினர்
077 706 8840, 077 713 0872

**மரண அறிவித்தல்**
**இரத்தினேஸ்வரி வல்லிபுரம்**



யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியை பிறப்பிடமாகவும், அல்வாய் தெற்கு மாலுசந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினேஸ்வரி வல்லிபுரம் 03.10.2019 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் ஓவசியர் என அழைக்கப்படும் காலஞ்சென்ற வல்லிபுரத்தின் மனைவியும், காலஞ்சென்றவர்களான கணேஸ் பத்தர் தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், விக்னேஸ்வரி, இராஜேஸ்வரி, லிங்கேஸ்வரி, கதிர்காமத்தம்பி, கருணாகரன் ஆகியோரின் சகோதரியும், சுரேந்திரன், இராஜ்குமார், சுகிதா, சங்கீதா, எழில்ச்செல்வன் ஆகியோரின் அன்புத் தாயாரும், தமயந்தி, கேமா, ஜெகதீஸ்வரன், ராகுலன், சர்மிளா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கிசோமன், கேமிசா, சருண்யன், பானுசா, ஜனுசா, ஆரிஸ் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 04.10.2019 பகல் 12மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆலங்கட்டை இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்வாய் தெற்கு, மாலுசந்தி.
தகவல்: குடும்பத்தினர்
0775925332, 0778543621, 0776477337

## கோத்தாவுக்குச்...

எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள வழக்கில் அவருக்குப் பாதகமான தீர்ப்பு கிடைக்குமானால் முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்சவின் பெயரைக் குறிப்பிட்டு வேட்புமனுத் தாக்கல் பத்திரங்களை சமர்ப்பிக்க கட்சி ரீதியில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

'முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கு 2019ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் தகைமைகள் காணப்படுகின்றன. அவர் போட்டியிடும் பட்சத்தில் ஏற்படும் சட்டச் சிக்கல் குறித்து பொதுமக்கள் முன்னணியின் தலைவர் மகிந்த ராஜபக்ச சட்ட நிபுணர்களிடம் ஏற்கனவே ஆலோசனையைப் பெற்றே அவரை அரச தலைவர் வேட்பாளராக உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

இரட்டைக் குடியுரிமை உடைய ஒருவர் நாட்டின் அரச தலைவரானால் அந்த நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்பது ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் இரட்டைக் குடியுரிமை உடையவர் அரச தலைவர் வேட்பாளராகப் போட்டியிட முடியாது என்பது வரவேற்கத்தக்கது.

பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக தற்போது பெயர் குறிப்பிடப்பட்டுள்ள கோத்தபாய ராஜபக்சவுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்ய முடியாமல் போனால், அந்தக் கட்சி சார்பில் முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்சவின் பெயர் குறிப்பிட்டு வேட்புமனுத் தாக்கல் செய்ய தற்போது கட்சி மட்டத்தில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது - என்றார். (ம-22,61)

## சு.க...

ரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இன்று பிற்பகல் 2 மணியளவில் குறித்த சந்திப்பு இடம்பெறவுள்ளது. சுதந்திரக் கட்சியின் அனைத்து தேர்தல் மற்றும் மாவட்ட அமைப்பாளர்களையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் அரச தலைவர் அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்வரும் அரச தலைவர் தேர்தல் தொடர்பில் உறுதியான முடிவெதையும் சுதந்திரக் கட்சி இதுவரை எடுக்காத நிலையில், இன்றைய செயற்குழுவில் இறுதி முடிவெதுவும் எடுக்கப்படலாம் என்று தெரியவருகிறது. (ம)

## இரும்பக...

உப்புமடப்பகுதியில் கடைகள், கல்வி நிலையங்கள் நேற்று மூடப்பட்டன.

கோண்டாவில் உப்புமடச் சந்தியில் அமைந்துள்ள லக்சுமி இரும்பகத்தின் உரிமையாளர் கந்தையா கேதீஸ்வரன் (வயது- 47) என்பவரே வன்முறைக் கும்பலின் தாக்குதலில் உயிரிழந்தார்.

செப்ரெம்பர் 6ஆம் திகதி மாலை இரண்டு உந்துருளியில் வந்த கும்பல் இரும்பகத்துக்குள் புகுந்து அதன் உரிமையாளரை கண்மூடித்தனமாகத் தாக்கியதுடன் இரும்பகத்துக்குள் அட்டூழியத்தில் ஈடுபட்டுவிட்டுத் தப்பித்தது.

# அதிபர் நிமலனுக்கான விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 4

மாணவர் அனுமதிக்காக கையூட்டுப் பெற்றார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட யாழ். இந்துக் கல்லூரியின் அதிபரை எதிர்வரும் 15ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மாணவர் அனுமதிக்காக பணம் பெற்றார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபர் சிறப்பு அனுமதியின் பெயரில் பருத்தித்துறை நீதிமன்ற உத்தரவுக்கு அமைய நேற்றுவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டதோடு கொழும்பு நீதிமன்றில் நேற்றையதினம் முற்படுத்தப்பட்டார்.

அதிபருக்கு பிணை வழங்குவதற்கு அவருடைய சட்டத்தரணிகள் அனுமதிகோரிய போதிலும் பிணை மறுக்கப்பட்டது. எதிர்வரும் 15ஆம் திகதி வரையில் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ம-105)

இரும்பகத்தில் இருந்த கட்டை ஒன்றை எடுத்து உரிமையாளரின் தலையில் கும்பல் தாக்கியிருந்தது. அதனால் படுகாயமடைந்த அவர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்தார். இந்த நிலையில் 24 நாள்களின் பின்னர் அவர் கடந்த திங்கட்கிழமை இரவு உயிரிழந்தார்.

அவரது இறுதிக் கிரியைகள் நேற்று இடம்பெற்றன. அவரது கொலையைக் கண்டித்தும் நீதியான விசாரணை இடம்பெறவேண்டும் என்று வலியுறுத்தியும் கோண்டாவில் உப்புமடம் பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள், கல்வி நிலையங்கள் உள்ளிட்டவை நேற்று மூடப்பட்டன. (ம-105)

## தேர்தல்...

னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது முடிவை எடுக்கும் எனக் கூறியுள்ளார். இதனை நான் வரவேற்கின்றேன். ஏனெனில் தேர்தல் விஞ்ஞாபனம்கூட எழுத்து மூலமான ஆவணத்துக்கு நிகரானது - என்று தெரிவித்தார் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம்.

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் சிவஞானம்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் வன்முறைகள் எவையும் இடம்பெறாத மாகாணமாக வடக்கு மாகாணமே இருக்கின்றது. இவ்வாறன நிலையில் வடக்கில் திடீரென பாதுகாப்புக்கள் அதிகரிக்கப்படுவது ஏன் என்று தெரியவில்லை. வடக்கில் உள்ள கட்சிகளுக்கு இடையில் பல கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் வன்முறைகள் எவையும் இடம்பெற்றதில்லை. கட்சிகள் தங்களின் வேட்பாளர்களை அறிவித்துள்ள நிலையில் பல தளம்பல்கள் உள்ளன. இந்த நிலையில் நாம் யார் ஆட்சி அமைப்பார்கள் என எதிர்வுகூற முடியாத நிலை உள்ளது - என்றார்.

உதயனின் நேற்றைய பதிப்பில் வெளியான போதிய தெளிவில்லாத நிலையில் கண்டபடி வாய்திறக்க வேண்டாம் சிவஞானத்துக்கு 'செக்' - என்ற செய்தி தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர், தமிழ் அரசுக் கட்சியில் இருந்து எவரும் என்னை கருத்துக்களை வெளியிட வேண்டாம் என வாய்ப் பூட்டுப் போடவில்லை. கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவராக நான் இருக்கின்றேன். அத்துடன் கட்சியின் தலைவரோ செயலரோ நான் ஊடகங்களுக்கு கருத்துக்களை கூறக்கூடாது எனக் கூறவில்லை - என்று தெரிவித்தார்.

எனினும், தமிழ் அரசுக் கட்சியின் செயலர் துரைராஜசிங்கம் சீ.வீ.கே.சிவஞானத்துக்கு இது தொடர்பில் அறிவுறுத்தினார் என்று உதயன் உறுதிப்படுத்தியுள்ளான். (ம-ரி1)

## வடமராட்சி...

கில் கடந்த வருடம் ஒருவர் யானையால் தாக்கப்பட்டு உயிரிழந்தமையும் இன்னுமொருவர் காயமடைந்தமையும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வகுப்புக்கள் ஆரம்பம்**
சிங்களம் இரண்டாம் மொழி (க.பொ.த) சா.த பரீட்சை வினாவிடை வகுப்புக்கள் வல்வெட்டித்துறையில் ஆரம்பம்.
**077 711 5876**

விளம்பர தொடர்புகளுக்கு
உதயன் advt@uthayan.com, 021493 1111

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

**எங்கள் குடும்ப தீபம் பத்தரை மாற்றுத் தங்கம்**
**எம்மை பரிதவிக்க விட்டுச் சென்று**
**பத்து ஆண்டுகளாகி விட்டதே அப்பா**



## அமரர் கந்தசாமி தங்கராசா (பத்தர்)

திதி : (04.10.2019)
பூர்வயக்க ஷஷ்டி

| எங்களுக்காக | இறைவனுக்காக |
|---|---|
| 15.04.1949 | 24.09.2009 |

எங்கள் ஆசை அப்பாவே !
கண்மூடி திறப்பதற்குள் பத்து ஆண்டுகள்
ஆகிவிட்டது அப்பா நீங்கள் எங்களை
விட்டுப்பிரிந்து
கண் காணாத இடத்துக்கு நீங்கள்
சென்றாலும் கண்முன்னே எப்பொழுதும்
காண்கிறோம் அப்பா
கண்ணில் தெரியும் உங்கள் உருவம்
கண்ணீரைத்தான் வரவழைக்கிறது அப்பா

" மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்தார்
மாண்புகழ் மனைவியாலும் மக்களாலும்
மறந்திடத்தான் முடியுமோ ? "

601, கே.கே.எஸ் வீதி,
நாச்சிமார் கோயிலடி.

**குடும்பத்தினர்.**

(CS 28423)(04.17)

## கண்ணிவெடியகற்றுனர்களுக்கான பதவி வெற்றிடம்

THE HALO TRUST

ஹேலோ ட்றஸ்ற் நிறுவனமானது ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு உலகளாவியரீதியில் 23 நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருட்களை அகற்றிக்கொண்டிருக்கின்றது.

ஹேலோ ட்றஸ்ற் இன் எதிர்கால வேலைக்காக மிதிவெடிப்பயிற்சிக்காக ஆண், பெண் இருபாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் விளங்கிக் கொள்ளவேண்டியது யாதெனில் கண்ணிவெடியகற்றலானது துப்பரவற்றதும், தேகவலுவை அதிகம் பிரயோகிக்க வேண்டிய கடினமான வேலையுமாகும். எமது தரமான நடவடிக்கைகள் மூலம் கண்ணிவெடி அகற்றுதலிலுள்ள அபாயத்தை இயலுமான அளவு குறைத்துக்கொள்ள முடியும். எனவே இதனை கருத்தில் கொள்ளும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பலமான அர்ப்பணிப்பு உணர்வு எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பு : எமது முன்னாள் பணியாளர்களும் விண்ணப்பிக்கலாம். ஆனால் அவர்கள் புதிய விண்ணப்பதாரிகளாகவே கருதப்படுவர். மேலும் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் பிரதேசங்களைச் சேர்ந்த பெண் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.


**மேற்குறிப்பிட்ட பதவிநிலைக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக்கோவைகளை எதிர்வரும் 11ஆம் திகதி ஐப்பசி மாதம் 2019 வெள்ளிக் கிழமைக்கு முன்னதாகக் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அனுப்பிவைக்க முடியும்.**

**ஹேலோ ட்றஸ்ற்,**
**450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி.**

(in.11393)

## மரண அறிவித்தல்

| அன்னை மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 07 | | 28 |
| 04 | | 09 |
| 1942 | | 2019 |



### தம்புசாமி பாலசுப்பிரமணியம் [சீப்சைட்பாலா]

(முன்னாள் உரிமையாளர் **யாழ்சீப்சைட்**, பருத்தித்துறை)

யாழ்.பண்டத்தரிப்பு வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை ஐந்துசந்தி, பருத்தித்துறை, இந்தியா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் தற்போது London, Newmaldenஐ வதிவிடமாகவும் கொண்ட தம்புசாமி பாலசுப்பிரமணியம் அவர்கள் 28.09.2019 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல வர்த்தகர் தம்புசாமி (சீப்சைட்) செல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராஜா, தனலட்சுமி, தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜெயகௌரியின் பாசக்கணவரும் தயாபரன்(Uk), வித்தியாபரன் (Canada), சர்வேஸ்வரன் (கொழும்பு), சிறிகுமார் (Uk), பாலாம்பிகை (Uk), ஆகியோரின் பாசத்தந்தையும் சிவசுப்பிரமணியம், சிவநாதன், சறோஜினிதேவி, கணேசலிங்கம், கமலாதேவி, விமலாதேவி, ரவீந்திரன், சகுந்தலாதேவி, ஆகியோரின் அன்புச்சகோதரரும், ரஞ்சினி, மனோகரா, ஜெயகரா, காலஞ்சென்ற ஜெயந்தினி, ஆகியோரின் அன்பு மைத்துனரும், அருளினி, சந்தானலட்சுமி, தர்சினி, வாணி, சதீஸ்குமார், ஆகியோரின் அன்பு மாமனாரும், மாதேஷ், ஹரிஸ், மாதங்கி, மானசி, ஹரிகேசன், சுவஸ்திகா, பூரணி, அட்சயா, பிரணவன், ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 4.10.2019 வெள்ளிக்கிழமை பி.ப 5.00-7.00(G.M.T) மணி வரையும் 5.10.2019 சனிக்கிழமை பி.ப 4.00- 6.00 (G.M.T) மணி வரையும் Garner's Funeral Service - Worcester Parkல் பார்வைக்கு வைக்கப்பட்டு 7.10.2019 அன்று காலை 9.00- 12.00 (G.M.T) மணி வரை AFC Wimbledon, Kingsmeadow Function Suiteல் இறுதிக்கிரியைகள் நடைபெற்று அன்று மதியம் 12.30 (G.M.T) மணியளவில் North East Surrey Crematoriumல் தகனம் செய்யப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

தயாபரன் - 00447429444988 / வித்தியாபரன் - 0016479603616 /
சர்வேஸ்வரன் - 0772349989 / சிறிகுமார் - 00447404771887 /
பாலாம்பிகை - 00447503918353

தகவல்: குடும்பத்தினர்

(IN.13411)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி பொன்மணி சண்முகராஜா

(ஓய்வு பெற்ற ஆசிரியை - நாரந்தனை)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20.11.1930 | 15.10.2018 |

திதி : 04.10.2019

நாரந்தனை என ஒரு ஊராம் பெரியக்கா
கட்டிய பெருவீடாம் - அங்கே
உறவுகள் கூடும் கிளிக் கூடாம்
மக்கள் மருகர் பேரர்களும் மகிழ்ந்து திரிந்த
மனையதுவாம்
விதியின் சதியால் உறவுகளும்
ஊரை விட்டு ஓடி வந்தோம்
இயற்கையின் நியதியும் பொய்யில்லை
இதனால் அம்மா தனித்து நின்றால்
" உன்னை யொழிய ஒருவரையும்
நம்புகிலேன் பின்னையொருவரையும்
நான் பின் செல்லேன் பன்னிருகை கோலப்பா "
என்று திருமுறையோதும் உங்கள் ஒலியும்
கேட்குதம்மா நல்லதொரு ஆசானின்
பெருமைக்கும், புகழுக்கும் நல்ல
சிறப்புக்கும் அவரது " நல்லதொரு
மாணவ உலகமே சாட்சியாகும் "
இந்த சிறப்புயொன்றே போதுமா
அம்மா உங்களுக்கு விருந்தோம்பும் பண்பும்
உங்களிடம் கண்ட தர்மம் என பலர் கூற
கேட்டனம்மா நேரில் இன்று பேசும் தெய்வம்
பெற்ற தாய் தான் அம்மா
பிறப்பு, இறப்பு, மூப்பு, பிணி ஆகியவை யடம்
உடலை மட்டுமே பாதிக்கும் ஆன்ம
உடலையல்ல மயக்கம், பொய்க் கௌரவம்
பொய் உறவு இவற்றில் நின்று விடுபட்டு
நித்தியத்தை புரிந்த நித்திய உலகத்தை
அடைகிறார் அம்மா
அகிம்சை என்பது எவருடைய முன்னேற்ற
வாழ்வுக்கும் தொல்லை கொடுக்காமல்
இருப்பது தானே அம்மா !
சக்தியின் நவநாளில் சங்கரனில்
அருள் பெற்றீர்கள் நாங்கள் ஆறாத்துயர் கொண்டோம்
நீங்கள் மறைந்தாலும்
நீங்கள் கல்வி ஊட்டிய சிறார்களின்
அறிவுக்களஞ்சியங்கள் வளர்ந்து கொண்டே
இருக்கின்றன உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**
82/22, செட்டித்தெரு, நல்லூர்.

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி நடராசா



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18.08.1939 | 03.10.2019 |

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி நடராசா 03.10.2019 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லாட்சி தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் நடராசா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, கந்தையா, தியாகராஜா, இரத்தினம், பரஞ்சோதி மற்றும் சின்னராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சண்முகரத்தினம், ஜெயலட்சுமியின் அன்புத் தாயும், இராசையா சண்முகரத்தினம் அவர்களின் அன்பு மாமியும், செந்தூரன், சோபனா, சேந்தன், ஜெயந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2019) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவகுருலேன்,**
**கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**

தகவல்
**இ.சண்முகரத்தினம்**

**021 222 9192, 077 119 1303**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வி **பகீரதன் லாசன்ஜா**




அகில இலங்கைத்
தமிழ்மொழித்தினப்
போட்டியில் பிரிவு 3 இல்
கட்டுரை வரைதலில்
தேசிய மட்டத்தில் முதலாம்
இடத்தைப்பெற்று
எமது பாடசாலைக்கு பெருமை
தேடித்தந்தமைக்காக
அவரையும் அவரை வழிநடத்திய
ஆசிரியர்களையும் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன் புரிச்சங்கம்,
**மு/ குமுழமுனை ம.வி**

(c 32737)

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 0214931111

# சேவைநலன் பாராட்டும் மணி விழா வாழ்த்தும்

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு
தமது அர்ப்பணிப்பான சேவையாற்றிய
எமது பிரதி அதிபர்
திருமதி **சந்திரகுமாரி அமிர்தலிங்கம்**

கல்விச் சேவை
**1990.03.26 - 2019.10.04**
எமது பாடசாலையில் பணி
**2004.10.01 - 2019.10.04**



மானி அன்னையின்
வளர்ச்சிக்கு அர்ப்பணித்த
உம் பணிக்கு
பாடசாலைச் சமூகம் யாம்
நாவாற வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
**யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி.**


**இப்பிரசுரமானது மக்களிடையே பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு (IOM) நிறுவனத்தால் வெளியிடப்படுகின்றது.**
**தொடர்ந்து 5 நாட்கள் வெளியிடப்படும் இப்பிரசுரிப்பை வாசித்து பயன்பெறுவதோடு இறுதியில் தரப்படும் போட்டி நிகழ்ச்சியிலும் கலந்துகொண்டு பரிசில்களை வெல்லுங்கள்.**

## சரியான வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரை இனங்காண்பது எப்படி?

எம்மில் பலர் போலியான வெளிநாட்டு முகவரின் மோசடி வலையில் சிக்கி பெருமளவான பணத்தை இழந்திருக்கலாம் அல்லது அவ்வாறாக பாதிக்கப்பட்டவர்களது அனுபவங்களைப்பற்றி கேள்விப்பட்டிருக்கலாம். அவ்வாறாயின் எவ்வாறு அவர்களை இனங்காண்பது என்பதனை தெரிந்து கொள்ள ஆர்வமாய் இருக்கின்றீர்களா? அப்படியாயின் இப்பகுதியை முழுமையாக வாசிக்கவும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் ஒருவர் தம்மை வெளிநாட்டு தொழிலுக்காக ஆட்களை சேர்த்துக் கொள்ளும் செயற்பாட்டிற்க வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்திருத்தல் அவசியமாகும். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட முகவர் எனில் அவரிடம் பதிவுத் தகவல்கள் அடங்கிய சான்றிதழ் ஒன்று காணப்படும். வெளிநாட்டுக்கு வேலைக்கு செல்வதற்கு முகவரை அணுகும் எவரும் அவரிடம் சான்றிதழ் ஒன்று உள்ளதா என்பதனை கவனத்தில் கொள்கின்றோமா என்றால் பலர் இல்லை என்ற பதிலைத்தான் கூறுவார்கள். அவ்வாறு சான்றிதழை பரிசீலிப்பதன் மூலம் முகவர் போலியான முகவரா அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவரா? என்பதனை அறிந்தகொள்ள முடியும். பதிவு செய்யப்பட்ட முகவர் ஒருவரது பதிவுச்சான்றிதழ் ஆனது பின்வரும் வடிவத்தில் அமைந்திருக்கும்.



முகவரிடம் நாம் சான்றிதழை கோரும் பொழுது அவர் தடுமாற்றத்திற்கு உட்படுவாராயின் சான்றிதழ் போலியானதாகவோ அன்றி பதிவு செய்யப்படாத முகவராகவும் அமையலாம். போலி முகவர் போலவே போலி சான்றிதழ்களும் உள்ளன. அவற்றை கொண்டு போலியான முகவர் எம்மை இலகுவாக ஏமாற்றிவிடுவார்.

மேலும் பெரும்பாலான முகவர்கள் பதிவு செய்யப்பட்ட ஒரு முகவரின் கீழ் இயங்கும் உபமுகவர்களாக காணப்படுவதனால் அவர்கள் பண மோசடிகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். உதாரணமாக கொழும்பில் பதிவு செய்யப்பட்ட முகவரின் பதிவுச்சான்றிதழை கொண்டு யாழ்பாணத்தில் ஒரு உப முகவர் இயங்குவாராயின் அவரிடம் செலுத்தப்பட்ட பணம் மோசடி செய்யப்படுமிடத்து பிரதான முகவர் பொறுப்புக் கூறமாட்டார். இதனைத் தவிர்க்க நாம் சான்றிதழுக்குரியவரின் அடையாளத்தை அவரது ஆள் அடையாள ஆவணங்களுடன் உறுதிப்படுத்த வேண்டும். மேலும் எப்போதும் பணக்கொடுக்கல் வாங்கல்களுக்கு முறையாக பற்றுச்சீட்டு ஒன்று பெற்றுக்கொள்ளல் அவசியமாகும். ஏனெனில் பின்னாளில் அவர் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடும் சந்தர்ப்பத்தில் இப்பற்றுச்சீட்டு காவல் நிலையத்தில் புகார் தெரிவிப்பதற்கான ஓர் பிரதான சாட்சியாக காணப்படும்.

தவிர முகவரின் சான்றிதழில் காணப்படும் பதிவு இலக்கத்தையும். பதிவுத் திகதியையும் குறித்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் முகவர் ஒருவரது பதிவானது இரண்டு ஆண்டுகளுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். மீண்டும் அவர் பதிவைப் புதுப்பிக்காத பட்சத்தில் அவரது பதிவு செல்லுபடியற்றதாகும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் முகவர் தான் முன்னர் பதிவு செய்த சான்றிதழை வைத்தே மோசடி வேலைகளில் ஈடுபடக்கூடும்.


பதிவை உறுதிப்படுத்துவதற்கு நாம் பின்வரும் வழிமுறைகளின் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.

- வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் இணையத்தள முகவரி **www.slbfe.lk**
- வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பின்வரும் நேரடி தொலைபேசி இலக்கங்களுக்கு ஊடாகவும் அறிந்துகொள்ள முடியும்.
  - 1989
  - 011 288 0500
- தங்களது பிரதேச செயலகத்திற்கு சென்று அங்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ் பணிபுரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை அணுகியும் விபரம் பெறமுடியும்.

தவிர உத்தியோகபூர்வ முகவர் உங்களை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திற்கு வேலை ஒப்பந்தத்தில் கையொப்பமிட அழைத்துச் செல்வார்

**முகவர் ஒருவரது பதிவினை எவ்வாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் இணையத் தளத்தின் மூலமாக அறிந்து கொள்ள முடியும்?**

1. முதலில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் இணையத்தளத்திற்க (**www.slbfe.lk.**) செல்லவும்
2. அங்கே **Recruitment Agencies** என்ற பகுதியை திறந்து கெள்ளவும்




**இங்கே 1 என கட்டமிட்டு காட்டப்பட்ட பகுதிக்குள் சான்றிதழின் இலக்கத்தை பதிவு செய்து Search என்ற 2 என வட்டமிட்டுக் காட்டப்பட்ட பொத்தானை அழுத்துவதனூடாக முகவர் பதிவு செய்யப்பட்ட முகவரா இல்லையா என்ற விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.**

**முகவர் ஒருவரது பதிவு பின்வரும் காரணங்களுக்காக புதுப்பிக்கப்படாமல் / ரத்து செய்யப்பட்டிருக்கும்**

- கடந்த காலங்களில் அவர் ஏதேனும் மோசடி வேலைகளில் ஈடுபட்டமை.
- பதிவைப் புதுப்பிப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளாமை.
- அவரின் கடந்த கால மோசமான செயற்பாடு காரணமாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் அவரது பதிவை ரத்து செய்தல்.

எனவே வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக முகவர் ஒருவரை அணுகும் போது அவரது சான்றிதழ் தொடர்பாக அவதானத்துடன் செயற்படுவதன் மூலம் பிற்காலத்தில் ஏற்படக்கூடிய பொருளாதார மற்றும் உயிர், உள இழப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

மேலும் நாடளாவிய ரீதியில் பதிவு செய்யப்பட்ட முகவர் நிலையங்கள் தொடர்பான விபரங்களை ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் பெற்றுக்கொள்ளமுடியும். அவை தவிர வீசாவுக்கான ஆலோசனை நிலையங்கள் பல நாடளாவிய ரீதியில் காணப்படுகின்ற போதிலும் அங்கீகரிக்கப்பட்ட முகவர் ஆலோசனை நிலையங்கள் என அந்த நாட்டுக்குரிய தூதரக இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்ட முகவர் ஆலோசனை நிலையங்களை நாடுதலே பாதுகாப்பான பயணத்துக்கு வழிவகுக்கும்.

மேலதிக தகவல்களுக்கும், பாதுகாப்பான வெளிநாட்டு பயணம் தொடர்பாகவும் தங்களுக்கு ஏதாவது சந்தேகங்கள் இருப்பின் **IOM** ன் நேரடி தொலைபேசி இலக்கமான 0774410086 என்ற எண்ணுக்கு அழையுங்கள். உங்களுக்கு உதவ நாம் தயார்.

அலுவலக நாட்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இன்றைய விடயப்பரப்பு நிச்சயமாக உங்களுக்கு பிரயோசனமான ஒன்றாக அமைந்திருக்கும் என்ற நம்பிக்கையோடு நாளை **IOM** நிறுவனத்தின் உலகளாவிய ரீதியில் முறையற்ற புலம்பெயர்வாளர்களுக்கான உதவி திட்டம் தொடர்பில் அறிந்து கொள்வோம். தொடர்ந்து இந்த ஒருவாரமும் எம்முடன் இணைந்திருப்பதனூடாக ஒவ்வொரு வாரமும் பெறுமதியான பரிசில்களை வெல்லும் வாய்ப்பை பெறுவதோடு, கீழே தரப்படும் குறுக்கெழுத்து புதிருக்குரிய விடைகளை கீழ்வரும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்புவ தனூடாக, நாளொன்றுக்கு தெரிவு செய்யப்படும் 20 அதிர்ஷ்டசாலிகள் வெற்றியாளர்கள் 500 ரூபா பெறுமதி யான பரிசினை வெல்லும் சந்தர்ப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன், கீழே கட்டமிட்ட பகுதியில் காணப்படும் கேள்விக்கான விடையை கீழ்க்காட்டப்பட்ட SMS வடிவத்தில் தரப்பட்ட தொலைபேசி இலக்கத்து க்கு குறுஞ்செய்தி அனுப்புவதனூடாக குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் சரியான விடைக்குரியவர்கள் 200 ரூபா பெறுமதியான தொலைபேசி மீள் நிரப்பு அட்டைகளை வெல்ல முடியும். போட்டி இறுதி திகதியின் பின்னர் தெரிவுசெய்யப்பட்ட வெற்றியாளர்கள் பத்திரிகையில் அறியத் தரப் படுவார்கள். வெளிநாடு செல்வது தொடர்பாக அல்லது முறையற்ற பயணத்தால் பாதிக்கப்பட்ட நபர் தொடர்பான உதவித் திட்டங்கள் தொடர்பில் தங்களுக்கு ஏதும் சந்தேகங்கள் இருந்தால் பினவரும் தொலைபேசி இலக்கத் தினூடாக அழைத்து விபரங்களை பெறமுடியும் 0774410086

### குறுக்கெழுத்து போட்டி இல -03




**மேலிருந்து கீழ்**

1. வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரை இனங்காண பயன்படுத்தப்படும் பிரதான ஆவணத்தில் கவனிக்க வேண்டிய ஒரு விடயம் (காலம் சாந்ந்தது).
3. ............... பணமோசடி தொடர்பில் முறையிடும் போது ஒரு சாட்சி பத்திரமாக விளங்கும்.
4. முகவர் ஒருவரின் பதிவுக்காலம் ............ ஆண்டுகள் மட்டுமே செல்லுபடியாகும்.
5. போலி முகவர் ............... நடவடிக்கையில் ஈடுபடுவார்

**இடமிருந்து வலம்**

2. பதிவு செய்யப்படாமல் பதிவு செய்யப்பட்ட முகவர் ஒருவரின் கீழ் இயங்கும் நபர் எவ்வாறு அழைக்கப்படுவார்?
3. வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரை இனங்காண பயன்படுத்தப்படும் பிரதான ஆவணம் எது?
4. வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரை இனங்காண பயன்படுத்தப்படும் பிரதான ஆவணத்தில் கவனிக்க வேண்டிய இன்னொரு விடயம் (எண் சார்ந்தது)
6. போலி முகவர் தொடர்பான செயற்பாடுகளை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய முடியும் சரி/ பிழை
7. 1989, 011 288 0500 மற்றும் 0774410086 எனபன முறையே வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் **IOM** என்பனவற்றின் ...................தொலைபேசி இலக்கம் ஆகும்.
8. உத்தியோகபூர்வ முகவர் தொழில் ஒப்பந்தத்தை கைச்சாத்திடும் பணியகம் எது?

குறுக்கெழுத்து போட்டிக்கான விடைகள் வந்து சேரவேண்டிய இறுதி திகதி 11.10.2019
குறுக்கெழுத்துப்போட்டிக்கான விடைகள் பத்திரிகையில் கட்டத்தினை வெட்டி அனுப்பலாம் அல்லது சுயமாகத் தயாரிக்கப்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.
எந்த வயதுப்பிரிவினரும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.
கடித உறையின் இடது மூலையில் குறுக்கெழுத்துப்போட்டிக்கான விடைகள் - (அன்றைய திகதி) எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.
பின்வரும் விபரங்களையும் விடைகளுடன் இணைத்து அனுப்பவும்

பெயர்:
வயது:
பால்:
முகவரி
தொலைபேசி இலக்கம்(சிறுவர்களாயின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் தொலைபேசி இலக்கம்)

**அனுப்ப வேண்டிய முகவரி : IOM**
**இலக்கம் 139,**
**கோயில் வீதி, நல்லூர்.**

தங்களது நெருங்கிய நண்பரோ அல்லது குடும்ப உறுப்பினரோ தங்களை வெளிநாடு ஒன்றுக்கு சுற்றுலா வீசாவில் செல்லுமாறும் அங்கு கிடைக்கக் கூடிய ஏதாவது வேலையை கொஞ்ச நாட்கள் செய்துவருமாறும், வேலைக்கான அனுமதி பத்திரத்தை பெற்றுக்கொள்ளும் வரை கிடைத்த அந்த வேலையை செய்துவருமாறும் கூறுகிறார். இது ஒரு முறையான / பாதுகாப்பான புலம்பெயர்வு என தாங்கள் நினைக்கிறீர்களா?

ஆம்
இல்லை

இக்கேள்விக்கான பதிலை கீழ்க்குறிப்பிட்ட முறையில் IOM ன் நேரடி தொலைபேசி இலக்கமான **0774410086** க்கு SMS /குறுஞ்செய்தி அனுப்புவதனூடாக ரூபா200 பெறுமதியான தொலைபேசி மீள்நிரப்பு அட்டைகளை குலுக்கல் முறையில் வெல்லவும்.

SMS /குறுஞ்செய்தி அனுப்ப வேண்டிய வடிவம்
பால் வயது இடம் விடை ------------------------------------------ 0774410086
உதாரணம்
M_14_Jaffna_Answer
ஆண்_14_யாழ்ப்பாணம் _ சரியான விடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1609
சீட்டிழுப்பு திகதி 03.10.2019
வெற்றி இலக்கங்கள்
40 41 65 68 J
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ.38, 617, 008/=

ராசி அதிர்ஷ்டம்
திகதி 03.10.2019
வெற்றி வாரம் 2636
வர்ணம் கபிலம்
மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 02 07 16 48
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3, 786, 752/=
04.10.2019 ம் திகதி வெள்ளிக் கிழமை கடும் நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 1919

அத கோடிபதி
ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 750
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.10.03
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,699,345/-
வெற்றி இலக்கங்கள் 01 03 50 69 Q
SEASON
விசேட வெற்றி இல. 5574

## பிரதமசெயலாளர் செயலகம், வடக்குமாகாண சபை

## பாவனையிலிருந்த வாகனங்களின் பகிரங்கஏலவிற்பனை

பிரதம செயலாளர் - வடக்கு மாகாணம் அவர்களால் வடமாகாண சபைக்குட்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்களின் பாவனையிலிருந்த பின்வரும் வாகனங்கள் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | 65-4240 | ISUZU - மோட்டார் கார் |
| 2 | NP LW 0529 | MICRO MAXUS -நோயாளர் காவுவண்டி |
| 3 | NP GW 6840 | Mahindra - உழவு இயந்திரம் |
| 4 | NPVF 2185 | Kinetic - KINE 100– மோட்டார் சைக்கிள் |
| 5 | NP VF 2187 | Kinetic - KINE 100 – மோட்டார் சைக்கிள் |
| 6 | NP GO 5607 | YAMAHA - YBX 125 – மோட்டார் சைக்கிள் |
| 7 | NP GO 5608 | YAMAHA - YBX 125 – மோட்டார் சைக்கிள் |
| 8 | NP GO 5751 | YAMAHA - YBX 125 – மோட்டார் சைக்கிள் |
| 9 | 85 SRI 8526 | Honda - SL-70 – மோட்டார் சைக்கிள் |
| 10 | NP JF 1736 | TVS – Victor – மோட்டார் சைக்கிள் |
| 11 | NP HZ-0207 | KINETIC Challenger – மோட்டார் சைக்கிள் |
| 12 | NP GI 5914 | Yamaha - YBX 125– மோட்டார் சைக்கிள் |
| 13 | NP GO-5630 | Yamaha - YBX 125 – மோட்டார் சைக்கிள் |
| 14 | NP GO-5781 | YAMAHA - YBX 125 – மோட்டார் சைக்கிள் |

ஏலவிற்பனை நடைபெறும் இடம் :- அரசஉணவுக் களஞ்சியம், A9 வீதி, நாவற்குழி.

காலம் :- 28.10.2019
நேரம் :-முற்பகல் 10.00

ஏலவிற்பனையில் பங்குபற்றவிரும்புபவர்கள் மேற்படிவாகனங்களினை 04.10.2019ஆம் திகதிமுதல் மேற்படிவாகனத்தரிப்பிடத்தில் பார்வையிடலாம்.

**ஏலவிற்பனைநிபந்தனைகள்**

1. ஏலவிற்பனையில் பங்கு பெறவிரும்பும் கேள்விதாரர்கள் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆவணமொன்றை (தேசிய அடையாள அட்டை / செல்லுபடியான கடவுச் சீட்டு/செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்) சமர்ப்பித்தல் வேண்டும்.
2. ஏலவிற்பனையில் சித்திபெறும் கேள்விதாரர் அதற்குரிய பணத்தினை முழுமையாக உடனடியாககாசாகச் செலுத்துதல் வேண்டும். எனினும் நான்கு சில்லு வாகனங்களிற்கு அதற்குரிய பணத்தின் 50% இனை உடனடியாக காசாகச் செலுத்தலாம் என்பதுடன் மீதிப்பணம் அன்றையதினமே மாலை 2.00 மணிக்குள் முழுமையாக செலுத்தப்படல் வேண்டும்.
3. பணம் முழுமையாக செலுத்தப்பட்டு இரு நாட்களுக்குள் உரிய ஆவணங்களினை பெற்று உரிய வாகனத்தினை மேற்குறித்த வாகனத் தரிப்பிடத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.
4. இவ் விடயம் தொடர்பாக பிரதம செயலாளரின் தீர்மானமே இறுதியானது.

**அ.பத்திநாதன்**
**பிரதமசெயலாளர்,**
**வடமாகாணம்.**
**04.10.2019**

(C/011388)

MAJESTIC CINEPLEX



Jaffna Platinum
10.30AM | 1.30PM | 4.30PM | 7.30PM | 10.30PM (Fri/Sat)



Jaffna Bronze
10.15AM | 7.15PM | 10.15PM (Sat/Sun)



Jaffna Silver
10.45AM | 1.45PM
7.45PM | 10.15PM (Fri/Sat)



Jaffna Bronze
1.15PM | 4.15PM

மேலதிக விபரங்கள் தொடர்பாக அழையுங்கள்
011 5 999 999
CEYLON THEATRES
Since 1928
www.ceylontheatres.lk
MajesticCineplexSL

# தெரிந்து கொள்வோம்

உலோகங்களுக்காக, மனிதன் சுரங்கம் வெட்டுகிறான். போக்குவரத்துக்கும் சுரங்கம் அமைக்கிறான். ஆனால், முதன்முதலில், சுரங்கம் அமைத்தவை புழுக்களே. அவை பூமியைத் துளைப்பது தங்கள் பாதுகாப்புக்காகத் தான். புழுக்களின் வேலையால், செடி, கொடிகள் ஆரோக்கியமாக வளர்கின்றன. சாதாரணமாக, எல்லா இடங்களிலும் காணப்படும், 1.5 சென்றிமீற்றர், நீளமுள்ள புழு, 24 மணிநேரத்தில், 810 சென்றிமீற்றர், தூரம் மண்ணை குடைந்து விடும்.

**காணி மற்றும் வீடு விற்பனைக்கு**
சாவகச்சேரியில் காணி, வீடு விற்பனைக்குண்டு.
கொழும்பு (Golden Tower) Central Road இல் வீடு விற்பனைக்குண்டு. (02 Bed Room, 02 Toilet, Balconey, Kitchen)
077 671 8178, 076 220 1966
0044 7799 851992 (Viber/whatsapp)


**வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு**
வட்டுக்கோட்டை யாழ். கல்லூரிக்கு அருகில் மகளிர் விடுதிக்குப் பின்புறம்
3 படுக்கையறையுடன் கூடிய வீடு 3 பரப்பு காணியில் வட்டுக்கோட்டையில் விற்பனைக்குண்டு. மேலதிக விவரங்களுக்கு
077 102 0520
இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**சிங்கள வகுப்புக்கள்**
அடிப்படையிலிருந்து எழுத, வாசிக்க , பேச பரீட்சைகளுக்கு தோற்றுவதற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
※சனி, ஞாயிறு பிரிவுகள் :- 12.30pm- 1.30pm
※செவ்வாய், புதன், வெள்ளி பிரிவுகள் :- 4.00pm- 5.30pm
**ஆசிரியர்: SKB. மனோகரன்**
※பதிவு கட்டணம் : 500/00
※கற்கை கட்டணம் : (1000 x 3) = 3000/00
※அச்சடித்த பாடக்குறிப்புக்கள்
※சான்றிதழ்
※காலம் : 03 மாதங்கள்
IPS யா/ பல்கலைக் கழகம் அருகில், திருநெல்வேலி.
TP: 021 434 0229, 077 602 1794

## பழமொழிகள்

1. வாயுள்ள பிள்ளை பிழைக்கும்.
2. சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி.
3. தனி மரம் தோப்பாகாது.
4. வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்.
5. கொடுங்கோல் அரசு நெடுங்காலம் நில்லாது.
6. செருப்பின் அருமை வெயிலில் தெரியும், நெருப்பின் அருமை குளிரில் தெரியும்.
7. வளவனாயினும் அளவறிந்தளித்துண்.
8. ஐந்திலே வளையாதது, ஐம்பதிலே வளையுமா?
9. எதிர்த்தவன் ஏழைஎன்றால் கோபம் சண்டாளம்.
10. தங்கம் தரையிலே தவிடு பானையிலே.
11. சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை.
12. உருட்டும் புரட்டும் ஒடுக்கும் சிறப்பை.
13. பூமியைப்போலப் பொறுமை வேண்டும்.
14. அத்திப் பழத்தைப் பிட்டுப் பார்த்தால் அத்தனையும் புழு.
15. கள்ளம் பெரிதோ? காப்பு பெரிதோ!

## பாராட்டி வாழ்த்துகின்றோம்.



எமது பாடசாலையின் அதிபர்
உயர்திரு.
**கணேசன் சந்திரமோகன்**
**(SLPS III B.A, B Ed.,M.Ed)**
அவர்கள் இன்று
04.10.2019 இசுறுபாய
பத்தரமுல்ல கேட்போர்
கூடத்தில் கல்வி
அமைச்சினால் வழங்கப்
படுகின்ற சிறந்த
அதிபருக்கான
**"குரு பிரதிபா பிரபா"**
விருதுவழங்கி
கௌரவிக்கப்படவுள்ளார்.
எமது அதிபர் மேலும் பல உயர்
பதவிகளையும் பட்டங்களையும்
பெற்று வளம்பெற
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் *Congratulations*
**மாணவர்கள், ஆசிரியர்கள்,**
**பாடசாலை சமூகம்**
**யா/மாமுனை அ.த.க பாடசாலை, தாழையடி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கையில் நடந்த உண்மை சம்பவம் படமாகிறது

இலங்கையில் இடம்பெற்ற உண்மை சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு 'ஒற்றைப் பனைமரம்' என்கிற படம் உருவாகி இருக்கிறது.

திரைப்பட வெளியீட்டில் பிரபலமான ஆர்.எஸ்.எஸ்.எஸ் பிக்சர்ஸ் எஸ்.தணிகைவேல் முதல் முறையாகத் தயாரித்திருக்கும் படம் 'ஒற்றைப் பனைமரம்'. ஈழத்தில் நடந்த உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாகி இருக்கும் 'ஒற்றைப் பனைமரம்' 40 பன்னாட்டு திரைப்பட விழாக்களில் தேர்வாகி சிறந்த நடிகர், சிறந்த ஒளிப்பதிவு, சிறந்த இசை என 17 விருதுகளையும் குவித்திருக்கிறது.

விரைவில் வெளியாக இருக்கும் இந்தப் படத்தின் முன்னோட்டக் காணொலியை இயக்குநர் பா.ரஞ்சித் வெளியிட்டார்.

## twitter

**மாஸ்டர் பீஸ்@Kannan_**

இறுதியில் பிடி மண் அல்லது பிடி சாம்பல் அவ்வளவே! இடையில்தான் எத்தனை எத்தனை பாடுகள்.

**பர்வீன் யூனுஸ்**

ஆடு, மாடு, கோழிகளின் இறப்பு தள்ளி போடப்படுகிறது புரட்டாசி மாதத்தில்.

**எனக்கொரு டவுட்டு**

வெயில் காலங்களில் முகம் காட்டாத மெல்ல திறந்தது கதவு அமலாக்களை அதிகம் காணலாம்..!

**மாஸ்டர் பீஸ் @Kannan_**

பிறரைக் காத்திருக்க சொல்வதற்கு எப்போதும் ஒரு நிமிஷம் போதுமானதாய் இருக்கிறது.

**ச ப் பா ணி@manipmp**

விலை தெரியும். ஆனால் மதிப்பு தெரியாதது **'புத்தகங்களே'**







எழுதுவதெல்லாம் எழுத்தல்ல மனிதனை விழித்து எழச் செய்வதே எழுத்து!

ஒரு வார்த்தை வெல்லும் ஒரு வார்த்தை கொல்லும் என்பது எம் முன்னோர் வாக்கு.







# நிறையா வாழ்க்கை

பறவைகள் எந்த மரங்களையும்
விலைக்கு வாங்கியதில்லை!
இருந்தாலும்..
மரங்கள் யாவும் பறவைகளுக்காகவே
வான் நோக்கி வளர்கின்றன!

நிலவு என்றும்
இரவைச் சேமித்துவைத்தில்லை!
இருந்தாலும்..
இரவு நிலவை மட்டுமே
எதிர்நோக்கியிருக்கிறது!

ஆடு, மாடுகள் யாவும்
தலையில் புல்லைக் கட்டிக்கொண்டு
மேயச்செல்வதில்லை!
இருந்தாலும்..
தாவரங்கள் இவற்றையே
பச்சைக் கொடிகாட்டி அழைக்கின்றன!

நதிகள் எங்கும்
முகவரி தேடி மயங்கியதில்லை!
இருந்தாலும் கடல்
நதிகளுக்காகவே காத்திருக்கிறது!

வேர்கள் எப்போதும்
தன்னை விளம்பரம் செய்துகொண்டதில்லை!
இருந்தாலும்..
மழை என்றும்
வேர்களை மறந்ததில்லை!

ஆனால் மனிதன் மட்டும்..
ஏதை எதையோ விலைக்கு வாங்குகிறான்!
சேமித்து வைக்கிறான்!
உணவுமூட்டையைத் தூக்கிக்கொண்டே திரிகிறான்!
முகவரியைத் தேடித்தேடி மயங்குகிறான்!
எதற்காகவோ காத்திருக்கிறான்!
விளம்பரப் பலகை ஏந்திக்கொண்டே நடக்கிறான்!

## அனுபவ மொழிகள்

- ஒரு நல்ல நூல் ஒரு நல்ல மனிதனுக்கு நல்ல சொத்தாகும்.
- மிக அற்பமான விஷயங்களைப் பற்றி அதிகமாக அறிந்து கொள்கிறவனே நிபுணன் ஆகிறான்.
- மகிழ்ச்சி என்பது நல்ல ஆரோக்கியமும் குறைந்த ஞாபக சக்தியையும்விட வேறொன்றுமில்லை.
- கடுமையான கஞ்சத்தனம் தகுதியற்ற தற்பெருமை இவை மனிதனை நாசமாக்கிவிடும்
- ஒருவன் கற்பிக்கும் போது இருவர் கற்றுக்கொள்கின்றனர்.
- தெய்வம் காட்டுமே தவிர ஊட்டாது.
- தவறு நேர்ந்து விடுமோ என்று அஞ்சி அஞ்சி எந்த செயலையும் செய்யாமல் பின் வாங்குவது இழிவானது
- எந்தப் பிழையை நீ எங்கே கண்டாலும் அதை உன்னிடம் இருந்தால் திருத்திக்கொள்.

நிறைய காயங்களுக்குப் பிறகு தான் கனவுகள் எல்லாம் நினைவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



■ வ.லோஜினி

# வழக்காற்று திருமணங்களும் அவற்றுக்கான சட்ட அனுமதி

மனிதன் ஒரு சமூக விலங்கு. அவன் தன்னுடைய தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்வதில் பிறரில் தங்கியே வாழ்க்கையை நடத்துகின்றான். இத்தகைய வாழ்க்கை முறையை அவன் திருமணம் என்கின்ற அமைப்பின் ஊடாகப் பெற்றுக் கொள்கின்றான். ஆனால் மேற்கத்தேய கலாசாரத்தை உள்வாங்கி தனது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்ற இடமான குடும்பம் என்பதிலிருந்து விலகுவதால் விவாகரத்து மற்றும் பிரிந்து வாழ்தல் என்பன இன்றைய காலகட்டத்தில் அதிகரித்த ஒன்றாகக் காணப்படுகின்றது.

தேவைகள் பூர்த்தி செய்து கொள்கின்ற இடமான குடும்பத்தில் இடம்பெறுகின்ற திருமணங்களுள் ஒன்றாக வழக்காற்றுத் திருமணம் காணப்படுகிறது. இந்த வழக்காற்று திருமணங்கள் மேற்கொள்ளப்படுகின்றபோது அவை பொதுச் சட்டத்தின் கீழ், சட்ட வலிதானவையாகக் கருதப்படுமா எனும்போது பொது திருமணப் பதிவு கட்டளை சட்ட பிரிவு 64 இல் திருமணம் என்பது எந்தத்



திருமணத்தையும் குறிக்கும் என ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது வழக்காற்று முறைப்படி தம்பதியினர் இருவர் தாம் மேற்கொள்கின்ற வழக்காற்று திருமணமும் பொது திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் சட்ட வலிதுடையதாகக் காணப்படுவதைக் காட்டுகின்றது.

பொது திருமண பதிவு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 15இல் கூறிய ஆகக் குறைந்த திருமண வயதெல்லை பதினெட்டு என்பதையும் பிரிவு 16 இல் கூறிய தடுக்கப்பட்ட உறவுகளிடையே திருமணம் செய்யமுடியாது என்பதையும் பிரிவு 18இல் கூறிய முதலாவது திருமணம் வலிதாக உள்ள போது இரண்டாவது திருமணம் செய்ய முடியாது என்பதையும் வழக்காற்று திருமணம் செய்கின்றபோது தேவைப்பாடுகளாகக் கருத்திற் கொள்ள வேண்டும். மாறாக இவற்றைக் கருத்திலெடுக்காமல் வழக்காற்று திருமணம் செய்து கொண்டால் அவை சட்ட வலிதற்றவையாகக் கருதப்படும்.

இதற்கு ஆதாரமாக தியாகராஜா எதிர் குருக்கள் என்கின்ற வழக்கில் வழக்காற்றுக்கமைய திருமணம் செய்து கொண்டாலும் பொது திருமண பதிவு கட்டகளைச் சட்டத்தின் பிரிவு 15 இல் கூறிய ஆகக் குறைந்த திருமண வயதெல்லையான பதினெட்டு என்பதை பூர்த்தி செய்யாததால் சட்டவலிதற்றது எனத் தீர்க்கப்பட்டமையை கூறலாம்.

வழக்காற்றுத் திருமணங்கள் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்படுகின்றபோது திறத்தவர் எந்தச் சமூகத்தைச் சார்ந்து இருக்கின்றாரோ அந்தச் சமூகத்தினுடைய திருமணம் பற்றிய ஆக்கக் குறைந்த வழக்காற்று பூர்த்தி செய்யப்பட்டது என நீதிமன்றத்தைத் திருப்திப்படுத்த வேண்டிய கடப்பாடும் உண்டு. அதற்கு ஆதாரமாக பொன்னம்மா எதிர் ராஜகுலசிங்கம் என்கின்ற வழக்கில் தம்பதியினர் இருவரும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் கலம் சடங்கு செய்து திருமணம் செய்தபோதும் தாலி கட்டவில்லை. இங்கு நீதிமன்றம் அவர்கள் தமது சமூகத்தின் ஆகக் குறைந்த வழக்காற்று தேவையைப் பூர்த்தி செய்தமையால் அந்தத் திருமணம் வலிது என தீர்க்கப்பட்டமையைக் கூறலாம்.

மேற்கூறப்பட்ட விடயங்களைத் தொகுத்து நோக்குகின்றபோது வழக்காற்றுத் திருமணம் செய்பவர்கள் தமது சமூக வழக்காற்றுத் தேவைகளை பூர்த்தி செய்தாலும் பொது திருமணப் பதிவு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 15,16, 18 என்பவற்றின் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யாவிட்டால் அது சட்ட வலிதற்றவையாகக் கருதப்படும் என்பதையும் சட்ட வலிதற்றதாகக் கருதப்படும்போது திருமணத்தின் விளைவால் பிறக்கின்ற பிள்ளைக ளின் நெறிமுறைத் தன்மை மற்றும் அவர்களிடையே சொத்துக்களை பகிர்கின்ற போது பிரச்சினைகள் ஏற்படும் என்பதையும் அறியமுடிகின்றது.

கட்டுரையாளர்:
கொழும்புப் பல்கலைக்கழகம், சட்டபீடம்

# சொல்லத்தான் நினைக்கிறேன்!

சொல்ல வந்ததைச் சரியாகச் சொல்லுபவர்கள் எத்தனை பேர்? நூற்றுக்குப் பத்துப் பேருக்கு இந்தத் திறமை இருந்தால் ஆச்சரியம்! உலகத்தில் தோற்றவர்கள் தொண்ணூறு பேர்; வென்றவர்கள் பத்து பேர் என்பதற்கான காரணம் இப்போது புரிகிறதா?

பேசும்போதும் எழுதும்போதும் உரையாடும்போதும் பட்டுக் கத்தரித்த மாதிரி, பளிச்சென்று சொல்ல வந்த விடயத்தைப் பிறர் புரிந்து கொள்ளும்படிச் சொல்லுவது உன்னதமான கலை.

உச்சரிப்பில் பிழை, வார்த்தைகள் தேர்வதில் பயிற்சியின்மை, சொல்ல வந்த விடயத்தில் தெளிவும் தீர்க்கமும் இல்லாமை, பதட்டம், பரபரப்பு, கேட்டுக்கொண்டிருப்பவர் மீது நம்பிக்கையின்மை, கேட்பவர்களைக் குறைத்து மதிப்பிடுதல் இவை எல்லாம்தான் தோல்விக்கான காரணங்கள்.

மேலை நாடுகள் இந்த வாற்றலை வெகுவாகக் கொண்டாடுகின்றன. இலக்கியங்களில் இந்தத் திறன் கொண்டாடப்படுகிறது. நடைமுறையில் நம்மவர்கள் இந்தக் கலையில் அதிகக் கவனம் செலுத்துவது இல்லை.

உச்சரிப்பை அடுத்து வார்த்தைத் தேர்வு முக்கிய விடயம். ஒரு திருமணம், நிகழ்வுக்குப் போக வேண்டும் என்றால் இதைப் போடலாமா? அதைப் போடலாமா? என்று துணியை எடுத்து இறுதியாக ஒன்றைத் தேர்வு செய்கிறோம் அல்லவா? அப்படி யாருடனாவது பேசும்போது இந்த வார்த்தை சரியா? அந்த வார்த்தை சரியா? என்று மாறி மாறி மனசுக்குள் பேசிப் பார்த்தது உண்டா? மிகச் சிறந்த வார்த்தையைத் தேடித் தேடிக்கண்டதுண்டா? உண்டு என்றால் உங்களுக்கு வெற்றி நிச்சயம்.

அமைதியான ஒருவரை "சார்... பசு மாதிரி சாது" என்றால் சந்தோசப்படுவார் அதற்குப் பதிலாக "சார்... மாடு மாதிரி" என்று சொல்லிப் பாருங்கள்... மனுசர் உங்களை முட்ட வருவார்.

அடுத்து, தெளிவாகச் சொல்லுதல். "ஏழு மணிக்கு உங்களைச் சந்திக்கிறேன்" என்பதை விடக் "காலை ஏழு மணிக்கு" என்று தெளிவுடன் சொல்லுவது அவசியம். அதற்காக "ஆறு மணிக்கு அப்புறம் வருகிற ஏழு... எட்டு மணிக்கு முன்னால் வருகிற ஏழு..." என்று படுத்தக் கூடாது. கூடுமான வரை குழப்பம் வராதபடி சொல்லுவது நல்லது.

எதைப் பேசினாலும் குழப்பம் வராதபடி தெளிவுடன் பேசுங்கள். வெற்றி நிச்சயம். இன்னொரு விடயம். உடன்பாட்டையும் எதிர்மறையையும் எப்போதும் சேர்த்துப் சேர்த்துப் பேசாதீர்கள். கேட்பவர்கள் குழம்பிவிடுவார்கள். உங்கள் நோக்கத்துக்கு நேர்மாறாகக் காரியம் செய்துவிடுவார்கள். "சாம்பார் வை... ரசம் வைக்காதே... நீலக் கலர் சட்டையைப் பெட்டியில் வை... சிவப்புச் சட்டையை வைக்காதே... .தேநீர்போடு... கோப்பிபோடாதே" என்று உடன்பாட்டையும் எதிர்மறையையும் மாறி மாறிச் சொன்னால் எதைச் செய்யவேண்டும், எதைச் செய்யக்கூடாது என்பதில் குழப்பம் வரும். "சாம்பார் வை" என்று மட்டும் சொல்லுங்கள்.

"நீலக் கலர் சட்டை கொண்டு போக வேண்டும்... தேநீர் குடிக்கிறேன்" என்று உடன்பாடான விடயங்களை மட்டும் சொல்லுங்கள். கேட்பவர்கள் மனதில் சரியாகப் பதியும். குழம்ப மாட்டார்கள். தெளிவான தொடர்பாடல் உள்ளவர்கள் வெற்றி பெறுவது நிச்சயம்.

சுகி சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## தமிழ் வேட்பாளரும் மறைமுக அரசியலும்

அரச தலைவர் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் தமிழ் அரசியல்கட்சிகள் மத்தியில் பொதுக் கருத்து ஒன்றை ஏற்படுத்துவது என்கிற பெயரில் தமிழ் மக்கள் பேரவையினர் ஒரு முன்முயற்சியைத் தொடக்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக ஒரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவினர் தமிழ் அரசியல் கட்சிகளைச் சந்தித்து உரையாடி வருகின்றனர்.

ஏற்படுத்தப்படவுள்ள பொதுக் கருத்து என்ன என்பது தொடர்பில் பேரவையினர் இதுவரையில் மக்களுக்கு எதனையும் தெரியப்படுத்தவில்லை. ஆனால், அரச தலைவர் தேர்தலில் தமிழ்ப் பிரதிநிதி ஒருவரை நிறுத்துவது தொடர்பாகவே அவர்கள் கட்சிகளுடன் கலந்துரையாடி வருகின்றார்கள் என்று அறியமுடிகின்றது.

அரசதலைவர் தேர்தலில் தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதன் மூலம் என்ன நடந்துவிடப்போகின்றது என்றால், ஒன்றுமில்லை என்பதுதான் பதில். அரச தலைவர் ஆகுவதற்கு வேண்டிய 51 விழுக்காடு வாக்குகளை தமிழ் வேட்பாளர் பெறுவதற்கான வாய்ப்பு இலங்கையின் அரசியல் சூழலில் அறவே இல்லை. அத்தகையதொரு வேட்பாளர் இலங்கையின் ஒட்டுமொத்தத் தமிழ் வாக்குகளையாவது பெறுவாரா என்று கேட்டால் அதற்கான வாய்ப்புக்கள்கூட மிகக் குறைவே.

அரசதலைவர் தேர்தலில் இதற்கு முன்னரும் தமிழ் வேட்பாளர்கள் போட்டியிட்டிருக்கிறார்கள். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான எம். கே. சிவாஜிலிங்கம் அதற்கான அண்மைக்கால உதாரணம். அவர் போட்டியிட்டபோது எள்ளி நகையாடியவர்களில் ஒரு பகுதியினரும், வாக்குகளைப் பிரிக்கும் சிங்களவர்களின் சதிக்குத் துணைபோகிறார் என்று வசை பாடியவர்களில் ஒரு தரப்பினரும் தற்போது தமிழ் வேட்பாளர் ஒருவர் போட்டியிடுவதால் அரச தலைவர் தேர்தலின் முதன்மைப் போட்டியாளர்களின் வெற்றி வாய்ப்பு பாதிக்கப்படாது என்று கூறுவது வேடிக்கை விநோதம்.

இம்முறைத் தேர்தலில் எந்தவொரு முதன்மை வேட்பாளரும் தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவின்றி 51 விழுக்காடு வாக்குகளைப் பெற்றுக்கொள்ள மாட்டார்கள் என்கிற நிலையில் தமிழ் மக்களின் வாக்குகளை தமிழ்ப் வேட்பாளர் ஒருவருக்குச் செலுத்துவதன் மூலம் சிங்கள வேட்பாளர்களுக்கான எதிர்ப்பை வெளிக்காட்ட முடியும் என்கிறார்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டவர்கள். தமிழ் வேட்பாளருக்கு வாக்களிப்போர் தமது இரண்டாவது தெரிவாக முதன்மை வேட்பாளர்களான சிங்கள வேட்பாளர்களைத் தெரிவு செய்வார்கள் என்றும், முதல் சுற்று வாக்கு எண்ணிக்கையின்போது முதன்மை வேட்பாளர்களில் எவரும் 51 விழுக்காட்டைப் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் இரண்டாம் கட்ட வாக்குஎண்ணிக்கையில் தமிழ் மக்களின் இரண்டாம் தெரிவு வெற்றியாளரைத் தீர்மானிக்கும் என்பது அவர்களின் வாதம்.


ஆகமொத்தத்தில், எப்படியிருந்தாலும் இறுதி வெற்றியாளரைத் தெரிவு செய்வதற்குத் தமிழர்களின் வாக்குகளே காரணியாக இருக்கப்போகின்றன. அதாவது தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவதுதான் இவர்களின் உத்தி. இந்த உத்தியின் மூலம் இவர்களுக்குத் தீர்வும் பன்னாட்டு உதவியும் பன்னாட்டு அரங்கில் தனித் தேசத்துக்கான அங்கீகாரமும் கிடைத்துவிடுமா என்றால், கிடைத்தால் நன்றாயிருக்கும் என்பதாகத்தான் பதில் அமைந்திருக்கும்.

ஆகமொத்தத்தில், அரசதலைவர் தேர்தலில் தமிழ் அரசியல் கட்சிகளையெல்லாம் ஒரு பொது முடிவுக்குக் கொண்டு வருவது என்கிற பெயரில் தாம் எடுத்த ஒரு முடிவை அரசியல் கட்சிகள் மீதும் தமிழ் மக்கள் மீதும் திணிக்கப் பேரவையினர் எடுக்கும் நடவடிக்கை ஏற்கப்பட முடியாதது. பேரவையினர் ஒரு மக்கள் இயக்கமாக இந்த முடிவுக்குப் போவதாக இருந்தால் முதலில் அவர்கள் அதனை மக்கள் முன் வைத்து அவர்களின் ஆதரவைப் பெற்றிருக்கவேண்டும். அதை விடுத்து அரசியல்வாதிகளைப் போன்றே மக்களிடமிருந்து மறைத்து இரகசியமாக அரசியல் கட்சிகளுடன் பேசி தமிழ் வேட்பாளரைக் களமிறக்க முயற்சிப்பது ஒரு மக்கள் இயக்கத்தின் நடவடிக்கையாக இருக்காது. தமக்கு வேண்டிய ஒருவரை தமிழ் வேட்பாளராக நிறுத்தி, அவருக்கு மக்கள் செல்வாக்கை அதிகரிப்பதற்கான முயற்சியாகவும் நீர்த்துப் போயிருக்கும் ஆதரவைப் பேரவையும் அதன் அரசியல் தலைவர்களும் மீட்டெடுக்கும் முயற்சியாகவும் மட்டுமே பார்க்கப்படும்.

# ரணசிங்க பிரேமதாசவை நிபந்தனையுடனேயே ஆதரித்தார் அஷ்ரப்

## சஜித்துக்கு ஒரு நினைவூட்டல்

பசீர் சேகு தாவூத்


அஷ்ரப்

ரவூப் ஹக்கீமின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தலைவர் அஷ்ரப் தங்களது தந்தைக்கு ஆதரவு வழங்கியது போன்று ரவூப் ஹக்கீம் உங்களுக்கு ஆதரவு வழங்குவதைப் பெரிதும் மதிப்பதாகக் கூறியுள்ளீர்கள்.

ஹக்கீம் உங்களது கட்சிக்குள் நடந்தேறிய வேட்பாளர் போட்டியில் ரணிலுக்கு எதிராக உங்களோடு தோழுரசி நின்றதுபோல் அன்று உங்கள் தந்தையாரான பிரேமதாச கட்சிக்குள் எதிர் நோக்கிய சவால்களின் போது ஜேயாருக்கு எதிராக அஷ்ரப் அவருடன் உடன்பட்டு நிற்கவில்லையே!

### அஷ்ரப்பின் அரசியல் நகர்வு

ஐக்கிய தேசியக் கட்சியை காலாகாலமாக எதிர்த்த தமிழர் விடுதலைக் கூட்டணியுடனும், பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனும் தன்னையும் தனது சமூகத்தையும் அடையாளப்படுத்தியவர் அஷ்ரப் என்பதை நீங்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் அந்தக் காலத்தில் நீங்கள் சிறுபிள்ளை யாயிருந்தீர்கள்.

மேலும், உங்கள் தந்தையின் கட்சி ஆறில் ஐந்து பெரும்பான்மையை நாடாளுமன்றில் பெற்றிருந்த வாய்ப்பை பயன்படுத்தி, அன்றிருந்த தேர்தல் முறையில் வெட்டுப்புள்ளியில் குறைப்பைச் செய்வித்து பெரிய சாதனையை நிகழ்த்திய பின்னரே அஷ்ரப் அப்பாவுக்கு ஆதரவளித்தார். முன்கூட்டிய நிபந்தனை வெற்றி பெற்ற தன் அடிப்படையில் வந்த ஆதரவு அது. இவ்வாதரவு முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்றில் பன்மையாகக் கால்பதிக்க வாய்ப்பளித்தது. இவ்வாறாகவா இப்போது ஹக்கீம் அவர்கள் உங்களுக்கு ஆதரவு தருகிறார்?


ரணசிங்கபிரமேதாச

### வாக்குறுதி மீறப்பட்டது

கல்முனை மன்சூர் மற்றும் சம்மாந்துறை டீ.யு மஜீத் ஆகியோரை 1989 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டிக்கு நிறுத்துவதில்லை என்ற உங்கள் தந்தை அஷ்ரப்புக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டு, அவ்விருவரையும் தேசியப்பட்டியலில் உறுப்பினராக்கியது மட்டுமல்லாமல் அமைச்சர்களாகவும் ஆக்கி அஷ்ரப்புக்கு ஆணி அடித்தார் என்பதையும் மறப்பதற்கில்லை.

அஷ்ரப், சிறிமாவோ பண்டாரநாயக்கவுடன் எழுத்து மூல உடன்படிக்கை செய்வதில் இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் மறைந்த ஜூனியர் பொன்னம்பலத்துடன் ஏற்பட்ட தகராறினால்தான் அங்கிருந்து வெளியேறி உங்களது தலைமைக்கு 'மறைமுக' ஆதரவை வழங்கினார் என்பதையும் இங்கு உங்களுக்கு சுட்டிக்காட்டவேண்டியுள்ளது.

1989 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நான் 13 உறுப்பினர்களோடு ஈரோஸ் சார்பாக நாடாளுமன்ற உறுப்பினரானேன். நாடாளுமன்றில் சத்தியப் பிரமாணம் முடித்து சிலநாள்கள் கழிந்த பின்னர் தோழர் பாலகுமாரன் தலைமையில் மரியாதை நிமித்தம் அரச தலைவர் என்ற வகையில் உங்கள் தந்தையாரை உங்களது கொழும்பு வாழைத்தோட்ட இல்லத்தில் சந்தித்தோம்.

### நன்றி மறவாத பிரேமதாச

நாங்கள் ஒவ்வொருவராக அரச தலைவர் பிரே மதாசவுடன் பெயர் கூறிகை குலுக்கும் வேளை 'நான் பசீர்' என்று சொன்னவுடன் என்னை முஸ்லிம் என்று அடையாளம் கண்ட உங்கள் தந்தை யார், நான் அரச தலைவரானது அஷ்ரப்பின் ஆதரவளித்ததனால்தான். நான் முஸ்லிம்களுக்கு கடமைப்பட்டுள்ளேன் என்று எனது கைகளை இறுகப் பற்றியவாறு கூறினார். அவர் அன்றைய தேர்தலில் 50 சதவீதத் தைத் தாண்டி 30 ஆயிரம் வாக்கு களையே மேலதிகமாகப் பெற்றிருந்தார். அன்று அஷ்ரப்பின் ஆதரவு கிடைத்திரா விட்டால் உங்கள் தந்தையார் அம்போவாகியிருப்பார்.

ஆனாலும்; சஜீத் அவர்களே! உங்கள் தந்தையார் அரச தலைவர் பிரேமதாச, எனது ஏறாவூர் முஸ்லிம் விவசாயிகள் பொலன்னறுவை மாவட்டத்தைச் சேர்ந்த தம்மன்கடுவையில் அந்தக் காலத்தில் செய்து வந்த புகையிலைப் பணப்பயிர் வயல்களை, அந்தப் பகுதி தலைமை பிக்குவின் கதையைக் கேட்டு நெருப்பு வைத்து கொளுத்தி எனது ஊராரைத் துரத்தியடித்தார் என்பதையும் தங்களுக்கு சொல்லிவைக்கிறேன். பின்னர் அந்தப் பிக்கு புலிகளால் கொல்லப் பட்டார் என்பது உங்களுக்குத் தெரியுமா சஜீத் அவர்களே?

*கட்டுரையாளர்:*
*முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்*
*மு.கா., ஈரோஸ்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ சேரலாதன்

# நீதித்துறைக்கு சவால் விடுத்துள்ள நீராவியடிச் சம்பவங்கள்



செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் அனைத்தும் முடிவடைந்துவிட்டதால் அதை மேலும் கிளறிக்கொண்டிருக்காமல் அப்படியே விடுவதே நல்லதெனப் போதித்திருக்கிறார் புத்தரின் நெறிகளைப் பின்பற்றி வருவதாகக் கூறிக்கொள்ளும் கலகொட அத்தே ஞானசாரதேரர்.

பிரச்சினை முடிந்துவிடவில்லை, அது இனிமேல்தான் ஆரம்பிக்கப்போகின்றது என்று ஞானசார தேரருக்குப் புரியாமல் இருக்கலாம்,ஆனால் மக்களுக்கு நன்கு தெரியும்.

நீராவியடிப்பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற சம்பவங்களும் அதனைத் தொடர்ந்து ஞானசாரதேரர் உதிர்த்த கருத்துக்களும் சாதாரணமானவையல்ல. ஆலய வளாகத்தில் தேரரின் உடலைத் தகனம் செய்ய வேண்டாமென நீதிமன்றக் கட்டளை வழங்கிய பின்னரும் அதை உதாசீனம் செய்து ஆலயத்தின் தீர்த்தக்கேணிக்கு அருகே இறந்த பிக்குவின் உடலைத் தகனம் செய்தமை மிகப்பெரிய நீதிமன்ற அவமதிப்பாகும். இதனைப் புரிந்த அனை வருமே தராதரம் பார்க்கப்படாது தண்டிக்கப்பட வேண்டியவர்கள். ஞானசார தேரர் ஏற்கனவே நீதிமன்றத்தை அவமதித்த வழக்கில் சிறைத் தண்டனையை அனுபவித்த ஒருவர். அரச தலைவரின் கருணையால் அவர் தற்போது வெளியில் நடமாடு கிறார். ஆனால், அவர் தமது பழைய செயற்பாடுகளைக் கைவிட்டதாகத் தெரியவில்லை. இவரது தலைமையில் சென்ற பௌத்த பிக்குகளே புனிதமான பிள்ளையார் ஆலய வளாகத்தினுள் இறந்த பிக்குவின் உடலைத் தகனம் செய்ததுடன் அடாவடித்தனங்களிலும் ஈடுபட்டனர்.

**நீதிமன்றம் தீவிர கவனம்**

தற்போது நீதிமன்றம் இந்த விடயம் தொடர்பாகத் தீவிர கவனம் செலுத்தி வருகின்றது. நீதிமன்றக் கட்டளையைப் பெற்றுச்சென்று அதை அவமதிக்கும் விதமாக நடந்துகொண்ட பௌத்த பிக்குவை நீதிமன்றத்தில் முன்னி லைப்படுத்துமாறும் சட்டத்தரணி மற்றும் வேறு சிலர் ஆலயச் சூழலில் தாக்கப்பட்டமை தொடர்பான வீடியோ ஆதாரங்களைப் பெற்றுச் சமர்ப்பிக்குமாறும் முல்லைத்தீவு நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இறந்த பிக்குவின் உடல் அழுக ஆரம்பித்ததால் அதை அவசரமாகத் தகனம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டதாக ஞானசார தேரர் புதுக்கதையொன்றைத் தற்போது அவிழ்த்து விட்டுள்ளார். அழுகிய உடலை ஆலய வளாகத்தில் தான் தகனம் செய்ய வேண்டுமா? அதைத் தகனம் செய்வதற்கு வேறு இடம் கிடைக்கவில்லையா?

இந்த நாடு சிங்கள - பௌத்தர்களுக்கே உரிமையானது. ஏனையவர்கள் விரும்பினால் அதை ஏற்றுக் கொண்டு இங்கே வாழலாம், முடியாது போனால் நாட்டை விட்டு வெளியேறி வேறு இடங்களைப் பார்க்கலாமென இன வாத நஞ்சைக் கக்கியவர்தான் இந்த ஞான சார தேரர் நீராவியடிச் சம்பவத்தைத் தூண்டிவிட்ட வரும் இவர்தான். இத்தகைய ஒருவர் சுதந்திரமாக நடமாடித் திரிவது நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தவே செய்யும்.

> “இந்த நாடு சிங்கள - பௌத்தர்களுக்கே உரிமையானது. ஏனையவர்கள் விரும்பினால் அதை ஏற்றுக் கொண்டு இங்கே வாழலாம், முடியாது போனால் நாட்டை விட்டு வெளியேறி வேறு இடங்களைப் பார்க்கலாமென இனவாத நஞ்சைக் கக்கியவர்தான் இந்த ஞான சார தேரர்.

நீராவியடியில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு எதிராக நீதித்துறை மிகக் கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ளாதுவிட்டால் எதிர்காலத்தில் நாட்டில் நீதி என்பது இல்லாமற் போய்விடும். மக்கள் தமது பாதுகாப்புக்காக பொலிஸாரையும் நீதிமன்றங்களையும் நம்பியுள்ளனர். சமீப காலமாகப் பொலிஸாரின் செயல்கள் தொடர்பாக பொது மக்களால் கடும் விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. பொலிஸார் சட்டத்தை நிலைநிறுத்தியிருந்தால் நீராவியடியில் இடம்பெற்ற சம்பவங்களைத் தவிர்த்திருக்க முடியுமெனவும் மக்கள் கூறுகின்றனர்.

**தமிழர்களின் தியாகங்கள்**

இந்த நாட்டின் அபிவிருத்திக்காகத் தமிழ் மக்கள் எவ்வளவோ செய்திருக்கிறார்கள். மலையகத்தில் பெருந்தோட்டங்கள் உருவாகுவதற்குத் தமது வியர்வையை மட்டுமல்லாது உயிர்களையும் ஈந்த இந்திய வம்சாவளித்தமிழர்களை எவராலுமே மறந்துவிட முடியாது. அந்த மக்களின் அவலவாழ்வு தற்போதும் தொடரவே செய்கின்றது. அது மட்டுமல்லாது இங்கு பூர்வீகமாக வாழ்ந்து வரும் தமிழர்களும் நாட்டுக்காக எவ்வளவோ தியாகங்களைப் புரிந்திருக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் இனவாதம் பேசிக்கொச்சைப்படுத்தி வருவதை எவ்வாறு பொறுத்துக்கொள்ள முடியும்?

பௌத்த பிக்குகள் செய்வதையெல்லாம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பது அரசியல்வாதிகளின் வேலை யல்ல. மதம் வேறு நாட்டின் நிர்வாகம் வேறு, என்பதை அவர்கள் முதலில்புரிந்து கொள்ள வேண்டும். பண்டாரநாயக்க காலத்தில் இருந்து இன்று வரை நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமைக்கு பௌத்தத துறவிகளே முட்டுக் கட்டைபோட்டு வருகின்றனர். இந்தப் பிக்குகள் சிறுபான்மையின மக்களை ஒரு பொருட்டாக ஒருபோதுமே மதித்ததில்லை.

நீராவியடியில் நீதியை மதிக்காது அபகீர்த்தி ஏற்படுத்தியவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படுவது நீதித்துறையின் முக்கிய பொறுப்பாகும்.இதில் தவறு ஏற்படுமானால் நாட்டின் எதிர்காலம் கவலைக்குரியதாக மாறிவிடும். ■

---

ஆசிரியருக்கான கடிதம்

# மனிதாபிமானத்துடன் அணுகுங்கள்

மருத்துவமனையில் கிளினிக்குக்காகச் சென்று, மருத்துவர் பார்வையிட்டபின் மருந்து கொடுக்குமிடத்துக்குச் சென்றபோது நிற்கவோ இருக்கவோ முடியாமல் நோயாளி ஒருவர் தடுமாறினார். அவர் மருந்து எடுக்க நான்காவது இடமாக எனக்கு முன் நின்று கொண்டிருந்தார். தனக்கு முன்பாக நின்ற நான்கு பேரிடமும் தன்னுடைய நிலையைக் கூறி மருந்து எடுக்க விடுமாறு மன்றாடியும் அந்த நான்கு பேரும் சம்மதிக்கவில்லை. உண்மையிலேயே அவர்களும் நோயாளர்கள் தான். ஆனால் நோய்த் தாக்கத்துக்கு கடுமையாக உள்ளான ஒருவருக்கு விட்டுக் கொடுத்து உதவினால் என்ன? அவர்களிடம் மனசாட்சியே செத்து விட்டதா? இது எனக்குள் எழுந்த கேள்விகள்.

கருணை, மனிதாபிமானம், வறுமைப்பட்டவர்களுக்கு உதவுதல், எல்லாம் குறைந்து வருவது மிகவும் வேதனையே! அன்பான எமது தாயக உறவுகளே! ஒரு மனிதனின் ஆபத்துக்கு உதவுங்கள். நோயாளிக்கு உதவுங்கள், மனிதாபிமானத்துடன் செயற்படுங்கள்.

*அ. அன்பு, வரணி.*

---

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்பட மாட்டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பொலிஸ் நிலையத்திலிருந்து சந்தேகநபர் லாவகமாகத் தப்பினார்

## அதையடுத்து பொலிஸ்நிலையப் பாதுகாப்பு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 4

ஹெரோய்ன் போதைப்பொருள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

தடுப்புக்காவல் சந்தேகநபர் தப்பித்ததையடுத்து ரிசேவ் பொலிஸ் அலுவலர்கள் இருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாண தலைமைப் பொலிஸ் நிலையத்தின் பாதுகாப்பும் நேற்றுமுன்தினம் தொடக்கம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண தலைமையகப் பொலிஸ் நிலையப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் கடந்த திங்கட்கிழமை சுற்றுக்காவல் நடவடிக்கையின்போது ஓட்டுமடம், பொம்மைவெளிப் பகுதியைச் சேர்ந்தவரிடம் 25 மில்லிக்கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டது என்று கூறி அவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் விசாரணைகளின் பின்னர் சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார். பொலிஸ் நிலையச் சிறைக்கூடத்தில் தடுத்துவைக்கப்பட்டார். எனினும் அவர் சில மணிநேரங்களில் காணாமற்போனார்.

அதனையடுத்து பொலிஸ் நிலைய மறைகாணிகளின் பதிவுகளைச் சோதனையிட்டபோது, சிறைக்கூடத்தின் பூட்டு சரிவரப் பூட்டப்படாமல் இருந்தமையும் அதனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திய சந்தேகநபர், சிறைக் கூடத்தைத் திறந்து சாதாரணமாக முன் வாயில் ஊடாக வெளியேறிச் செல்வதும் தெரியவந்தது.

அதனையடுத்து சந்தேகநபரைத் தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டனர். எனினும் அவர் தலைமறைவாகியதால் பொலிஸாரின் முயற்சி தோல்வியடைந்தது.

இந்த நிலையில் ரிசேவ் பொலிஸில் கடமையிலிருந்த அலுவலர்கள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாண தலைமையகப் பொலிஸ் நிலைய முதன்மை வாயில் படலை மூடப்பட்டு, பொலிஸ் அலுவலர் ஒருவர் விழிப்பு நிலையில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.

பொலிஸ் நிலையத்துக்குள் பொதுமக்கள் எழுந்து நடமாடுவதற்கும் தடைவிதிக்கப்பட்டு பாதுகாப்பு இறுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்திலிருந்தும் கடந்த வாரம் சந்தேகநபர் தப்பிச் சென்றிருந்தார். பின்னர் அவர் கைது செய்யப்பட்டிருந்தார். (த-37)

# பொய்ச் சாட்சி கூறுமாறு எதிராளிக்கு வற்புறுத்தல்

## முறைப்பாட்டாளருக்கு நீதிவான் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 4

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நடைபெற்று வரும் காசோலை மோசடி வழக்கில் எதிராளியை பொய்ச் சாட்சியம் கூறுமாறு வற்புறுத்தி மிரட்டிய முறைப்பாட்டாளரை யாழ்ப்பாண நீதிவான் கடுமையாக எச்சரித்தார்.

அண்மையில் குறித்த வழக்கு விசாரணைகள் முடிவடைந்து வழக்குடன் தொடர்புடையவர்கள் நீதிமன்ற வளாகத்துக்கு வெளியே வந்தனர்.

வழக்கின் முறைப்பாட்டாளர் மூன்றாம் எதிரியிடம் தனிப்பட்ட ரீதியில் அணுகி தமக்குச் சாதகமாக பொய்ச் சாட்சியம் அளிக்குமாறு வற்புறுத்தியுள்ளார். அதற்கு எதிராளி மறுப்பு தெரிவித்து சென்றிருந்தார்.

அன்றைய தினம் மாலை கொக்குவிலில் குறித்த மூன்றாம் எதிராளி தனது முச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த வேளை முறைப்பாட்டாளரின் சகாக்கள் உந்துருளியில் வந்து அவரை வழிமறித்து மிரட்டி முறைப்பாட்டாளருக்கு சாதகமாகப் பொய்ச் சாட்சியம் அளிக்குமாறு மிரட்டிச் சென்றுள்ளனர் என்று மிரட்டல் சம்பவம் தொடர்பில் மூன்றாம் எதிராளி யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்தநிலையில் குறித்த வழக்கு நேற்றுமுன்தினம விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிராளியின் சட்டத்தரணி தனது கட்சிக்காரர் மிரட்டப்பட்ட சம்பவம் தொடர்பில் நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு சென்றார்.

அதனையடுத்து நீதிவான் முறைப்பாட்டாளரிடம் இவ்வாறான செயற்பாடுகளில் இனி ஈடுபடக்கூடாது என்று கடுமையாக எச்சரித்தார். மீறிச் செயற்பட்டால் வழக்கு நிறைவடையும் வரை விளக்கமறியலில் தடுத்து வைக்கப்படுவீர் என்றும் கடுமையாக எச்சரித்தார். வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (த-37)

# வாணி விழாவும் கலை நிகழ்வுகளும்

யாழ்ப்பாணம், ஒக்.4

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஏற்பாட்டில் இன்று நாவலர் கலாசார மண்டபத்தில் வாணி விழாவும் கலை நிகழ்வுகளும் சிறப்பாக இடம்பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறித்த நிகழ்வுகள் பிற்பகல் 2 மணிமுதல் மாலை 6 மணிவரை நடைபெறவுள்ளன.

மாநகர சபை கலை பண்பாடு மேம்பாட்டு குழுவின் தலைவர் பாலச்சந்திரன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாநகர முதல்வர் இ.ஆனல்ட் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் ஆசியுரையை செஞ்சொற் செல்வன் ஆறு.திருமுருகன் வழங்க, நவராத்திரி தொடர்பான சிறப்புரையை சொல்வின் செல்வர் இரா.செல்வவடிவேல் வழங்குவார்.

இதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளாக பாஷையூர் கலைக் கழகம் வழங்கும் "யாழ்பாடி" தென்மோடிக் கூத்தும், கோண்டாவில் நாராயணா கலைக் கழகம் வழங்கும் அரிச்சந்திர மயான காண்டமும் இடம்பெறவுள்ளது. (ஐ-105)

# கலாசார விழா

யாழ்ப்பாணம், ஒக்.4

கலாசார விழா ஒன்று இன்று வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகமும், கலாசாரப் பேரவையும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன.

கலாசாரப் பேரவைத் தலைவர் சண்முகராஜா சிவஸ்ரீ தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலர் இ.இளங் கோவன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீட இந்து நாகரிகத்துறை மூத்த விரிவுரையாளர் சி.ரமணராஜா, யூனியன் கல்லூரி அதிபர் தி.வரதன், கலாபூசணம் மு.சிவப்பிரகாசம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நவராத்திரி விழாவும் ஆசிரியர் தினமும்

அளவெட்டி, ஒக்.4

யாழ்ப்பாணம், அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் நவராத்திரி விழாவும், ஆசிரியர் தின நிகழ்வும் எதிர்வரும் திங்கட்கிழமை பாடசாலை மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-63)

# ஓய்வூதியம் வழங்கல்

சாவகச்சேரி, ஒக் .4

பன்னாட்டு முதியோர்தினத்தை முன்னிட்டு ஒக்ரோபர் மாதத்துக்கான ஓய்வூதியம் இன்று வெள்ளிக்கிழமை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

# பரிசளிப்பு நிகழ்வும் நிறுவுநர் தினமும்

யாழ்ப்பாணம், ஒக.4

யாழ்ப்பாணம் விக்ரோறியாக் கல்லூரியின் பரிசளிப்பு நிகழ்வும், நிறுவுநர் தினமும் இன்று வெள்ளிக்கிழமை கல்லூரி திறந்த வெளி அரங்கில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண மீள்குடியேற்றம், மறுவாழ்வளிப்பு அமைச்சின் செய [illegible] கலந்துகொள்ளவுள்ளார். (ஐ)



# மகாத்மா காந்தியின் பிறந்த தின நிகழ்வு

வடமராட்சி, ஒக்.4

மகாத்மா காந்தியின் 150 ஆவது பிறந்த தின நிகழ்வு நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நகர மத்தியில் அமைந்துள்ள காந்தியின் உருவச்சிலைக்கு முன்பாக நடைபெற்றது. பருத்தித்துறை நகர சபை, அகில இலங்கை காந்தி சேவா சங்கம் மற்றும் அறவழிப்போராட்டக்குழு ஆகியன இணைந்து நடத்திய நிகழ்வு பருத்தித்துறை நகரசபை தலைவர் யோ. இருதராயா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் யாழ்ப்பாணத்தில் உள்ள காந்தி உதவி தூதரகத்தின் மூத்த அதிகாரி ஆர். பாட்சா, பருத்தித்துறை பிரதேசசபை தவிசாளர் அ.சா. அரியகுமார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

மகாத்மா காந்தியின் வரலாறு தொடர்பான துண்டறிக்கைகள் அறவழிப்போராட்டக்குழுவால் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. (ஐ-173)



# விழிப்புணர்வு செயலமர்வு

சாவகச்சேரி, ஒக்.4

யாழ்ப்பாணம், கொடிகாமம், வரணி பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்கு போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு நடத்தப்பட்டது.

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி பிரிவினரின் ஏற்பாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி பிரதேச சபையின் கொடிகாமம் பேருந்து நிலையத்துக்கு முன்பாக உள்ள கட்டடத்தில் இடம்பெற்றது.

தென்மராட்சி பிரதேச செயலக சமுர்த்தி அலகின் சமுதாய செயற்றிட்டத்தின்கீழ் செயலமர்வு நடத்தப்பட்டது. (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு கைத்தொழில் உற்பத்திகள் தேசிய மட்டத்துக்கு அதிகளவில்

## மாகாண தொழிற்றுறை அமைச்சு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 4

வடக்கு மாகாணத்தில் கடந்த வருடத்தை விட இந்த வருடம் சிறு கைத்தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகள் அதிக எண்ணிக்கையில் தேசிய மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளன என்று மாகாண தொழிற்றுறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாணத்தில் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக சிறு கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் முயற்சிக்குத் தேவையான பயிற்சிகள் மற்றும் உதவிகளை தொழிற்றுறை திணைக்களம் வழங்கி வருகிறது. அதற்கு ஏற்ற வகையில் அவர்களின் உற்பத்திகளின் தரம் அதிகரித்துச் செல்கிறது. கைவினைப் பொருள்களைப் போல நெசவு கைத்தொழிலும் வளர்ச்சி அடைந்து செல்கிறது.

கைத்தறி நெசவு உற்பத்திகள், களிமண், தும்பு . உலோகம் பனை, உணவு, மர வேலை பாடுகள், தோல் உற்பத்திகள், சங்கீத உபகரணங்கள், தென்னை பனை சார் உற்பத்திகள், ரெயிபோம், லெதர், பேப்பர், ஓலை , பழங்கள், காய்கறிகள், தும்பு, நார், சிரட்டை , கழிவுத் துணி, பிளாஸ்டிக், மரம், சங்கு, சிற்பி வேலைப்பாடுகள் போன்ற பல்வேறு வகையான உற்பத்திகள் சிறு கைத்தொழில் முயற்சியாளர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகிறன. அவர்களை ஊக்குவிப்பதற்காக மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் கண்காட்சிகள் இடம் பெற்று வருகிறன.

2018 ஆம் ஆண்டு 212 ஆக்கங்கள் மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டன. அவற்றில் 151 ஆக்கங்கள் தேசிய மட்டப் போட்டிக்கு கொண்டு செல்லப்பட்டது. அதில் 38 ஆக்கங்களுக்கு தேசிய மட்ட விருதுகள் கிடைத்தன. அதே போன்று நெசவுத் துறைக்கும் 44 ஆக்கங்கள் தெரிவு செய்யப்பட்டன.

இந்த வருடம் 294 ஆக்கங்கள் மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டன. அவற்றில் 174 ஆக்கங்கள் தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

நெசவு துறைக்கும் 57 ஆக்கங்கள் தெரிவு செய்யப்பட்டன. இவ்வாறு உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்தி தரம் அதிகரித்துக் கொண்டு செல்கிறது. 2017 ஆம் ஆண்டு220 ஆக்கங்கள் மாகாணமட்டத்தில்தெரிவுசெய்யப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (த-7)

## 13 வீடுகள் திறந்து வைப்பு

சாவகச்சேரி,ஒக். 4

யாழ்ப்பாணம், கொடிகாமம் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் அமைக்கப்பட்ட 13 வீடுகள் நாளை சனிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளன.

தேசிய கொள்கைகள் பொருளாதார விவகாரங்கள் மீள்குடியமர்வு, மறுவாழ்வளிப்பு வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சால் அமைக்கப்பட்ட வீடுகளே உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக அமைச்சின் செயலர் வே.சிவஞானசோதி கலந்துகொண்டு குடியிருப்புகளைத் திறந்து வைக்கவுள்ளார். (ஐ-9)



## கடற்படையால் மூவர் கைது

யாழ்ப்பாணம்,ஒக். 4

மீன்பிடி அனுமதிப் பத்திரம் இல்லாமல் கடல் அட்டைகள் மற்றும் சங்குகள் பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டனர்.

கிளிநொச்சி, சுண்டிக்குளம் கடற்பகுதியில் வைத்து கடந்த புதன்கிழமை இவர்கள் கைது செய்யப்பட்டதாக கடற்படை ஊடகம் தெரிவித்துள்ளது.

சந்தேகநபர்களிடமிருந்து 550 கடல் அட்டைகள் மற்றும் 4 சங்குகள் என்பன கைப்பற்றப்பட்டன.

மீன்பிடி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட ஒரு டிங்கிரி படகு, ஒரு வெளிப்புற இயந்திரம் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் ஆகியவற்றையும் கடற்படையினர் கைப்பற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் மன்னார் பகுதியில் வசிப்பவர்கள் எனவும் அவர்கள் 28 முதல் 34 வயதுக்கு உட்பட்டவர்கள் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளுக்காக அவர்கள் யாழ்ப்பாண நீரியல் வள திணைகள் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## தகவல் தொழில்நுட்ப பரீட்சை 14இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 4

2019 ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்ப பரீட்சை எதிர்வரும் 14ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

21ஆம் திகதி வரை இந்தப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

ஒரு இலட்சத்து 86 ஆயிரத்து 363 பேர் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். நாட்டிலுள்ள 656 கணினி ஆய்வு கூடங்கள் பரீட்சை மத்திய நிலையங்களாகப் பயன்படுத்தப்படவுள்ளன. உயர்தர தகவல் தொழில்நுட்ப பரீட்சைக்கு தோற்றவுள்ள விண்ணப்பதாரிகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பரீட்சைகள் கடந்த வருடம் தொடக்கம் செயன்முறைப் பரீட்சையுடன் கூடியதாக ஆரம்பிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)

## கல்விக் கண்காட்சி

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, புத்தூர் பொதுநூலகத்தால் "நூலகத்தை நோக்கிக் குழந்தைகள்"என்ற தலைப்பில் கல்விக் கண்காட்சி ஒன்று இன்று காலை 9 மணிக்கு வலி.கிழக்குப் பிரதேசசபை மண்டபத்தில் சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உதவி நூலகர் இரத்தினகுமார் குபேசன், யாழ்ப்பாண வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சிற்றம்பலம் கணேசலிங்கம், சிறப்பு விருந்தினராக புத்தூர் மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் சுப்பிரமணியம் தனரூபன் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்தக் கண்காட்சியை பாடசாலை மாணவர்கள் பொதுமக்கள் அனைவரும் வந்து பார்வையிட்டு பயன்பெறுமாறு வலி.கிழக்கு பிரதேச சபைச் செயலர் யுகராஜா ஜெலீபன் கேட்டுக் கொண்டுள்ளார். (ஐ)

## இரு பகுதியினரிடையே மோதல்; நான்கு பேர் மருத்துவமனையில்

சாவகச்சேரி,ஒக்.4

இரு பகுதியினருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தாக்கம் கைகலப்பாக மாறியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் மூவர் உட்பட நால்வர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு தென்மராட்சி தெற்கு தனன்களப்பு பகுதியில் இடம்பெற்றது. இதே இடத்தைச்சேர்ந்த 36,25,27 வயதுடையோரும் ,கேரதீவு சாலையைச் சேர்ந்த 25 வயதுடைய ஒருவருமாக நால்வர் காயமடைந்தனர்.

இவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். சம்பவம் தொடர்பில் சாவாகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-9)

## 'பிள்ளைக்கனியமுதம்' முன்பள்ளிக்கு சரவணபவன் எம்.பி. 10 லட்சம் நிதி

யாழ்ப்பாணம், ஒக். 4

யாழ்ப்பாண மாநகர 'பிள்ளைக் கனியமுதம்' முன்பள்ளிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் 10 லட்சம் ரூபா நிதி உதவி வழங்கியுள்ளார். சரவணபவனின் நல்லூர் தொகுதிக்கான நிதி ஒதுக்கீட்டில் 10 இலட்சம் ரூபா பெறுமதியான உதவித்திட்டங்களை முன்பள்ளிச் சமூகத்தினருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் கையளித்தார்.



இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நிகழ்வில் யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ.ஆனல்ட்டும் விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

அவருடன் மாநகரசபை உறுப்பினர்கள், முன்பள்ளித் தலைமை ஆசிரியர், பொறுப்பாசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர் என்று முதல்வரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதியோர், சிறுவர் தின நிகழ்வுகள்

# மாணவருக்கான சிறந்த கல்வி அபிவிருத்திக்கு வித்திடுகின்றது

## வவுனியா மாவட்டச் செயலர் தெரிவிப்பு

வவுனியா, ஒக். 4

சிறந்த கல்வியானது, ஆளிடைத்தொடர்பு, தன்னம்பிக்கை மற்றும் சமூகத்தின் அபிவிருத்திக்கு வித்திடும் என்று வவுனியா மாவட்டச் செயலர் ஐ.எம். கனீபா தெரிவித்தார்.

பன்னாட்டுச் சிறுவர்தினம் வவுனியா மாவட்டச்செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அரசு 'பிள்ளைகளின் வெற்றிக்கான நட்பான நாடு' எனும் தொனிப்பொருளில் பன்னாட்டு சிறுவர் தினத்தை கொண்டாடுகின்றது. கல்வியில் சிறந்த தராதரத்தைப் பெறுவதென்பது மாணவர்களை சிறப்பான மாணவனாக உருவாக்குவது மட்டுமன்றி வெளி உலகுக்கும் வெளிப்படுத்துகின்றது. ஆளுமை விருத்தி, வேலை வாய்ப்புக்கள், ஆளிடைத்தொடர்பு, தன்னம்பிக்கை மற்றும் சமூக அபிவிருத்தியை உருவாக்குகின்றது.

எமது புலங்களில் இன்று சிறுவர்களின் வாழ்வில் பல துன்பகரமான நிகழ்வுகள் அரங்கேறிகொண்டிருக்கின்றன. எனவே இந்த நிலமைகளை மாற்றியமைப்பதற்காக பிள்ளைகளை ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்புதல், அறநெறி வகுப்புக்கு அனுப்புதல், அவர்கள் மீது அன்பு செலுத்துதல், மது அருந்தி விட்டு பிள்ளைகளைத் துன்புறுத்துவதைத் தவிர்த்தல், பிள்ளைகளை விட்டு தாய் வெளிநாடு செல்வதை தவிர்ப்பதன் ஊடாக ஒளிமயமான நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் முன்வரவேண்டும். கல்வி கற்பதானது முழு உலகத்துக்குமான வாசலைத் திறந்துவிடுகின்றது. வாழ்க்கைப் பயணத்தின் முதற்படியாகவும் அது உள்ளது. எமது நாட்டின் சிறந்த வாழ்வுக்கு கல்வி முக்கிய பாதையாக விளங்குகின்றது. நீங்கள் பெறுகின்ற சிறந்த கல்வி அறிவு நாளைய சிறுவர் உலகுக்கான சிறந்த முதலீடாகும்- என்றார். (த-110)





அளவெட்டி, சைவ வாலிப சங்க ஏற்பாட்டில் பன்னாட்டுமுதியோர்தினநிகழ்வு, அளகொல்லை விநாயகர் பொதுநோக்கு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் தலைவர் நாகேந்திரம் தலைமையில் நடைபெற்றது. (ஐ-36)

* * * *


சாவகச்சேரி, ஒக். 4

பன்னாட்டு முதியோர் தினத்தை முன்னிட்டு முதியோர்களுக்கான மருத்துவ முகாமை தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளையினர் கடந்த செவ்வாய்க்கிழமை வங்கிக் கட்டடத்தில் நடத்தினர்.

வங்கிக் கிளை முகாமையாளர் அ.கெங்காதரம் தலைமையில் நடைபெற்ற மருத்துவ முகாமில் மருத்துவர் சு.சி.அருளானந்தம் பரிசோதனைகளை மேற்கொண்டு மருந்துகளை வழங்கினார். (ஐ-9)



* * * *



கொடிகாமம், ஒக். 4

யாழ்ப்பாணம், கல்வயல் சிறி சண்முகானந்தா வித்தியாலயத்தில் சிறுவர் தின நிகழ்வு கடந்த செய்வாய்க்கிழமை அதிபர் க.மகிந்தன் தலைமையில் நடைபெற்றது

மாணவர்கள் பலூன்களை பறக்கவிட்டு விளையாடி மகிழ்ந்ததுடன், ஆடல்-பாடல் நிகழ்வுகளும் இடம்பெற்றன. நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். (ஐ-159)





கொடிகாமம் ஒக் 4

பன்னாட்டு முதியோர் வார நிகழ்வுகள் கடந்த செவ்வாய்க்கிழமை கைதடி அரச முதியோர் இல்ல திறந்த வெளி அரங்கில் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

தொடர்ந்து 7 ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறவுள்ளது.

முதல்நாள்நிகழ்வு வடக்குமாகாண சமூக சேவைகள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாக 552 ஆவது பிரிவின் தளபதி பிரிகேடியர் சேனா வடுகே, வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் மூத்த உதவிச் செயலர் திருமதி நளாயினி இன்பராஜ், யாழ்ப்பாணம் பிரதேச செயலக சமூக சேவை அலுவலர் வி.சுரேஸ் குமார், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக சமூகசேவை அலுவலர் சு.ஜெயானந்தராசா, நாவற்குழி மகாவித்தியாலய அதிபர் சி.பவளகுமாரன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

தொழிற்றுறை திணைக்களம், கிராம அபிவிருத்தி திணைக்களம், சித்த மருத்துவத் துறையின் சித்த மருத்துவ மூலிகைகள், யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தினுடைய உற்பத்தி பொருள்களின் கண்காட்சி கூடமும் திறந்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து ஏழு நாள்களும் கண்காட்சி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-159)



வடமராட்சி, புலோலி குரும்பைகட்டி முன்பள்ளியில் சிறுவர்தின நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட நெல்லியடி முக்கியமகா வித்தியாலய ஓய்வுநிலை பிரதி அதிபர் அ. அரியரட்ணம் மற்றும் முன்பள்ளி ஆசிரியர் ஆகியோர் சிறார்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்தனர். (ஐ-173)

* * * *

கொடிகாமம் ஒக். 4

பன்னாட்டு முதியோர் வார நிகழ்வுகள் கைதடி அரச முதியோர் இல்ல திறந்த வெளி அரங்கில் கடந்த முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

தொடர்ந்து 7 ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறவுள்ளது.

நான்காம் நாள் நிகழ்வாக இன்று வெள்ளிக்கிழமை சமூகத்தில் மூத்தோருக்கு சேவை செய்தவர்களையும், அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களையும் மதிப்பளிக்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ஐ-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை எதிர்கொள்ள மன்னார் தயாராகவுள்ளது

## மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்

மன்னார், ஒக். 4

அரசதலைவர் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் 89ஆயிரத்து 403 வாக்காளர்களுடன் எழுபத்தாறு வாக்களிப்பு நிலையங்கள் எட்டு வாக்கு எண்ணும் நிலையங்களுடன் தேர்தலைச் சந்திக்கத் தயாராக உள்ளேன் என்று மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஜெ.ஜெனிஸ்ரன் தெரிவித்தார்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள அரசதலைவர் தொடர்பான ஒழுங்கமைப்புகள் எவ்வாறு உள்ளன என்று கேட்டபோதே அவர் மேலும் தெரிவித்ததாவது:

2018ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பட்டியலின்படி மேற்குறித்த எண்ணிக்கையில் வாக்காளர்கள் உள்ளனர்.

தபால் மூலம் வாக்களிப்பவர்களின் விண்ணப்பங்கள் தற்பொழுதும் பெறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தபால் மூல வாக்களிப்புகள் யாவும் வன்னி மாவட்டம் என்றபடியால் மன்னார் மாவட்டத்துக்குரிய தபால் மூல வாக்குகளையும் வவுனியாவில் எண்ணுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் நாள்களில் நடைபெறும் குற்றச் செயல்களை தடுப்பதற்காகவும் விசாரணை செய்யவும் தேர்தல் முறைப்பாட்டுப்பிரிவு ஒன்று மன்னார் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 023 222 3710 என்ற இலக்கமே இது. இந்த இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும்.

ஊடகவியலாளர்கள் பிரதேச சபையினரின் ஒத்துழைப்பை தேர்தல்காலங்களில் பெற்றுக் கொள்வதற்காக அவர் களுடன் விரைவில் ஒரு கலந்துரையாடல் மேற்கொள்ளப்படவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-213)

## தவிசாளருக்கு எதிராக தனியொருவர் கவனவீர்ப்பு

வவுனியா, ஒக். 4

வவுனியாதெற்கு, தமிழ் பிரதேச சபைத் தவிசாளர் தன்னிச்சையாகச் செயற்படுகிறார் என்று குற்றஞ்சாட்டி, வவுனியா பிரதேச செயலகத்துக்கு முன்பாக ஒருவர் கவனவீர்ப்பில் ஈடுபட்டார்.

வவுனியா மதவு வைத்த குளம் சனசமூக நிலைய உபதலைவரே கவனவீர்ப்பில் ஈடுபட்டார்.

"மதவுவைத்தகுளம் பகுதி மக்களுக்கு சில வருடங்களாக தண்ணீர் விநியோகம் செய்கின்றேன். வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைத் தவிசாளர் என் மீது பொய்க்காரணங்களை முன்வைத்து தண்ணீர் விநியோக பணியிலிருந்து நீக்குவதற்காக, தண்ணீர் விநியோக கட்டடத்தின் சாவியை வேறொருவருக்கு வழங்கியுள்ளார். தவிசாளரின் தன்னிச்சையான முடிவுக்குத் தீர்வு வேண்டும்" என்று தெரிவித்தார்.

எனினும், இவருடைய போராட்டம் நியாய மற்றது என்றும்- பிரதேச சபைத் தவிசாளர் மக்கள் சார்பாகவே முடிவெடுக்கிறார் என்றும்- அந்தக் கிராம சனசமூக நிலையத்தினர் மற்றும் பொது மக்கள் கூட்டாக தெரிவித்தனர். அங்கு ஒன்று கூடிய மக்கள் கவனவீர்ப்பில் ஈடுபட்டவருக்கு எதிராக கருத்துக்களைத் தெரிவித்தனர்.

"சில நாள்களாக பொது மக்களுக்குத் தண்ணீர் விநியோகம் செய்யாது விநியோகக்கட்ட சாவியை குறித்த நபர் வவுனியா நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக் காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். தண்ணீர் வழங்கும் திட்டம் எமது பிரதேச சபைக்குச் சொந்தமானது. தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடம் சாவியைப் பெற்று, சனசமூக நிர்வாகத்திடம் வழங்கி மக்களுக்கான தண்ணீர் விநியோகத்தை மேற்கொள்ளுமாறு பணித்தேன்" என்று வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைத் தவிசாளர் து.நடரா ஜசிங்கம் தெரிவித்தார்.

கவனவீர்ப்பு நடத்தியவர் இரண்டு மணித்தியாலங்களில் அந்த இடத்திலிருந்து சென்றுவிட்டார். (த-110)

## தவிசாளர் தாக்கியமை தவறு சில உறுப்பினர்கள் வருத்தம்

கிளிநொச்சி, ஒக். 4

முல்லைத்தீவு, முறிகண்டியில் பொதுமகன் மீது புதுக்குடியிருப்புப் பிரதேச சபைத் தவிசாளர் தாக்குதல் நடத்தியமை தவறானது என்று பிரதேச சபை உறுப்பினர்கள் குடும்பத்தினரிடம் வருத்தம் தெரிவித்தனர்.

முறிகண்டியிலுள்ள குறித்த நபரின் வீட்டுக்குச் சென்ற உறுப்பினர்கள் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் மற்றும் தவிசாளரால் தாக்கப்பட்ட நபரையும் சந்தித்து விடயங்களைக் கேட்டறிந்தனர். இதன்போது குறித்த சம்பவம் தொடர்பில் பலரும் தம்மை கேள்வி எழுப்பினர் என்றும்- இந்த விடயம் தொடர்பில் வருத்தம் தெரிவிக்கின்றோம் என்றும் உறுப்பினர்கள் குடும்பத்தினரிடம் தெரிவித்தனர்.

தவிசாளர் கடந்த வெள்ளிக்கிழமை குறித்த பகுதியில் பொதுமகன் ஒருவரை தாக்கினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதுபற்றி பல்வேறு விமர்சனங்களும் தவிசாளர் பிறேமகாந் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) மீது முன்வைக்கப்பட்டது. இந்த நிலையில் சபை உறுப்பினர்கள் சிலர் பாதிக்கப்பட்ட தரப்பினரை நேரில் சந்தித்து விடயங்களை கேட்டறிந்தனர். அந்தப் பகுதி பொது அமைப்புக்களையும் சந்தித்துக் கலந்துரையாடினர். சந்திப்புத் தொடர்பில் ஊடகங்களுக்கு உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

"இந்தவிடயம் தொடர்பில் எதிர்வரும் 10ஆம் திகதி இடம்பெறவுள்ள சபை அமர்வின்போது பேசப்படும். குறித்த குடும்பம் ஏற்கனவே போர் மற்றும் ஏனைய செயற்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளது. பிரதேச சபைத் தவிசாளர் இவ்வாறு நடந்து கொண்டமை கவலை அளிக்கின்றது என்று பொது மக்கள் தெரிவிக்கின்றனர். பிரதேச சபைகளுக்கென்று வழங்கப்பட்ட கொஞ்ச அதிகாரங்களைக் கொண்டு மக்களைப் பாதிப்படையச் செய்யும் வகையில் நடந்து கொள்வது பொருத்தமற்றது என்றும் மக்கள் தெரிவித்தனர்." என்று உறுப்பினர்கள் தெரிவித்தனர். (த-6)

## கவிஞர் வரோதயனின் ஆண்டு நினைவும், சிறப்பிதழ் அறிமுகமும்

யாழ்ப்பாணம், ஒக். 4

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் கவிஞர் மாவை வரோதயனின் 10ஆவது ஆண்டு நினைவும் தாயகம் சிறப்பிதழ் அறிமுக நிகழ்வும் நாளை நடைபெறவுள்ளன. யாழ்ப்பாணம் கொக்குவிலில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளன. தேசிய கலை இலக்கியப் பேரவைத் தலைவரும், தாயகம் சஞ்சிகையின் முதன்மை ஆசிரியருமான க. தணிகாசலம் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில், தாயகம் சஞ்சிகைக்கான அறிமுக உரையை எழுத்தாளர் இயல்வாணன் நிகழ்த்துவார்.

"கீழடி அகழ்வாய்வும் தமிழர் நாகரிகத்தின் தொன்மையும்" என்ற தலைப்பில் நினைவுப் பேருரையை ஆய்வாளர் ச. சத்தியதேவன் ஆற்றவுள்ளார். இவ் உரைகளைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

## பாடசாலை நிகழ்வுகள்



### கற்றல் உபகரண கண்காட்சி

கொடிகாமம், ஒக். 4

யாழ்ப்பாணம் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தின் கற்றல் உபகரணக் கண்காட்சி நேற்றுமுன்தினம் பாடசாலை மண்டபத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெற்றது. அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய தமிழ்ப்பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் து.ஜெயதேவன், சிறப்பு விருந்தினராக உசன் இராமநாதன் மகா வித்தியாலய அதிபர் க.சண்முகதாஸ், மதிப்புறு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ. மயூரன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-159)

✦ ✦ ✦ ✦ ✦

### சமூக வலைத்தளப் பாவனை தெளிவுபடுத்தும் கருத்தமர்வு




மன்னார், ஒக். 4

பாடசாலை மாணவர்கள் மத்தியில் சமூக வலைத்தளப் பாவனை மற்றும் உள ஆரோக்கியம் தொடர்பான முரண்பாடுகளைத் தெளிவுபடுத்தும் சிறப்பு விழிப்புணர்வுக் கருத்தமர்வு மன்னார் லூசியா மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில் மாணவர்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தும் போது கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் மற்றும் வீடுகளிலும் எதிர்கொள்ளும் உள ரீதியான பிரச்சினைகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன் போதை பொருள் பாவனை மற்றும் நல்லிணக்கத்தைச் சீர் குலைக்கும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களால் நாடகங்கள் மற்றும் பேச்சுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டன. மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் கருத்தமர்வு நடைபெற்றது. (க-56)

✦ ✦ ✦ ✦ ✦

### கல்விக் கண்காட்சி பூநகரியில் நடந்தது

கிளிநொச்சி, ஒக். 4

பூநகரி நல்லூர் மகா வித்தியாலய கல்விக் கண்காட்சி ஆசிரியர்கள் மாணவர்களின் செயற்பாட்டில் சிறுவர் தினத்தை மகிமைப்படுத்தும் வகையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

முதன்மை விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராயன் மற்றும் பூநகரிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.உதயணன், திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அருந்தவச்செல்வம், கரைச்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.தர்மரத்தினம், அயற் பாடசாலை அதிபர்கள், பூநகரி வாலிபர் முன்னேற்றக்கழக உறுப்பினர்கள் கலந்து சிறப்பித்தனர். (சு-222)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் III அதிபர் தெரிவில் அரசு துரோகமிழைப்பு

## அங்கஜன் எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 4
தரம் III அதிபர் சேவை நியமனத்துக்கு கல்வி அமைச்சு நாடு முழுவதும் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் நேர்மு கத் தேர்வுக்கு தோற்றியோரில், 1,858 பேருக்கான நியமன ஏற்பாடுகளில் கல்விச் சமூகம் ஓரங்கட்டப்பட்ட துர்ப்பாக்கிய நிலை நல்லாட்சியை நிலை நிறுத்துபவர்களால் ஏற்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

சிறந்த மாணவ சமுதாயத்தை உருவாக்கும் தமிழ் மொழி மூல ஆசிரியர்களுக்கான நியமன தெரிவில் புறக்கணிப்புக்கள் காணப்படுகின்றன. இன விகிதாசாரம் பேணப்படவில்லை.

35 சத வீதத்துக்கும் மேற்பட்ட தமிழ்மொழி மூல பாடசாலைகளில் சுமார் 1000 க்கும் மேற்பட்ட அதிபர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

தமிழ் மொழிப் பரீட்சார்த்திகள் 167 பேரே நியம னத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கல்வி அமைச்சின் இவ்வாறான நியமனங்களில் தெரிவு புறக்கணிப்புக்கள் காரணமாக 300 க்கும் மேற்பட்ட தமிழ்மொழி மூல ஆசிரியர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

உயர் கல்வி தகைமை மற்றும் உயர் தொழில் தகைமைகளையும் கொண்டிருப்பதோடு, ஐம்பது வயதை அண்மித்தவர்களும் உள்ளடங்குகின்றனர். இந்த விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

கல்வி அமைச்சு அதிபர் சேவை நியமனங்களை அவசரமாக வழங்குவது தொடர்பாகவும், தவறான வழிமுறைகள் மற்றும் தமிழ்மொழி மூல மாணவர்களின் புறக்கணிப்புக்களை தேர்தல் ஆணையாளருக்கும் கடிதம் மூலம் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (து)



## செயலாற்று முகாமையாளர் வவுனியாவில் கடமையேற்பு

வவுனியா, ஒக். 4
வவுனியா சாலைக்கு இ.போ.ச. வடபிராந்திய செயலாற்று முகாமையாளராக நியமிக்கப்பட்ட ஏ. ஜெயதரன் லெம்பேட் நேற்றுக் கடமைகளை ஏற்றார். அவருக்கு சாலை ஊழியர்கள் வரவேற்பளித்தனர்.

இதன்போது வவுனியா சாலையில் காணப்படும் ஓய்வு விடுதி, வேலைப் பகுதி, தொழில்நுட்ப வசதிகள் போன்ற குறைபாடு களை மிக விரைவில் சீர்செய்வதாகவும் மேலதிகமாகத் தேவைப்படும் உதவிகளை கோருமிடத்தில் அதனையும் உடனடியாக தலைமை அலுவலகத்தின் உதவியுடன் சாலைக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய உடன் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார். (து)

## கிளிநொச்சி மாவட்டத்தில் சிறந்த விவசாயிகள் மதிப்பளிக்கப்படுவர்

### மாகாணப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 4
கிளிநொச்சி மாவட்டத்தில் சிறப்பாகச் செயற்பட்ட வீட்டுத்தோட்டச் செய்கையாளர்கள், சேதனச் செய்கையாளர்கள், சிறந்த விவசாய நடைமுறைகளைப் பின்பற்றிய விவசாயிகள் மதிப்பளிக்கப்படவுள்ளனர் .

இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் அறிவித்துள்ளார்.

வருடம் தோறும் நடைபெற்றுவரும் மாவட்டத்தில் சிறப்பாகச் செயற்பட்ட விவசாயிகளே மதிப்பளிக்கப்படவுள்ளனர்.

செய்கையாளர்களிடையே போட்டி மூலமான ஊக்குவிப்பை ஏற்படுத்தி, சூழலுக்கு இசைவான தொழில்நுட்பத்தை விவசாயிகளிடையே பரவச் செய்து உற்பத்தித் திறனை அதிகரிப்பதுடன் நஞ்சற்ற உற்பத்திகளை ஊக்குவிக்கும் முகமாக இவ்வாறான மதிப்பளிப்பு ஏற்பாடு செய்யப்படுகின்றது.


மாவட்டத்தில் சொட்டு நீர்ப்பாசனத்தின் கீழ் சிறந்த வாழைச் செய்கையாளர்களும், சிறந்த தேனீ வளர்ப்பாளர்களும், சிறந்த வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களும், சிறந்த சேதனச் செய்கையாளர்களும் என நான்கு வகுதிகளின் அடிப்படையில் தெரிவுகள் நடைபெறவுள்ளன.

பங்குகொள்ள விரும்பும் போட்டியாளர்கள் தங்கள் பிரதேச விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்தில் போட்டிக்கான விண்ணப்பத்தைப் பெற்று, முழுமைப்படுத்தி கடித உறையின் இடது புற மேற்பக்கத்தில் 'சிறந்த விவசாயிகள் தெரிவு 2019" எனக் குறிப்பிட்டு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் விவசாயத் திணைக்களம் ஏ-9 வீதி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். அல்லது தங்கள் விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்தில் நேரடியாகவும் சென்று கையளிக்கலாம்.

ஏனைய போட்டியாளர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கும் வகையில் கடந்த காலங்களில் மாவட்ட மட்டத்தில் மதிப்பளிக்கப்பட்டவர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது என்பதையும் கவனத்தில் கொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார். (து-7)



## டெங்கு பெருகுகின்றதா? வவுனியாவில் சோதனை



வவுனியா, ஒக். 4
வவுனியா நகர்ப்பகுதிகளிலுள்ள உணவகங்கள், வியாபார நிலையங்களில் டெங்கு நுளம்பு பெருகுகின்றதா என்று பரிசோதனை நடத்தப்பட்டது.

வவுனியா முதலாம் குறுக்குத்தெரு, இரண்டாம் குறுக்குத்தெரு உட்பட பல இடங்களிலுள்ள வியாபார நிலையங்களில் நேற்றுக் காலை தொடக்கம் டெங்கு நுளம்பு கட்டுப்படுத்தும் பரிசோதனை நடவடிக்கை சுகாதாரப் பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வியாபார நிலையங்களின் பின்புறமாக, கூரைகளில் காணப்பட்ட வெற்று மதுபானப் போத்தல்கள், பியர் ரின்கள் என்பனவும் கண்டறியப்பட்டன.

நிலமைகளுக்கு ஏற்ப மஞ்சள் மற்றும் சிவப்புத் துண்டறிக்கைகள் வியாபார நிலையங்களில் ஒட்டப்பட்டுள்ளன.

டெங்கு நுளம்பு பெருகும் வியாபார நிலையங்களுக்கு எதிராக சுத்தப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. (து)

## துர்நடத்தையில் ஈடுபட்டாரென சந்தேகநபர் தேடப்படுகிறார்

வவுனியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 15 வயதுச் சிறுமியை பாலியல் துர்நடத்தையில் ஈடுபட்டிருக்கலாம் என்று குற்றஞ்சாட்டப்படும் நபர் தலைமறைவாகியுள்ளார் என்றும் அவர் தேடப்படுகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அங்கு மேசன் வேலை செய்யும் நபர்மீதே இவ்வாறு சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக சிதம்பரபுரம் பொலிஸ் நிலையத்திலும் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (து-110)



## ஈருருளி கையளிப்பு

வவுனியா, ஒக். 4
வவுனியா, நெடுங்கேணி மகா வித்தியாலயத்தில் க.பொ.த. உயர்தரத்தில் கல்வி கற்றுவரும் மாணவி ப.தசோபிகாவுக்கு ஈருருளி ஒன்று வழங்கி வைக்கப்பட்டது. கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக ஜேர்மன் நாட்டில் வசித்து வரும் செ.உதயராஜ் தனது பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று இந்த உதவியை வழங்கியுள்ளார். (ஐ-222)

# தமிழர் வசிக்கும் பகுதியில் விகாரை அமைக்கும் பணி

## தடுத்து நிறுத்துமாறு செயலரிடம் கோரிக்கை

வவுனியா, ஒக். 4
வவுனியா வடக்கில் தமிழ் மக்களின் பூர்வீக கிராமமான கச்சல் சமணங்குளம் பகுதியில் விகாரை அமைக்கும் பணி இடம்பெற்றுவருகிறது. அந்தப் பகுதியில் வசிக்காதவர்கள் புதிதாக கட்டடங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. இது எதிர்காலத்தில் இன ஒற்றுமைக்கு ஊறுவிளைவிக்கும் செயற்பாடாக இருக்கிறது. இதைத்தடுத்து நிறுத்துமாறு மாவட்டச் செயலரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட உண்மை மற்றும் நல்லிணக்க மன்றம் மாவட்டச் செயலர் எம். கனிபாவுடன் நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் நடத்தியது. இதில் இந்த விடயத்தை எடுத்துக்கூறியுள்ளது. வவுனியாவில் நுண் நிதி நிறுவனங்களின் செயற்பாட்டால் பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தனர். கச்சல் சமணங்குளம் தொடர்பாக ஆராய்கிறேன் என்று தெரிவித்திருந்தார். (து-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவாளர் தினம் கிளிநொச்சியில் நடந்தது

கிளிநொச்சி, ஒக். 4

97 ஆவது பன்னாட்டுக் கூட்டுறவாளர் தினம் கிளிநொச்சி கூட்டுறவுச் சங்கங்களின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றது.



முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமான இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் தலைமை அதிதியாக கலந்து கொண்டார். பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும் அதன் அங்கத்துவ சங்கங்களும் இணைந்து கடல்சார் கண்காட்சியும், மாதிரி விற்பனை நிலையத்தையும் மாவட்டச் செயலர் திறந்துவைத்தார்.

தொடர்ந்து முதன்மை கூட்டுறவாளர் இராசநாயகம் மண்டபத்தின் பெயர்ப் பலகை மாவட்டச் செயலர் திறந்து வைத்தார்.

தொடர்ந்து கூட்டுறவாளர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்கள் மற்றும் அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (த-6)



## நீரிழிவை இனங்காணும் இலவச குருதிச் சோதனை

கொடிகாமம், ஒக். 4

நீரிழிவு நோயாளர்களை இனங்காணும் இலவச குருதிப் பரிசோதனை கடந்த திங்கட்கிழமை மந்துவில் கிழக்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் காலை 9 மணியளவில் இடம்பெற்றது. சமூக சித்த வைத்தியர் திருமதி றஜிதா கனகசுந்தரத்தின் ஏற்பாட்டில் இந்த பரிசோதனை நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் நீரிழிவு நோயாளர்கள் உண்ணக் கூடிய மற்றும் தவிர்க்கக் கூடிய உணவுகள் தொடர்பான அறிவுரையும், கையேடுகளும் வழங்கப்பட்டன.

இதன்போது வல்லாரை, கரிசலாங்கண்ணி போன்ற மூலிகை மரக்கன்றுகளும் இலவசமாக வழங்கப்பட்டன.

பரிசோதனையின் போது 4 நீரிழிவு நோயாளர்கள் இனங்காணப்பட்டு கொடிகாமம் கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலையில் நீரிழிவு நோய்க்கான சிகிச்சை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. (ஐ-159)



## அகிம்சையைப் போதிக்க துணையாக இருப்போம்

### துணைத்தூதரக பதில் கொன்சியூலர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக். 4

மகாத்மா காந்தியின் அகிம்சையைப் போதிப்பதற்கு இந்தியத் தூதரகம் என்றும் துணையாக இருக்கும் என்று யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரக பதில் கொன்சியூலர் ஆர்.பக்ர்ா தெரிவித்தார்.

கிளிநொச்சியில் காந்தி பிறந்ததின நிகழ்வை அகில இலங்கை காந்தி சேவா சங்கமும் கிளிநொச்சி காந்தி சிறுவர் இல்லமும் இணைந்து நேற்றுமுன்தினம் நடத்தினர். கிளிநொச்சி, உருத்திரபுரம் பகுதியில் அமைந்துள்ள காந்தி சிறுவர் இல்ல வளாகத்தில் குறித்த நிகழ்வு நடைபெற்றது.

பாடசாலை மாணவர்களின் பாண்ட் அணிவகுப்புடன் விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டனர். தொடர்ந்து கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

நிகழ்வில் கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் அ.வேழமாலிகிதன், மதுரை காந்தி மியூசியத்தைச் சேர்ந்த மு.சீ.தேவதாஸ் காந்தி, சிறுவர் நன்னடத்தை அலுவலர் சு.விஜியகுமாரி உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் இந்த மாதத்துக்கான காந்தீயம் சஞ்சிகை வெளியிடப்பட்டது. காந்தி பிறந்த தின போட்டியில் பங்குபற்றிய பாடசாலை மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. மதுரை காந்தி மியூசியத்திலிருந்து இலங்கைக்கு வருகை தந்து காந்தியின் அகிம்சையைப் போதிக்கும் மு.சீ.தேவதாஸ் காந்தி மதிப்பளிக்கப்பட்டார். (த-6)


## மக்களும் கிராம அலுவலரும் காணி தொடர்பில் முறுகல்நிலை

வவுனியா, ஒக். 4

வவுனியாவில் காணிப் பிரச்சினை காரணமாக மக்களுக்கும் கிராம அலுவலருக்குமிடையே நேற்று முரண்பாடு ஏற்பட்டுள்ளது. அதனால் சிறிது நேரம் அங்கு தர்க்கம் நிலவியது. பின்னர் ஒரு வாரத்தில் தீர்வுதருவதாக கிராம அலுவலர் கூறியதையடுத்து தர்க்கம் முடிவுக்கு வந்தது.

வவுனியா சோபாலபுளியங்குளம் கிராமத்தில் நிரந்தரமாக வசித்துவந்த மக்கள் தமது கிராமத்தை அண்மித்துள்ள அரசகாணியை விவசாயம் செய்வதற்கு வழங்குமாறு பலவருடங்களாக போராடி வந்தனர். அதற்குத் தீர்வு கிடைக்காதநிலையில் கிராமமக்கள் ஒன்றிணைந்து குறித்த அரசகாணியை விவசாயத்துக்கு பயன்படுத்துவதற்காக உழவு இயந்திரத்தின் மூலம் வரம்பு அமைத்து பகிர்ந்துகொள்வதற்கான முயற்சியில் நேற்றுமுன்தினம் ஈடுபட்டனர். இதன்போது குறித்த காணி முஸ்லிம் நபர்களுடையது என்று உரிமைகோரி மூன்று பேர் அங்கு வந்து காணி அபிவிருத்தி வேலைகளை நிறுத்துமாறு கூறி, கிராம மக்களுடன் முரண்பட்டனர். அதனைத் தொடர்ந்தும் காணி அபிவிருத்தி வேலைகளில் மக்கள் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது கிராமஅலுவலர் சம்பவ இடத்துக்கு வந்து காணி அபிவிருத்தி வேலைகளை நிறுத்துமாறு கூறினார். அதனால் கிராம மக்களுக்கும் கிராம அலுவலருக்குமிடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டு சற்றுநேரம் குழப்பநிலை ஏற்பட்டது.

இறுதியில் குறித்த காணிப் பிரச்சினைக்கு ஒரு வாரத்தில் தீர்வு வழங்குவதாக உறுதியளித்ததைத் தொடர்ந்து காணி அபிவிருத்தி வேலைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன. (த-110)



*விதி முறைகளை மீறி பயணிகளை ஏற்றிய*

## பேருந்து சாரதிக்கு 1500 ரூபா தண்டம்

தலைமன்னார், ஒக். 4

பேருந்தில் விதி முறைகளை மீறி பயணிகளை ஏற்றிச் சென்ற சாரதிக்கு ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்தது மன்னார் நீதிமன்று.

குறித்த குற்றச்சாட்டில் மன்னார் பொலிஸார், மன்னார் நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். சாரதி குற்றத்தை ஏற்றுக் கொண்டார். அதனையடுத்துத் தண்டம் விதிக்கப்பட்டது.

இதுதவிர, டெங்கு நோய் பரவும் வகையில் தெருவில் குப்பைகள் கொட்டினார் என்று குற்றஞ்சாட்டி பெண் ஒருவருக்கு எதிராக மன்னார் பொலிஸார் மன்னார் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் வழக்குத் தொடர்ந்தனர். அவர் சார்பில் முற்பட்ட சட்டத்தரணியின் வாதத்தைத் தொடர்ந்து அந்தப் பெண் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார். (த-60)

### பெரும் போக நெற்செய்கை தொடர்பான கூட்டங்கள்

சாவகச்சேரி கமநல சேவைகள்நிலையத்துக் குட்பட்ட கமக்கார அமைப்புகளுக்கான 2019/2020 பெரும் போக நெற்செய்கை தொடர்பான கூட்டங்கள் இடம்பெறவுள்ளன. குறித்த நெற்செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கான உரமானிய பதிவுகளும், காலபோகம் தொடர்பான கூட்டங்களும் நடைபெறவுள்ளன.

இன்று வெள்ளிக்கிழமை வரணி, இயற்றாலை பிரிவுக்கு காலை 9 மணிக்கு கலைவாணி சனசமூக நிலையத்திலும், தாவளை, இயற்றாலை பிரிவுக்கு முற்பகல் 10 மணிக்கு பொது நோக்கு மண்டபத்திலும், பாலாவி மற்றும் கச்சாய் பிரிவுகளுக்கு பிற்பகல் 2 மணிக்கு கச்சாய் அம்மன் கோவில் சனசமூக நிலையத்தி லும் நடைபெறும்.

எதிர்வரும் 7 ஆம் திகதி குடமியன் பிரிவுக்கு காலை 9 மணிக்கு பொது நோக்கு மண்டபத்திலும், நாவற்காடு பிரிவுக்கு முற்பகல் 10 மணிக்கு பொது நோக்கு மண்டபத்திலும், நுணாவில் கிழக்கு பிரிவுக்கு முற்பகல் 11 மணிக்கு நுணாவில் கிழக்கு சனசமூக நிலையத்திலும் நடைபெறும்.

8 ஆம் திகதி எழுதுமட்டுவாழ் வடக்கு பிரிவுக்கு காலை 9 மணிக்கு மருதங்குளம் பொது நோக்கு மண்டபத்திலும், கரம்பகம் பிரிவுக்கு முற்பகல் 10 மணிக்கு பொது நோக்கு மண்டபத்திலும், மீசாலை வடக்கு பிரிவுக்கு பிற்பகல் 2 மணிக்கு சுடர்ஒளி சனசமூக நிலையத்திலும் நடைபெறும்.

9ஆம்திகதிஉசன்பிரிவுக்கு காலை 9 மணிக்கு பொது நோக்கு மண்டபத்திலும், விடத்தற்பளை பிரிவுக்கு முற்பகல் 10 மணிக்கு கிராம அபிவிருத்திசுட்டடத்திலும், நுணாவில் மத்தி பிரிவுக்கு முற்பகல் 11 மணிக்கு பொது நோக்கு மண்டபத்திலும் நடைபெறும். 10 ஆம் திகதி சாவகச்சேரி நகர் பிரிவுக்கு காலை 9 மணிக்கு சாவகச்சேரி சனச்மூக நிலையத்திலும், கெற்பேலி பிரிவுக்கு முற்பகல் 10 மணிக்கு கிராம அபிவிருத்தி கட்டடத்திலும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரிபாலவுடன் சஜித் நாட்டு நிலவரம் பேசினார்

*தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு*

கொழும்பு, ஒக்.4

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐ.தே.க. குழுவினர் நாட்டின் தற்போதைய அரசியல் நிலவரங்கள் குறித்தே கலந்துரையாடினர் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை நேற்றுமுன்தினம் இரவு 9.45 மணியளவில் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐ.தே.க. குழுவினர் சந்தித்தனர். சுமார் ஒரு மணி நேரம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. அதில் தயாசிறி ஜயசேகர, மகிந்த அமரவீர, லசந்த அழகியவன்ன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்புக் குறித்து கருத்து வெளியிட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலர் தயாசிறி ஜயசேகர, நாட்டின் தற்போதைய அரசியல் நிலவரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது என்று மாத்திரம் தெரிவித்தார். மேலதிக விவரங்களை வெளியிட அவர் மறுத்துள்ளார்.

அதேவேளை, சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் வீரகுமார திசநாயக்க, எந்த விவகாரம் குறித்தும் எந்த அரசியல் கட்சியுடனும் பேசுவதற்கு சுதந்திரக் கட்சி தயாராக இருக்கிறது என்றும்- ஐ.தே.க. பொதுச் செயலரின் கோரிக்கைக்கு அமையவே சஜித் பிரேமதாசவை சந்தித்தார் என்றும் தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு உள்ளிட்ட நடப்பு விவகாரங்கள் குறித்தே இதன்போது கலந்துரையாடப்பட்டது. ஐ.தே.க. சுதந்திரக் கட்சி கூட்டணிக்கான வாய்ப்புகளையும் அவர் நிராகரிக்க மறுத்து விட்டார். (எ)

# சஜித் பிரேமதாசவுக்கு மு.காங்கிரஸ் ஆதரவு

கொழும்பு, ஒக்.4

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது முழுமையான ஆதரவை ஐக்கிய தேசியக் கட்சி அரச தலைவர் வேட்பாளரான சஜித் பிரேமதாசவுக்கு வழங்குவதை உறுதிப்படுத்தியுள்ளது. வடக்கு -கிழக்கு முஸ்லிம் பிரச்சினைகள் தொடர்பாகவும் போர்க் காலத்தில் வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களை மீண்டும் குடியமர்த்த வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கைகளை முன்வைத் துள்ளனர்.

ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளி கட்சிகள் தனித் தனியே தமது ஆதரவை ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு வழங்குகின்றனர். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும் தமது முழுமையான ஆதரவை சஜித் பிரேமதாச வுக்கு வழங்குவதை உறுதிப்படுத்தினர்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவுடனான சந்திப்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். சுமார் ஒன்றரை மணி நேரமாக இரு தரப்பினரும் கலந்துரையாடினர்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அவர்களின் கோரிக்கைகள் குறித்தும் அதில் கலந்துரையாடப்பட்டது. படையினர் நிலைகொண்டுள்ள மற்றும் வனபரிபாலன திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவிப்பது தொடர்பாகவும், போர்க் காலத்தில் வெளியேற்றப்பட்டு இடம்பெயர்ந்து வாழும் வடமாகாண முஸ்லிம்களின் நிலைமை குறித்தும், அவர்களை உரிய இடங்களில் மீண்டும் குடியேற்றுவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.


புத்தளத்தில் உக்கிரமடைந்துள்ள அறுவைக்காடு குப்பைப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் இங்கு எடுத்துரைக்கப்பட்டது. முஸ்லிம்களுடைய பாதுகாப்பை உரிய முறையில் உத்தரவாதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

# அரசியல் தீர்வு இதுவரை கிடைக்காதமை கவலை

*ஐ.நா. சிறப்புப் பிரதிநிதியிடம் இரா.சம்பந்தன் தெரிவிப்பு*

கொழும்பு, ஒக்.4

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு நீண்ட காலம் கடந்தும் இன்னமும் பொறுப்புக்கூறல் மற்றும் அரசியல் தீர்வுகள் கிடைக்காதுள்ளமை கவலைக்குரிய விடயம் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஐக்கிய இராச்சியத்தின் பொதுநலவாயம், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் தெற்காசியாவுக்கான அமைச்சரும், முரண்பாடுகள் உள்ள இடங்களில் பாலியல் வன்முறைகளைத் தடுப்பதற்குமான சிறப்பு பிரதிநிதியுமான தாரிக் அஹமத்திடம் எடுத்துக்கூறியுள்ளார்.



தாரிக் அஹமத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளருமான எம் ஏ. சுமந்திரன் ஆகியோரை நேற்றுமுன்தினம் கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச்சந்திப்பில்தேசியப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் கருத்துத் தெரிவித்த இரா சம்பந்தன், தமிழ் மக்களாகிய நாம் எமக்கென ஒரு வரலாற்றையும், கலாசாரத்தையும் கொண்டவர்கள். நாங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான ஒரு அரசியல் அதிகாரப் பரவலாக்கத்தின் மூலம் இந்த பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்குத் தயாராக உள்ளோம். நாங்கள் பிரிபடாத பிரிக்க முடியாத ஒன்றிணைந்த இலங்கை நாட்டுக்குள் தீர்வொன்றையே வேண்டுகிறோம். நாங்கள் அனைவரும் இந்த நாடு செழிப்புற வேண்டுமென்றே விரும்புகிறோம். கடந்த 30 வருட காலமாக இந்த விடயம் தொடர்பில் எடுக்கப்பட்ட முயற்சிகளை விளக்கிய அதே வேளை, இதுவரையிலும் எவ்வித தீர்க்கமான முடிவுகளும் எட்டப்படாமை குறித்து தனது கவலையைத் தெரிவித்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-22)

# அரசதலைவர் தேர்தலை எவ்வாறு கையாளலாம்?

*கட்சிகளுடனான சந்திப்புக்கள் தொடர்கின்றன*

யாழ்ப்பாணம், ஒக். 4

அரசதலைவர் தேர்தலை தமிழ் மக்கள் எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பில் பொதுவான தீர்மானத்தை எட்டும் வகையில் தமிழ் மக்கள் பேரவை, சமயத் தலைவர்கள், புத்திஜீவிகள், அரசியல் ஆய்வாளர்கள், புலமைசார் வல்லுநர்களை உள்ளடக்கியதாக சுயாதீனக்குழு அமைக்கப்பட்டுள்ளது. அது தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள அரசியல் கட்சிகளை சந்திக்கும் பணியை ஆரம்பித்துள்ளது.

இந்தக் குழுவில் யாழ்ப்பாண சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தா, திருகோணமலை ஆயர் பொன்னையா ஆண்டகை,

தென் கயிலை ஆதீன சுவாமிகள் தவத்திரு அகத்தியர் அடிகளார், [illegible] அடிகளார், சமூக மற்றும் அரசியல் ஆய்வாளர் சட்டத்தரணி சி.அ.ஜோதிலிங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியற்றுறைத் தலைவர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறையின் கலாநிதி கு.குருபரன், திருமதி கோசலை மதன், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன், சமூக செயற்பாட்டாளர்களான குருநாதன், கஜன், மருத்துவர் சிவபாலன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

அரசதலைவர் தேர்தலை தமிழ் மக்கள் எப்படிக் கையாள்வது என்பது தொடர்பில் தமிழ் அரசியல் கட்சிகள் ஒருமித்த முடிவை எடுக்கும் வகையில் மேற்படி சுயாதீனக் குழுவின் அங்கத்தவர்கள் நேற்றுமுன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடினர். சந்திப்பு சுமார் மூன்று மணித்தியாலங்கள் நீடித்தது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பொ.கஜேந்திரகுமாருடனான சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது. சந்திப்பில் கட்சியின் செயலர் செ.கஜேந்திரன், சட்டத்தரணிகளான காண்டீபன், சுகாஷ் ஆகியோரும் உடன் இருந்தனர்.

இரண்டு சந்திப்புக்களும் சுமுகமாக இடம்பெற்றன. நேற்று முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியினருடனான சந்திப்பு நடைபெற்றது. தொடர்ந்து ஏனைய அரசியல் கட்சிகளுடனான சந்திப்புக்கள் நடைபெறவுள்ளன என்று தமிழ் மக்கள் பேரவையின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முன்னணியின் பரப்புரை முல்லையில் நடந்தது

முல்லைத்தீவு, ஒக். 4

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர்களுடனான சந்திப்பு முல்லைத்தீவு அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

அரசதலைவர் தேர்தல் தொடர்பில் கிராம மட்ட கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பும் தேர்தல் தொடர்பான பரப்புரைக் கூட்டமும் அதில் நடைபெற்றது. மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ரங்கதுசார தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் வடமத்திய முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம்.றஞ்சித், வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ரெஜினோல்ட் குரே, மலையக தேசிய முன்னணியின் கூட்டு எதிர்க்கட்சியின் தமிழ்ப்பிரிவுத் தலைவர் கலாநிதி ரிஷி செந்தில்ராஜ், வன்னித் தேர்தல் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் மற்றும் பலர் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தனர். (கு-ரி3)

## ஆயுர்வேதக் கருத்தரங்கு

வவுனியாத் தமிழ்ச் சங்கம் மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும் நடத்திவரும் சிந்தனை அரங்க வரிசையில் நாளைமறுதினம் ஆயுர்வேதம் பற்றிய அரங்குஇடம்பெறவுள்ளது. வவுனியா ஆதி விநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு இடம் பெறும் நிகழ்வில் மூன்று துறைசார்ந்த வல்லுநர்களின் சிந்தனையுரைகள் இடம்பெறவுள்ளன. "ஆயுர்வேதம் ஓர் அறிமுகம்" என்ற பொருளில் வைத்தியர் க.சிவராசாவும், "ஆயுர்வேதமும் ஏனைய வைத்திய முறைகளும் ஓர் ஒப்பீடு" என்னும் பொருளில் வைத்தியர் ஏ.ஜே.ரம்ஸானும், "சித்த வைத்தியமும் தமிழர் கலாசாரமும்" என்ற பொருளில் வைத்தியர் மா.போதபாரியும் உரையாற்றவுள்ளனர். (ஐ-402)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனை விதிக்கவில்லை

## சஜித் பிரேமதாச தெரிவிப்பு

தம்மை ஆதரிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த நிபந்தனைகளையும் விதிக்கவில்லை. எவரிடம் இருந்தும் ஆதரவைப் பெறுவதற்காக நிபந்தனைகளுக்கு இணங்கப்போவதில்லை. இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவித்துள்ளதாவது:

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் தற்போதைய நிலவரங்கள் குறித்தே பேசப்பட்டது. அரசியல் விடயங்களில் கவனம் செலுத்தப்படவில்லை. அரச தலைவர் எந்த சிறப்பாக விடயம் குறித்தும் கலந்துரையாடப்படவில்லை. அவருடன் சிறப்பு விடயங்கள் குறித்து கலந்துரையாடுவதற்கான தேவை இல்லை. எனது கொள்கைகளை ஏற்றுக் கொள்ளும் எவரது ஆதரவையும் வரவேற்கிறேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏதாவது நிபந்தனைகளை போட்டுள்ளதா என்ற கேள்விக்குப் பதிலளித்த சஜித் பிரேமதாச எந்த நிபந்தனைகளும் இல்லை, நிபந்தனைகளுக்கு அடிபணியும் நபர் நான் அல்ல என்று முன்னரே தெளிவாக கூறியிருக்கிறேன்: மற்ற கட்சிகளுடன் கொள்கை ரீதியான உடன்பாடுகள்மட்டுமேஉள்ளன. நிபந்தனைகள் இல்லை - என்றார். (எ)

# அமெரிக்க உயர்மட்டக் குழு மகிந்தவுடன் திடீர் சந்திப்பு



கொழும்பு, ஒக். 4

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்காவின் உயர்மட்டப் பிரதிநிதிகள் குழுவொன்று, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளது.

அமெரிக்காவின் குடியரசுக் கட்சி மற்றும் ஜனநாயகக் கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த, தேசிய ஜனநாயக நிறுவகம் மற்றும் பன்னாட்டுக் குடியரசு நிறுவகம் ஆகியவற்றின் உயர்மட்டப் பிரதிநிதிகள் குழுவே மகிந்த ராஜபக்சவைச் சந்தித்துள்ளது.

இந்தக் குழுவுக்கு, தூதுவர் கார்ல் இன்டர்போர்த் தலைமை தாங்கினார்.

அரச தலைவர் தேர்தல் நடக்கவுள்ள நிலையில் தற்போதைய அரசியல் சூழல் மற்றும் தேர்தலுக்கான சூழலை அவதானிப்பதே இந்தக் குழுவின் பயண நோக்கம் என்று எதிர்க்கட்சித் தலைவரின் செயலகம் தெரிவித்துள்ளது. (ஒ,5)

# எனக்கான கொடுப்பனவை மக்களுக்காக வழங்குவேன்

## அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச கூறுகிறார்

அரச தலைவருக்கு வழங்கப்படும்அனைத்து கொடுப்பனவுகள் மற்றும் சம்பளத்தை மக்களுக்கு ஒதுக்க நடவடிக்கை எடுப்பேன் என அமைச்சரும், ஐக்கிய தேசிய முன்னணியின் அரச தலைவர் வேட்பாளருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அமைச்சர் மங்கள சமரவீரவின் இல்லத்தில்நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறுதெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் மொத்த சனத்தொகையில் 45வீதமானவர்கள் 900 ரூபாவை நாளாந்த வருமானமாக பெற்று வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் இந்த வருமானத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

ஏனெனில் குடிசன மதிப்பீட்டு திணைக்களத்தின் தகவலின்பிரகாரம் 4 பேர் கொண்ட குடும்பத்துக்கு ஆகாரம் மற்றும் ஏனைய தேவைகளுக்காக மாத வருமானமாக 50 ஆயிரத்து 500 ரூபா தேவைப்படுகின்றது என்று தெரிவிக்கின்றது.

இவ்வாறானதொரு நிலை இருக்கும்போது நாட்டில் வாழும் மக்களின் 45 வீதமானவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பம் இல்லாமற் போயுள்ளது.

நாட்டின்தேசிய வருமானத்தில் 55வீதத்தை 20 வீதமான செல்வந்தர்களே அனுபவிக்கின்றனர். 45 வீதமான வறிய மக்கள் 5 வீதத்தையே அனுபவிக்கின்றனர்.

இந்த நிலை தொடர்பில் மக்கள் மத்தியில் பெரும் முரண்பாடு இருக்கின்றது. மக்கள் ஆதரவுடன் அரச தலைவரான பின்னர், இந்த வித்தியாசத்தை ஓர் அளவுக்கு கட்டுப்படுத்தி, அனைத்து மக்களும் ஆகாரம் மற்றும் ஏனைய வசதி வாய்ப்புக்களுடன் வாழ்வதற்கான நிலையை ஏற்படுத்த நடவடிக்கை எடுப்பேன் - என்றேன். (எ)

# தேசிய பாடசாலைகளிலிருந்தே ‘ரப்’ வழங்கும் திட்டம் ஆரம்பம்

## இந்த மாதம் பயிற்சிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக் 4

உயர் தர மாணவர்கள் மற்றும் உயர் தரத்துக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான டப் கணினி வழங்கும் திட்டம் தேசிய பாடசாலைகளிலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

தேசிய பாடசாலைகளில் கல்வி பயிலும் உயர் தர மாணவர்கள் மற்றும் அவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு 'ரப்' கணினி முதலில் வழங்கப்படவுள்ளன.

இவற்றின் மூலமாக கற்றல், கற்பித்தல் தொடர்பான பயிற்சிகள் இந்த மாத இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளன. முதலில் மாகாண மற்றும் வலய ரீதியாக இந்த பயிற்சிகள் ஆசிரியர்களுக்கு இந்தப் மாதம் வழங்கப்படவுள்ளன. அதற்கான நிதியை கல்வி அமைச்சு வழங்கும். இந்தப் பயிற்சிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கல்வி சார்உயர் அதிகாரிகளுக்கும் கல்வி அமைச்சுகோரிக்கைவிடுத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)

# சட்ட மா திணைக்கள அதிகாரிகளை அலரி மாளிகைக்கு அழைக்க முடியாது

## ஜி.எல்.பீரிஸ் கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.4



சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளை அலரி மாளிகைக்கு வரவழைக்கும் அதிகாரம் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கிடையாது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரசியல் அழுத்தத்தின் [illegible] காரணமாகவே முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று முன்னாள் சொலிஸிட்டர் ஜெனரல் தில்ருக்ஷி டயஸ் விக்ரமசிங்க கூறியதையடுத்து அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தை தொடர்புப் [illegible] தற்போது எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களுக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்க தலைவர் ஏன் இதுவரையில் மறுப்பு தெரிவிக்காதுள்ளார்.

அதேவேளை, பெரும் நெருக்கடிக்கு மத்தியிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவு செய்யப்பட்டார். அவர் அதற்காக மேற்கொண்ட செயற்பாடுகள் முறையற்றவை. சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவை அரசியல் ரீதியில் எதிர்க்க முடியாதவர்கள், அவர் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதை முறையற்ற விதத்தில் தடுக்கும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர் - என்றார். (எ)

# கட்டுப்பணம் நாளை ஏற்கப்பட மாட்டாது

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.4



நாளை சனிக்கிழமை பொது விடுமுறை என்பதால் அரச தலைவர் தேர்தலுக்கான கட்டுப்பணம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிவரை வேட்பாளர்கள் சார்பில் கட்டுப்பணம் செலுத்த முடியும் என்றும் அவர் கூறினார்.

ஒரு வேட்பாளர் சார்பாக ஒரு சின்னத்தில் போட்டியிடுவதற்கு கட்டுப்பணம் செலுத்தப்பட்ட பின்னர் அவர் சின்னத்தை மாற்ற முடியுமா என்றும்- இரண்டாவது முறையாக இன்னொரு சின்னத்தில் போட்டியிட கட்டுப்பணம் செலுத்த முடியுமா? என்றும் - தேர்தல்கள் ஆணையாளரிடம் கேள்வி எழுப்பப்பட்ட போது, அதற்கு கருத்து எதையும் வெளியிட அவர் மறுத்துள்ளார். அந்த விவகாரம் பற்றி தேர்தல் [illegible] கரிசனை [illegible] கொள்ளவில்லை - என்றும் அவர் கூறியுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித்துக்கு சேறு பூசுவதில் மகிந்த அணியினர் தீவிரம்

*வேலுகுமார் எம்.பி. குற்றச்சாட்டு*

கொழும்பு, ஒக்.4

அரச தலைவர் தேர்தலில் சஜித் பிரேமதாச வெற்றிநடை போடுவார் என்பது உறுதியாகியுள்ளது. அவருக்கு எதிராகச் சேறுபூசும் நடவடிக்கையில் மகிந்தவும், அவரின் சகாக்களும் தீவிரமாக இறங்கியுள்ளனர். குறுக்கு வழியில் கோழைத்தனமாக அரசியல் நடத்துவதை விடுத்துத் "தில்" இருந்தால் ஜனநாயக வழியில் நேருக்கு நேர் மோத வேண்டும் என்று அவர்களுக்குச் சவால் விடுக்கின்றேன்.



இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், இந்து சமய விவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் கண்டி மாவட்ட அரசியல் செயற்பாட்டாளர்களுடன் கொழும்பில் நேற்றுக்காலை நடைபெற்ற கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தேர்தல் வந்துவிட்டால் போதும் மகிந்தவுக்கும் அவரை சூழவுள்ளவர்களுக்கும் 'இனவாத' காய்ச்சல் ஏற்பட்டு விடுகின்றது. இதுவரைகாலமும் இனவாதிகளுக்கு பாலூட்டி அவர்களை மறைமுகமாக இயக்கிய கோத்தபாய ராஜபக்சவும் தற்போது அந்த அணியில் இணைந்து அரசியலுக்கு வந்துள்ளார். இவர்களுக்கு மட்டுமே தேசப்பற்று இருக்கின்றது என்று எண்ணி சந்து, பொந்தெல்லாம் அது பற்றியே கூவித் திரிகின்றனர்.

மக்கள் மத்தியில் தற்போது நேர்வழியில் பரப்புரை செய்யமுடியாத அளவுக்கு தமது ஆட்சியின்போது கொலை, கொள்ளைகளை அரங்கேற்றியராஜபக்சாக்களும், அவர்களின் சகாக்களும் வேறுவழியின்றியே வழமைபோல் இனவாத ஆயுதத்தை கையிலெடுத்துள்ளனர். தேசப்பற்றை முன்னிலைப்படுத்தி கறைபடிந்த தமது கடந்தகால பயணத்தை மூடிமறைக்க முற்படுகின்றனர்.

சஜித் பிரேமதாசவுக்கும், எங்களுக்கும் ராஜபக்சாக்களைவிட - நாம் பிறந்து, தவழ்ந்து, வளர்ந்து, வாழ்ந்து, செத்துமடியபோகும் தாய்நாடு மீது அதிக பற்று இருக்கின்றது. ஆனால், அரசியலுக்காக ஒருபோதும் தாய்நாடுமீதான பற்றை அடகுவைத்து வாக்கு வேட்டை நடத்தியது கிடையாது. உணர்வுடன் சம்பந்தப்பட்ட விடயங்களை சந்தைப்படுத்த முற்படுபவன் உண்மையான தேசப்பற்றாளன் கிடையாது என்பது தற்போது மக்களுக்கும் புரிந்துவிட்டது.

பழமையான விடயங்களில் நாட்டுக்குத் தேவையானவற்றை பாதுகாத்து அதேபோல் புதுமை களுக்கு இடமளித்து புத்துணர்ச்சியுடன் புதுயுகம் நோக்கி பயணிப்பதே சஜித் பிரேமதாசவின் அரசியல் இலக்காக இருக்கின்றது. இது தொடர்பில் எமக்கு அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

அன்றுதொட்டு இன்று வரை பிரதான கட்சிகள் நடத்திவரும் பாரம்பரிய அரசியலுக்கு அப்பால் நவயுகத்துடன் ஒப்பிட்டு சிந்தித்து முடிவெடுக்கக் கூடிய வல்லமை சஜித்துக்கு இருக்கின்றது. இதனால்தான் அவரின் கரங்களை பலப்படுத்த நாம் ஆதரவு வழங்கியுள்ளோம்.

எனவே, சஜித் பிரேமதாவின் வெற்றிக்காக நாம் அனைவரும் தீவிரமாக செயற்படவேண்டியுள்ளது. அவரின் வெற்றியில்தான் நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளதால் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் வாக்காளர்களுக்கும் கூடுதல் பொறுப்பு இருக்கின்றது என்றே நான் கருதுகின்றேன்.

மகிந்த தரப்பின் மாயாஜால அரசியலுக்கு மயங்காமல் உண்மை எது, பிழை எது என்பதை பகுத்தறிந்து முடிவுகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (எ)

# ரணில் இருக்கும்வரை சஜித் அரச தலைவராக முடியாது

*புஞ்சி நிலமே கூறுகின்றார்*



கொழும்பு, ஒக்.4

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நீடிக்கும் வரை, அமைச்சர் சஜித் பிரேமதாசவால் அரச தலைவர் பதவியில் அமர முடியாது என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுசந்த புஞ்சி நிலமே தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நான் ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் இணைந்து கொள்ளவுள்ளேன் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. அவற்றை முற்றாக நிராகரிக்கின்றேன்.

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் வெல்வார் என்று எவரால் சான்றிதழ் வழங்க முடியும்?. நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலேயே அவர்களின் பெறுபேறை மக்கள் கூறிவிட்டார்கள்.

அத்தோடு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்க இருக்கும்வரை, இன்னொருவரை தனது கட்சியிலிருந்து அவர் அரச தலைவராக மாட்டார்.

ரணில் விக்கிரமசிங்க குறைந்தது, தனது கட்சியையேனும் முன்னேற்ற வேண்டும் என நினைப்பவராக இருந்தால், இவ்வளவு இழுபறிகளுக்கு மத்தியில் அவர் அமைச்சர் சஜித் பிரேமதாசவை வேட்பாளராகக் களமிறக்கியிருக்க மாட்டார்.

பல வருடங்களாக எனக்குத் தெரிந்த ரணில் விக்கிரமசிங்க, ஒருபோதும் சஜித் பிரேமதாச வெற்றியடைய இடமளிக்க மாட்டார் என்பது உறுதி. குறிப்பாக அவர் இருக்கும் காலம் வரை அமைச்சர் சஜித் பிரேமதாசவால், இலங்கையின் அரச தலைவராக முடியாது.

திஸ்ஸ அத்தநாயக்க மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துள்ளார். உண்மையில் அவர் அங்கு சென்றமையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அவர் எங்கு சென்றாலும் அந்தக் கட்சி தேர்தலில் வெற்றி பெறாது என்பதால் நாம் இதுதொடர்பாக என்றும் கவலைப்பட்டது கிடையாது - என்றார். (எ)

# தமிழ் குடும்பத்தின் நாடு கடத்தல் ஐ.நா. கோரிக்கையும் நிராகரிப்பு!

மெல்பேர்ன், ஒக்.4

ஆஸ்திரேலியாவிலிருந்து நாடு கடத்தலை எதிர்கொண்டிருக்கும் பிரியாநடேஸ் குடும்பத்தை கிறிஸ்மஸ் தீவு தடுப்பு முகாமிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை கோரியிருந்த போதும் அதை ஆஸ்திரேலிய அரசு நிராகரித்துள்ளது.

அந்தத் தம்பதியினரும் அவர்களது இரு பிள்ளைகளும் நாடு கடத்தலுக்கு எதிராக தொடர்ந்தும் போராடிவரும் நிலையில், அவர்களை 30 நாள்களுக்குள் குறித்த கிறிஸ்மஸ் தீவு முகாமிலிருந்து விடுவித்து, சமூகத்தில் வாழ அனுமதித்து அங்கிருந்து கொண்டு அவர்கள் தமது அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபை கோரியிருந்தது.

பிரியாநடேஸ்குடும்பத்தின் சார்பில் வாதாடிவரும் சட்டத்தரணி கரீனா ஃபோர்ட்ஸ் ஐ.நாவின் கலையீட்டை கோரியிருந்த நிலையில் அவருக்கு அனுப்பி வைக்கப்பட்ட பதில் கடிதத்தில் ஐ.நா. மனிதஉரிமைகள் சபை இதனைக் குறிப்பிட்டுள்ளது.

புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட தமிழர்களான பிரியா மற்றும் நடேஸ் மற்றும் ஆஸ்திரேலியாவில் பிறந்த அவர்களது இரண்டு மகள்கள் கோபிகா மற்றும் தருணிகா ஆகியோர் சுமார் ஒன்றரை வருடங்களாக மெல்போர்னிலுள்ள தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

கூந்தஓகஸ்ட்மாதம்29ஆம் திகதி இலங்கைக்கு நாடு கடத்தும் நோக்கில், சிறப்பு வானூர்தி ஒன்று அவர்களை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட போதிலும் இறுதி நேரத்தில் குழந்தை தருணிகா சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் நீதிமன்றம் கடைசி நிமிட தடை உத்தரவை பிறப்பித்ததைத் தொடர்ந்து வானூர்தி டார்வினில் தரையிறக்கப்பட்டது.

அந்தக் குடும்பம் வானூர்தியை விட்டு வெளியேற்றப்பட்டு, பின்னர் கிறிஸ்மஸ் தீவுக்கு அனுப்பப்பட்டது.

இதனையடுத்து தருணிகாவின் பாதுகாப்பு குறித்தும், தருணிகாவின் சூழ்நிலைகளை உள்துறை அமைச்சர் மதிப்பீடு செய்திருக்க வேண்டுமா என்பது குறித்தும் விசாரணை மேற்கொண்ட நீதிமன்றம் தீர்ப்பு வழங்குவதற்கு கால அவகாசம் எடுத்திருந்த பின்னணியில் தருணிகாவின் விண்ணப்பம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்படவேண்டும் என செப்ரெம்பர் 19ஆம் திகதி நீதிமன்றம் தீர்ப்பை வழங்கியது.

அதன்படி பிரதான விண்ணப்பதாரியான தருணிகாவின் விண்ணப்பம் தொடர்பில்முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் அந்த விசாரணை முடியும் வரை அவர் நாடு கடத்தப்படக்கூடாது எனவும் நீதிபதி தெரிவித்தார்.

தருணிகா குழந்தை என்பதால் அவரிடமிருந்து பெற்றோரை தனியாகப் பிரித்து நாடு கடத்த முடியாது என்பதால் முழுக் குடும்பமும் நாடுகடத்தலிலிருந்து தப்பித்திருந்த பின்னணியில் கிறிஸ்மஸ் தீவு தடுப்புமுகாமிலேயே தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். (எ)

## பதாகைகளை கிழித்ததால் பதற்ற நிலை

கொழும்பு, ஒக்.4

கொழும்பில் மருதானை சந்தியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் பதாகைகள் கிழிக்கப்பட்டமையால் நேற்றுமுன்தினம் அங்கு குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது. நள்ளிரவு ஏற்பட்ட பதற்றமானசூழ்நிலையை அடுத்து அதிரடி படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

சஜித்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் காட்சிப்படுத்தப்பட்ட பதாகைகளே கிழிக்கப்பட்டுள்ளன. அங்கு ஒன்று திரண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள், பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரே இவ்வாறு கிழித்தார் என்று குற்றஞ் சாட்டினர். அங்கிருந்த பொலிஸாருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

அங்குகுமப்ப சூழ்நிலை ஏற்பட்ட நிலையை அடுத்து, அதிரடிப் படையினரின் பாதுகாப்புடன் கிழிக்கப்பட்ட பதாகைகளை மீண்டும் காட்சிப்படுத்தும் நடவடிக்கையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் ஈடுபட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாமலாக்கப்பட்ட 3 இளைஞர்கள் தொடர்பான

# சாவகச்சேரி நீதிமன்ற விசாரணை ஒக். 11ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 4

**நா**வற்குழி இராணுவ முகாம் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட 3 இளைஞர்கள் தொடர்பான ஆள்கொணர்வு மனுக்கள் தொடர்பிலான சாவகச்சேரி நீதிவானின் விசாரணைகள் எதிர்வரும் ஒக்ரோ பர் 11ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டன.

சாவகச்சேரி நீதிமன்றில் நீதிவான் ஜெகநாதன் கஜநிதிபாலன் முன்னிலையில் நேற்று வியாழக்கிழமை வழக்கு விசாரணைக்கு வந்தது.

'இந்த வழக்கில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் வழங்கிய இடைக்காலக் கட்டளைக்கு ஆட்சேபனை தெரிவித்து சட்டமா அதிபர் திணைக்களத்தால் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு எதிர்வரும் 9ஆம் திகதி ஆட்சேபணை சமர்ப்பணம் இடம்பெறுகிறது. அதனால் உயர்நீதிமன்றின் முடிவைப்பெறுவதற்காக, நீதிவான் நீதிமன்றின் விசாரணையை அன்றைய தினத்துக்கு பின்பான அண்மித்த திகதியில் வழங்கவேண்டும் என்று பாதிக்கப்பட்ட உறவுகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கலாநிதி குமாரவடிவேல் குருபரன் மன்றுரைத்தார். மனுதாரரின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட சாவகச்சேரி நீதிவான் ஜே.கஜநிதிபாலன், வழக்கு எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை அழைக்கப்படும் என்று ஒத்திவைத்தார்.

1996ஆம் ஆண்டு நாவற்குழி படைமுகாமில் இராணுவ அதிகாரியாகவிருந்த துமிந்த கெப்பிட்டிவலான தலைமையிலான படையினர், கைதுசெய்து கொண்டு சென்ற 24 இளைஞர்கள் பின்னர் காணாமல் ஆக்கப்பட்டனர். அவர்களில் 3 இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் அவர்களது பெற்றோரால் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் ஆள்கொணர்வு எழுத்தாணை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி எஸ்.சுபாசினியின் ஏற்பாட்டில் சட்டத்தரணி கலாநிதி குமாரவடிவேல் குருபரன் மனுக்களை நெறிப்படுத்தினார். 2017ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்த ஆள்கொணர்வு மனுக்கள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் இந்த ஆள்கொணர்வு மனுக்களை பூர்வாங்க விசாரணையுடன் தள்ளுபடி செய்ய சட்டமா அதிபர் திணைக்களம் பல ஆட்சேபணைகளை முன்வைத்தது. எனினும் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அனைத்து ஆட்சேபணைகளையும் நிராகரித்த யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், மனுதாரர்களின் கோரிக்கைகள் தொடர்பில் விசாரணை ஒன்றை முன்னெடுத்து யாழ்ப்பாணம் மேல் நீதி மன்றுக்கு உரிய பரிந்துரையை வழங்குமாறு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றுக்கு உத்தரவிட்டார்.

அதனடிப்படையில் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் இந்த மனுக்கள் மீதான விசாரணைகள் கடந்த மே மாதம் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் யாழ்ப்பாணம் மேல் நீதி மன்றம் வழங்கிய கட்டளைக்கு ஆட்சேபணை தெரிவித்து சட்டமா அதிபர் சார்பில் உயர்நீதிமன்றில் மேன்முறையீடு செய்யப்பட்டது. அந்த மனு மீதான விசாரணை கடந்த 30ஆம் திகதி இடம்பெற்றது. நீதியரசர்கள் புவனகே அலுவிகார, சிசரஜேடி அப்ரூவ், எஸ்.துரைராஜா ஆகிய மூவர் கொண்ட அமர்வு முன்னிலையில் மனு விசாரணைக்கு வந்தது.

சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான மேலதிக மன்றாடியார் அதிபதி, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் மனுக்களை விசாரணை நடத்துவதற்காக வழங்கிய இடைக்காலக் கட்டளையை நடைமுறைப்படுத்துவதற்கு இடைக்காலத்தடை வழங்கி, தமது மனுவை விசாரணை நடத்த விண்ணப்பம் செய்தார். எனினும் பாதிக்கப்பட்ட உறவுகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கலாநிதி குமாரவடிவேல் குருபரன் சட்டமாஅதிபரின் விண்ணப்பத்துக்கு ஆட்சேபணை தெரிவித்தார்.

'யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் வழங்கிய கட்டளைக்கு ஆட்சேபணை தெரிவித்து மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கே மேன்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்யமுடியும். உயர் நீதிமன்றம் இந்த மேன்முறையீட்டு மனுவை விசாரித்து கட்டளை வழங்க நியாயாதிக்கம் இல்லை' என்று சமர்ப்பணம் செய்தார்.

பாதிக்கப்பட்ட உறவுகளின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன் முன்வைக்கும் ஆட்சேபணை தொடர்பில் எழுத்துமூலமாக மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேபணையைச் சமர்ப்பிக்குமாறு உயர் நீதிமன்ற அமர்வு அறிவுறுத்தியது. அத்துடன், இருதரப்பு சமர்ப்பணங்களையும் வரும் 9ஆம் திகதி புதன் கிழமை முன்வைக்க உத்தரவிட்ட உயர்நீதிமன்ற அமர்வு அன்றுவரை மனுவை ஒத்திவைத்தது.

(ம-37)



# மலையகத்துக்கு தனிப்பல்கலை!

## சஜித்திடம் 9 தலைப்புக்களின் கீழ் மனோ அணி நேரில் கோரிக்கைகள்

கொழும்பு, ஒக். 4

மலையகத்துக்கான தனிப் பல்கலைக்கழகம், கைத்தொழில் பேட்டை, அரச தொழில் வாய்ப்புக்கள் உட்பட 9 தலைப்புகளின் கீழ் முக்கியமான பல கோரிக்கைகளை ஐக்கிய தேசிய முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவிடம் அமைச்சர் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி முன்வைத்துள்ளது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியினருக்கும் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் கொழும்பிலுள்ள அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் வதிவிடத்தில் நடைபெற்றது. மலையக மக்களுக்கான அரசியல் உரிமைகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளன. அத்துடன், தமிழ் முற்போக்குக் கூட்டணியால் தயாரிக்கப்பட்டிருந்த கோரிக்கைகள் அடங்கிய அறிக்கையும் சஜித்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதற்குச் சாதகமான பதில்களை வழங்கிய அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ, மலையக மக்களுக்காகத் தனது தந்தை செய்ததை விடவும் பல சேவைகளை செய்வதற்குக் காத்திருப்பதாகவும் குறிப்பிட்டார் என்று சந்திப்பில் கலந்துகொண்ட மலையக மக்கள் முன்னணியின் செயலர் நாயகம் அ.லோரன்ஸ் தெரிவித்தார்.

(ம-22)

அரச தலைவர் தேர்தல்

# வர்த்தமானி அறிவித்தலை கைவிடுமாறு மனுத்தாக்கல்

கொழும்பு, ஒக். 4

அரச தலைவர் தேர்தலை நடத்துவதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை செல்லுபடியற்றதாக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் காலி முதல்வர் மெத்சிறி டி சில்வா குறித்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

(ம)

# ஐ.தே.கவின் மாநாட்டு நேரலையை நிறுத்தியது தேர்தல் ஆணைக்குழு

கொழும்பு, ஒக். 4

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய சம்மேளனக் கூட்டம் தொடர்பான தொலைக்காட்சி நேரலை ஒளிபரப்பை இலங்கை தேர்தல் ஆணைக்குழு இடைநிறுத்தியுள்ளது.

கொழும்பு சுகததாச உள்ளரங்கில் ஐ.தே.கவின் சம்மேளனம் நேற்றுக் காலை ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்றது. இதனை சிறிலங்காவின் தேசிய தொலைக்காட்சியான ரூபவாஹினி நேரலை ஒளிபரப்பு செய்தது.

இதையடுத்து, நேரலை ஒளிபரப்பை நிறுத்துமாறு தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு உத்தரவிட்டது.

இதையடுத்து, நேரலை ஒளிபரப்பு இடைநிறுத்தப்பட்டது. தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், இவ்வாறான நேரலை ஒளிபரப்பு சட்டவிரோதமானது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.

(ம)

ஈஸ்டர் தாக்குதல் விசாரணை

# அறிக்கையை இறுதிப்படுத்த இன்று கூடுகிறது தெரிவுக்குழு

கொழும்பு, ஒக். 4

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த விசாரணை அறிக்கையை இறுதிப்படுத்துவது தொடர்பில் ஆராய நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழு இன்று வெள்ளிக்கிழமை கூடுகின்றது.

இம்மாதம் இரண்டாம் வார நாடாளுமன்ற அமர்வுகளின்போது இறுதி அறிக்கையை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனத் தெரிவுக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் குறித்து ஆராய்ந்து நாடாளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழு அதன் விசாரணைகளை முழுமைப்படுத்தியுள்ள நிலையில், விசாரணைகளின் இறுதி அறிக்கையைத் தயாரிக்கும் பொருட்டு அது தொடர்பில் ஆராய தெரிவுக்குழு, அதன் தலைவர் பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையில் இன்று கூடுகின்றது.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்குக் கூடும் இந்தத் தெரிவுக்குழுவில் இறுதி அறிக்கையைத் தயாரிப்பது குறித்தும், இந்த மாதத்தில் கூடும் இரண்டாம் நாடாளுமன்ற வாரத்தில் ஒரு நாளில் தெரிவுக்குழு அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனத் தெரிவுக்குழுவின் தலைவர் ஆனந்த குமாரசிறி தெரிவித்தார். அத்துடன் ஏற்கனவே அரச தலைவர் நியமித்த மூவர் கொண்ட அரச தலைவர் ஆணைக்குழுவின் அறிக்கையும் தெரிவுக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த அறிக்கையின் பரிந்துரைகள் குறித்தும் கவனம் செலுத்தி அறிக்கையை முழுமைப்படுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

(ம-22, 61)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முயற்சியாளர்களை இனங்கண்டு கரம் கொடுத்து உதவ வேண்டும்

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 4

போர் கண்டு வீழ்ந்துபோயிருப்பினும் மீண்டும் எழுவதற்கான முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கும் இந்தத் தேசத்தில் பலம் கொண்ட முயற்சிகள் ஆங்காங்கே பரந்துள்ளன. அந்த முயற்சிகளைக் கண்டறிந்து அவற்றுக்கு நாம் கைகொடுப்போம் என்று வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

மாற்றுவலுவுள்ளோருக்கான உணர்திறன் முறையுடனான செயற்கை கை உருவாக்கிய முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவியைச் சேர்ந்த பத்மநாதன் துசாபன் என்ற மாணவனின் கண்டுபிடிப்புக்கு மதிப்பளிக்கும் முகமாக கைதடியில் அமைந்துள்ள முதலமைச்சர் அமைச்சின் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பில் ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது ஆளுநர் மாணவனைப் பாராட்டி மதிப்பளித்து பாராட்டுப் பத்திரத்தையும் வழங்கினார். குறித்த மாணவன் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையில் இரண்டாம் வருட கல்வியைத் தொடர்கிறார்.

அவரின் பட்டப்படிப்பின் பின் கண்டுபிடிப்பை விரிவாக்கும் பொருட்டு வடக்கு மாகாண ஆளுநரின் பணிப்புரையில் மாணவனுக்கு வெளிநாட்டில் மேற்படிப்பைத் தொடர்வதற்காக புலமைப்பரிசில் மற்றும் குறித்த ஆராய்ச்சியை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் நிதிஉதவியும் வழங்கப்படவுள்ளது. வடக்கு மாகாணத்தில் மாற்றுவலுவுள்ளோருக்கான தேவையை நிவர்த்தி செய்யும் பொருட்டு 25 உணர்திறன் கைகள் மாணவனின் மேற்பார்வையில் உருவாக்கப்படும் என்றும் ஆளுநர் தெரிவித்தார். (து)

# இளங்கலைஞர் மன்றம் நடத்தும் வாணி விழா

யாழ்ப்பாணம், ஒக். 4

யாழ்ப்பாணம் இளம் கலைஞர் மன்றம் வாணி விழாவை இந்த ஆண்டும் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று முதல், வரும் 6ஆம் திகதி வரை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி இரவு 7.30 மணிவரை சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மங்கள இசை, இசைக் கச்சேரி, நாட்டியாஞ்சலி என்பன இன்றையதினம் இடம்பெறவுள்ளன என்றும் மன்றத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ)

# கடற்சங்குகளை எடுத்த நபருக்கு வழக்குப் பதிவு

தலைமன்னார், ஒக். 4

சட்டபூர்வமற்ற முறையில் கடல் சங்குகளை தலைமன்னார் பகுதியிலிருந்து எடுத்துச் சென்றார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் தலைமன்னார் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது என்று மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

மன்னார் கரிசலைச் சேர்ந்தவர் தலைமன்னார் மேற்குப் பகுதியிலிருந்து ஒரு வாகனத்தில் 70 மில்லிமீற்றர் விட்டத்துக்கு குறைவான 225 சங்குகளை அனுமதி பெறாது வாகனத்தில் எடுத்துச் செல்ல முற்பட்ட போது கைது செய்யப்பட்டார்.

அவர் மன்னார் நீதிவானிடம் நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்டார். அவரை ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையில் விடுவித்த நீதிவான் வாகனத்தை ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான பிணைமுறியில் விடுவித்தார்.

வழக்கு வரும் டிசெம்பர் 6ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (து-60)



## சிறுவர் தின நிகழ்வு

கிளிநொச்சி, ஒக். 4

கிளிநொச்சி கல்வி வலயத்தின் வலய மட்ட சிறுவர் தின நிகழ்வு கோணாவில் மகா வித்தியாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் ஒருங்கிணைப்பில் கனடா ஈகை நிறுவனத்தின் அனுசரணையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

மாணவச் சிறார்களை மகிழ்விக்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆடியும் பாடியும் மாணவர்களுடன் நிகழ்வுகளில் ஈடுபட்டனர். காலை ஒன்பது மணி முதல் பிற்பகல் இரண்டு மணி வரை நிகழ்வுகள் இடம்பெற்றன.

பாடசாலையின் அதிபர் இதயசிவதாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் கி.கமலராஜன், கல்விவளர்ச்சி அறக்கட்டளையின் செயலர் ஸ்ரீகௌரிபாலா, பிரதிக் கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்வி அதிகாரி, ஆசிரிய ஆலோசகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-222)

# முதியோர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக. 4

பன்னாட்டு சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வு அரியாலை கலைவாணி சனசமூக நிலைய முன்றிலில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், அரியாலை கலைவாணி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் நிலைய உப தலைவர் ஆனந்தசுந்தரம் கஜேந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக அரியாலை டாட்டா டிமோ நிறுவனத்தின் முகாமையாளர் பாலகிருஸ்ணன் தினேஸ்குமார் கலந்து கொள்வார். (ஐ)

# கனகராயன்குளம் பகுதியில் யானையின் சடலம் மீட்பு

வவுனியா, ஒக். 4

வவுனியா, கனகராயன் குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுவிளாங்குளம் பகுதியில் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் யானையின் சடலம் கண்டறியப்பட்டுள்ளது.

அதைக் கண்ட பொதுமக்கள் கனகராயன் குளம் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்துக்கு நேற்றுச் சென்ற பொலிஸார் வனஜீவராசிகள் திணைக்களத்துக்குத் தகவல் தெரிவித்தனர். அவர்கள் விசாரணை நடத்துகின்றனர். (து-222)

# ஈருருளி பேரணி

யாழ்ப்பாணம், ஒக். 4

தென்மராட்சி பிரதேச செயலகமும் ஐ.ஓ.எம். நிறுவனமும் இணைந்து வெளிநாடுகளுக்கு பயணிப்போருக்கான 'பாதுகாப்பான புலம்பெயர்வு' எனும் தொனிப்பொருளில் ஈருருளி பேரணி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

இந்தப் பேரணியானது இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கொடிகாமத்திலிருந்து ஆரம்பித்து சாவகச்சேரி பிரதேச செயலகம் வரை நடைபெறும் என்று பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. (ஐ-9)

# யோசிதவுக்கு தற்காலிக பதவி உயர்வு

கொழும்பு, ஒக். 4

லெப். யோசித ராஜபக்ச, தற்காலிகமாக லெப். கொமாண்டராக பதவி உயர்த்தப்பட்டு கடற்படை தலைமையகத்தில் பணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார் எனக் கடற்படை தெரிவித்துள்ளது.

அவருடன் பணிபுரிந்தவர்கள் லெப்டினனட் கொமாண்டர்களாக நிரந்தரமாக பதவியுயர்த்தப்பட்டுள்ள நிலையில், யோசித ராஜபக்ச, தற்காலிகமாக லெப். கொமாண்டராக பதிவியுர்த்தப்பட்டுள்ளார் என்று கடற்படை ஊடகப் பேச்சாளர் இசுறு சூரியபண்டார தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் அந்தப் பதவிக்கு தேவையான அடிப்படை தகுதிகளை நிறைவு செய்த பின்னர், நிலையான லெப். கொமாண்டராக பதவியுயர்த்தப்படுவார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# வெளிநாடு செல்வதற்கு கோத்தாவுக்கு அனுமதி!

கொழும்பு, ஒக். 4

மகிந்த அணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச மருத்துவ சிகிச்சைகளுக்காக வெளிநாடு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சிறப்பு மேல் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

எதிர்வரும் 9ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை சிங்கப்பூர் செல்வதற்கு இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், கோத்தபாய ராஜபக்சவின் கடவுச்சீட்டை கையளிக்குமாறும் சிறப்பு மேல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (ம)

# யானைகளின் உடற்கூற்று அறிக்கை நீதிமன்றில் முன்வைக்கப்படவுள்ளது

கொழும்பு, ஒக். 4

ஹபரனை - ஹிரிவடுன - தும்பிகுளம் வனப்பகுதியில் மர்மமான முறையில் உயிரிழந்த 7 யானைகள் தொடர்பான இரசாயன பகுப்பாய்வு அறிக்கை நீதிமன்றில் முன்வைக்கப்படவுள்ளது.

அதற்கமைய குறித்த அறிக்கை எதிர்வரும் வாரம் முன்வைக்கப்படவுள்ளதாக அரச இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. உயிரிழந்த யானைகளின் உடற்பாகங்களின் மாதிரிகள் நேற்றுமுன்தினம் அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்துக்கு கிடைக்கப்பெற்றன.

அவற்றை ஆய்வு செய்து முழுமையான அறிக்கை தயாரிக்கப்படும் என இரசாயன பகுப்பாய்வாளர் ஏ.வெலிஅங்க தெரிவித்துள்ளார். அதன் பின்னர் குறித்த அறிக்கை நீதிமன்றில் முன்வைக்கப்படவுள்ளது. ஹிரிவடுன்ன தும்பிகுளம் வனப்பகுதியின் சில பகுதிகளில் உயிரிழந்த நிலையில் 7 யானைகளின் சடலங்கள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# போதையில் சாரத்தியம்

*தலா 25,000 ரூபா தண்டம்*

தலைமன்னார், ஒக். 4

மது போதையில் உந்துருளி செலுத்திச் சென்ற நான்கு பேருக்கு தலா 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது மன்னார் நீதிமன்று.

மன்னார் பொலிஸார் நீதிமன்றில் நேற்று முன்தினம் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

குற்றவாளிகள் குற்றங்களை ஏற்றுக் கொண்டனர். தலா 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (து-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னைப் பதவி நீக்க முற்படுவது ஆட்சிக் கவிழ்ப்புக்குச் சமமானது

## ஜனநாயகக் கட்சியினர் மீது ட்ரம்ப் பாய்ச்சல்



வோஷிங்டன்,ஒக்.4

என்னைப் பதவியில் இருந்து நீக்க நினைப்பது மக்களின் அதிகாரத்தைப் பறிக்கும் ஆட்சிக் கவிழ்ப்புக்கு சமனானது என்று-அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்தார். அத்தோடு தன்னைப் பதவி நீக்க முற்படுகின்ற ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களை அவர் கடுமையாகச் சாடினார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

அமெரிக்காவில் அடுத்த ஆண்டு அதிபர் தேர்தல் நடக்க இருக்கிறது. தற்போதைய அதிபர் ட்ரம்பை எதிர்த்து ஜனநாயகக் கட்சி சார்பில் முன்னாள் துணை அதிபர் ஜோ பிடென் போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் உக்ரைனில் பணியாற்றிய பிடெனின் மகனுக்கு எதிராக விசாரணை நடத்துமாறு உக்ரைனின் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கியிடம் ட்ரம்ப் வலியுறுத்தியதாகக் குற்றச்சாட்டு எழுந்தது. இதனால் பிடெனுக்குக் களங்கம் ஏற்படுத்துவதற்கு ட்ரம்ப் முற்படுவதாக ஜனநாயகக் கட்சியினர் தெரிவித்தனர். இந்த விவகாரத்தை விசாரணைக்குட்படுத்தி, இது உண்மையாயின் ட்ரம்பைப் பதவி நீக்கம் செய்வதற்கான விசாரணையை அமெரிக்க நாடாளுமன்றத்தில் (பிரதிநிதிகள் சபை) ஜனநாயகக் கட்சியினர் ஆரம்பித்தனர்.

ஆனால் இந்தக் குற்றச்சாட்டை மறுக்கும் ட்ரம்ப் ஜனநாயக கட்சியினரின் இந்த முயற்சி வேடிக்கையானது என்றும்-வரலாற்று ஊழல் என்றும்-கருத்துத் தெரிவித்தார். இந்த நிலையில் ஜனநாயக கட்சியினர் தன்னைப் பதவியில் இருந்து நீக்க நினைப்பது மக்களின் அதிகாரத்தைப் பறிக்கும் ஆட்சிக் கவிழ்ப்புக்கு சமமானது என்று-அவர் தெரிவித்தார்.

ட்ரம்பை விசாரணைக்குட்படுத்துகின்ற சட்ட ரீதியிலான அழைப்பாணையை வெள்ளை மாளிகைக்கு அனுப்பப்போவதாகத் தெரிவித்துள்ள ஜனநாயக கட்சியினர் மீது ஆவேசமடைந்து கடும் வார்த்தைகளை ட்ரம்ப் பயன்படுத்தினார்.

இழிவான வார்த்தை ஒன்றைப் பயன்படுத்தி, ஜனநாயக கட்சித் தலைவர்களை நேர்மையற்றவர்கள் என்று விமர்சித்த ட்ரம்ப், அவர்கள் மீது தேசத்துரோகக் குற்றச்சாட்டைச் சுமத்தினார்.


அத்தோடு ஜோ பிடென் மற்றும் அவரது மகன் ஹண்டர் ஆகிய இருவரையும் 'முழுமையான ஊழல் பேர்வழிகள்' என்றும் குறிப்பிட்டார்.



## கவிழ்ந்தது பேருந்து பெருவில் சோகம்; 23 பேர் சாவு!

லிமா,ஒக்.4

பெருவின் தெற்கே உள்ள குஸ்பிகன்ஜி மாகாணத்தின் கஸ்கோ பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த பேருந்து ஒன்று கவிழ்ந்ததில் 23பேர் சாவடைந்தனர். 40 பேருடன் பயணித்த குறித்த பேருந்து பள்ளத்தில் வீழ்ந்து கவிழ்ந்ததாலேயே இந்தச் சாவுகள் சம்பவித்தன. இந்தப் பேருந்தில் 40பேர் வரையில் பயணித்தனர் என்று கூறப்படுகிறது. பேருந்து கவிழ்ந்த பகுதியில் மழை பெய்து வருவதால் மீட்புப் பணியில் தாமதம் ஏற்பட்டு, காயமடைந்தவர்களை மீட்பதற்குச் சிரமம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கஸ்கோ பகுதி பெருவின் புகழ்பெற்ற சுற்றுலாத் தளம் என்பது குறிப்பிடத்தக்கது.



வெனிசுலா அரசுக்கு எதிராக, கொலம்பியாவின் அதிபர் இவான் டியூக் ஐ.நாவுக்கு வழங்கிய ஒளிப்படங்கள், அறிக்கையில் தவறான ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளன என்று கூறுகிறார் வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ. வெனிசுலாவின் கராகஸ் நகரில் நடந்த செய்தியாளர்களுக்கு அது குறித்து அவர் விளக்கமளிக்கிறார்.

## இன்றைய நாள்

**மேடம்:** வழக்கத்திற்கு மாறான பணி தொந்தரவு தரலாம். மனதை செம்மைப்படுத்தி கொள்வது அவசியம். தொழில், வியாபாரம் அதிகரிக்க நண்பரின் உதவி கிடைக்கும். பண வரவை சிக்கனமாக செலவு செய்வீர்கள்.

**இடபம்:** மனதில் பல நாள் இருந்த சங்கடம் தீரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பணியை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். உபரி பண வருமானம் கிடைக்கும். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்

**மிதுனம்:** உங்கள் எண்ணமும் செயலும் உற்சாகம் பெறும். எளிமையானவருக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு சிறப்பாக நிறைவேறும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும்.

**கடகம்:** செயல்களில் தடுமாற்றம் ஏற்படலாம். கடினமான பணிகளில் பாதுகாப்பு பின்பற்ற வேண்டும். தொழிலில் திட்டமிட்ட இலக்கு கால அவகாசத்தில் நிறைவேறும். கொஞ்சம் பணக்கடன் பெற நேரிடலாம்.

**சிம்மம்:** முன்யோசனையுடன் செயல்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணி உருவாகும். தவிர்க்க இயலாத வகையில் செலவும் ஏற்படும். சுற்றுப்புற சூழ்நிலை தொந்தரவால் நித்திரை கெடலாம்.

**கன்னி:** நண்பரின் உதவி மனதில் ஊக்கம் தரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். உபரி பண வருமானம் கிடைக்கும். மனைவி விரும்பிய பொருள் வாங்கி தருவீர்கள். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**துலாம்:** சொந்த நலனில் கவனம் கொள்வீர்கள். தொழிலில் திட்டமிட்ட வளர்ச்சி பெற கால அவகாசம் தேவைப்படும். சேமிப்பு பணம் அத்தியாவசிய செலவுக்கு பயன்படும்.

**விருச்சிகம்:** புதிய விஷயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற தேவையான மாற்றம் செய்வீர்கள். பண பரிவர்த்தனை திருப்திகரமாகும்.


**தனுசு:** சூழ்நிலையை கவனத்தில் கொண்டு செயல்படுவது நல்லது. தொழிலில் அதிக உழைப்பால் உற்பத்தி, விற்பனை சீராகும். சத்தான உணவு உண்பதால் ஆரோக்கியம் பலம் பெறும்.

**மகரம்:** அன்பு வழியை அதிகம் பின்பற்றுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து வளரும். தாராள அளவில் பணவரவு கிடைக்கும்.

**கும்பம்:** எவரிடமும் இனிய வார்த்தை பேசுவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனை உருவாகும். வாங்குவீர்கள். மனைவியின் அன்பில் மகிழ்வீர்கள்..

**மீனம்:** திறமையை பயன்படுத்தி ஓரளவு நன்மை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உருவாகிற இடையூறை தாமதமின்றி சரி செய்ய வேண்டும். அளவான பணவரவு கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேச்சுக்குத் தயாராகியுள்ள நிலையில் ஏவுகணையை ஏவியது வடகொரியா!

பியோங்ஜாங்,ஒக்.4

அமெரிக்காவுடன் அணு ஆயுத ஒப்பந்தம் குறித்த பேச்சுகளுக்குத் தயாராகியுள்ள நிலையில் வடகொரியா அதிரடியாக ஏவுகணைச் சோதனையை நடத்தியது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

அணு ஆயுதப் பாவனை தொடர்பாக அமெரிக்கா-வடகொரியா இடையே ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதி பேச்சுகள் நடைபெறவுள்ளதாக வடகொரியா தெரிவித்தது. இதற்கு அமெரிக்கா தரப்பில் சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் வடகொரியா தெரிவித்தது. இந்த நிலையில் ஏவுகணைச் சோதனை ஒன்றை வடகொரியா நடத்தியுள்ளது. இந்த ஏவுகணைச் சோதனை வடகொரியாவின் கிழக்குக் கடற்கரைப்பகுதியில் கடந்த புதன்கிழமை வெற்றிகரமாக நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'புக்குக்சாங் 3' என்ற இந்த ஏவுகணைச் சோதனை அயல்நாட்டு சக்திகளின் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதில் வடகொரியாவுக்குப் புதிய முன்னேற்றத்தை அளித்துள்ளது. இந்த ஏவுகணைச் சோதனை காரணமாக அண்டை நாடுகளின் பாதுகாப்பில் எந்தப் பாதிப்பும் ஏற்படாது' என்று வடகொரியா தெரிவித்துள்ளது.



## தாக்கியது 'மிடாக்' புயல்

### தென்கொரியாவில் 6 பேர் சாவு!

சியோல்,ஒக்.4

தென்கொரியாவை 'மிடாக்' என்று பெயரிடப்பட்ட புயல் தாக்கியது. குறித்த புயல் தாக்கத்தைத் தொடர்ந்து பெய்த மழை காரணமாக அங்கு 6 பேர் சாவடைந்தனர். மழை காரணமாகப் பல நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பல்வேறு இடங்களில் நிலச்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன.

கடும் சேதம் விளைவித்துள்ள இந்தப் புயல் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தென்கொரியாவின் தெற்குப் பகுதியில் உள்ள புசான் நகரில் பல கட்டடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மீட்புப்பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. தென்கொரியாவின் கிழக்குப் பகுதிகளில் இதுவரை 500 மில்லி மீற்றர் மழை பதிவாகியுள்ளது. நிலச்சரிவு காரணமாகக் கிழக்குப் பகுதியில் தொடருந்து ஒன்று தடம் புரண்டது. வீதிகளும் சேதமடைந்துள்ளன. ஆயிரம் ஹெக்ரேயர் விவசாய நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும் ஆயிரத்து 500க்கு மேற்பட்ட மக்கள் வீடுகளை இழந்து முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் தென்கொரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.


## வெடித்துச் சிதறியது 2ஆம் உலகப் போர் காலத்து வானூர்தி

### 7 பேர் சாவு!

வோஷிங்டன்,ஒக்.4

2ஆம் உலகப் போரில் அமெரிக்காவின் சார்பில் ஈடுபட்ட வானூர்தி ஒன்று வெடித்துச் சிதறியது. இதனால் அதில் பயணித்த 7பேர் சாவடைந்தனர். 13பேருடன் பயணித்துக் கொண்டிருந்த 'போயிங் பி17' என்கிற ரகத்தையுடைய குறித்த வானூர்தி புறப்பட்ட ஒரு சில நிமிடங்களிலே வெடித்துச் சிதறியது. தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளதை அறிந்த விமானி அதை அவசரமாகத் தரையிறக்க முயற்சித்தபோது வானூர்தி நிலைய பராமரிப்புக் கட்டடம் மீது இந்த வானூர்தி மோதியது. அத்தோடு பெருமளவில் தீப்பிடித்து எரிந்தது. பிராட்லி பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் நடந்த இந்தச் சம்பவம் காரணமாக 3 மணிநேரம் வரை குறித்த வானூர்தி நிலையம் மூடப்பட்டது.

வெடித்துச் சிதறிய குறித்த வானூர்தி, இரண்டாம் உலகப் போரில் ஜேர்மன் படைகளுக்கு எதிராக குண்டுகளை வீசும் பணியில் ஈடுபட்டதாகவும், 1987ஆம் ஆண்டு பிட்ஸ்பர்க் நகரில் நடந்த வானூர்திகளின் சாகச நிகழ்ச்சியில் ஈடுபட்டபோது இந்த வானூர்தி விபத்தில் சிக்கியதில் பலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.



சீனாவின் 70ஆவது சுதந்திர நாள் கொண்டாட்டங்கள் நடந்துகொண்டிருந்த வேளையில் (ஒக்ரோபர் முதலாம் திகதியன்று) சீனாவின் ஆதிக்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துச் சீனாவின் சுயாட்சிப் பிரதேசமான ஹொங்கொங்கில் பெருமளவில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அந்தப் போராட்டத்தில் பொலிஸாரும் போராட்டக்காரர்களும் மோதிக்கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சர வளைவு அமைக்க நிரந்தரத் தடை இவ்வாறுகோரி மன்னார் மேல்நீதிமன்றத்தில் மனு

மன்னார் மாந்தை திருக்கேதீச்சர அலங்கார வளைவு அமைக்கும் பணிகள் மன்னார் பிரதேச சபை தலைவரால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருக்கும் நிலையில், இந்தத் தடை உத்தரவை நிரந்தரமாக நிறுத்தி வைக்கும்படியும் மீண்டும் வளைவு அமைப்பதற்கான அனுமதி வழங்கக் கூடாது எனவும் எழுத்தாணை விண்ணப்பமொன்று மன்னார் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மாந்தை ஆலய நிர்வாகத்தினர் சார்பில் நேற்று வியாழக்கிழமை இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதில், மன்னார் திருக் கேதீச்சர வீதியில் அலங்கார வளைவு அமைப்பதற்கான அனுமதி அண்மையில் மன்னார் பிரதேச சபை தவிசாளரினால் வழங்கப்பட்டது. பின்னர் இந்த வளைவு குறிப்பிடப்படும் இடத்தில் அமைக்கப்படுவதால் மன்னார் பகுதியில் அமைதியின்மை தோன்றும் நிலை ஏற்படும் என மன்னார் பிரதேச சபையின் தவிசாளரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதால் வழங்கப்பட்ட அனுமதி உடன் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு அது தற்பொழுது நடைமுறையில் இருந்து வருகின்றது.

இந்த நிலையில் மன்னார் பிரதேச சபையால் வளைவு அமைப்பதற்காக வழங்கப்பட்டிருக்கும் இடைக்காலத் தடை அனுமதியை நிரந்தரமாக நிறுத்திவைக்குமாறும் மீண்டும் இந்த வளைவை அமைப்பதற்கான அனுமதி வழங்கக்கூடாது எனவும் எழுத்தாணை விண்ணப்பமொன்று மன்னார் மேல் நீதிமன்றில் மன்னார் மாந்தை ஆலய நிர்வாகம் தங்கள் சட்டத்தரணிகள் மூலம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நவம்பர் மாதம் 4ஆம் திகதி வழக்கு விசாரணைக்காக அழைக்கப்படவுள்ளது.

(ம-60)

---

## அரசமைப்பு...

ஐக்கிய தேசியக் கட்சியின் சிறப்பு மாநாடு கட்சித் தலைவரான தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நேற்று நடைபெற்றது. இந்த மாநாட்டிலேயே மேற்படி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டில் அரச தலைவர் வேட்பாளராக சஜித்தின் பெயரை முன்மொழிந்து அனுமதியைக் கோரினார் கட்சித் தலைவரான தலைமை அமைச்சர் ரணில். இதற்கு ஏகமனதாக அங்கீகாரம் கிடைத்தது. அத்துடன், அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல், தேர்தல் முறைமையில் சீர்திருத்தம் செய்தல், தலைமை அமைச்சரின் இணக்கப்பாட்டுடன் நடைமுறைப்படுத்தப்படும் நிறைவேற்று அதிகார அரச தலைவர் பதவிபோன்ற ஐக்கிய தேசியக் கட்சி அரசால் ஆரம்பிக்கப்பட்ட அரசமைப்பு மறுசீரமைப்புக்களைத் தொடர்ந்தும் முன்னெடுத்தல் ஆகியவற்றுக்கும் கட்சித் தலைவர் பதவிக்கு ரணில் விக்கிரம சிங்கவை நியமிப்பதற்கு கட்சி செயற்குழு எடுத்த தீர்மானத்துக்கும் கட்சி மாநாடு அங்கீகாரம் கொடுத்தது.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் இடம்பெற்ற 52 நாள் அரசியல் நெருக்கடியை வன்மையாகக் கண்டித்தும், அந்தச் சந்தர்ப்பத்தில் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக முன்நின்று செயற்பட்ட பொதுமக்களுக்கு நன்றியைத் தெரிவித்தும், அத்துடன் அரசமைப்பு மற்றும் ஜனநாயக ஆட்சி முறை தொடர்பாக நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புக்களைப் பாராட்டியும், அந்தக் காலப்பகுதியில் அச்சம், தயக்கம் எதுவுமின்றி செயற்பட்ட சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கும் நன்றிகளைத் தெரிவித்தும் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

குறைந்த அதிகாரத்தைக் கொண்ட நாடாளுமன்றத்தின் மூலம் நாட்டை முன்னேற்றும் சவால் மிகுந்த முயற்சியின்போது ஏற்படும் தாக்கங்கள் சாதாரண மக்களின் வாழ்க்கையைச் சீர்குலைப்பதற்கு வழியமைக்கும். அதனை விளங்கி இந்த மாநாடு அவ்வாறு தாக்கம் செலுத்தக் கூடிய தீய சக்திகளை கட்டுப்படுத்தும் வகையில் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்ட நாடாளுமன்றத்தை அமைப்பதற்கு எதிர்வரும் அரச தலைவர் தேர்தலை அடிப்படையாக மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அரசியல் பழிவாங்கல் மூலம் உடல் ரீதியாக பாதிக்கப்பட்ட சொத்துக்களை இழந்த ஒரு பகுதியினருக்கு இழப்பீட்டை வழங்கியுள்ளமை, இன்னும் ஒருசிலருக்கு இழப்பீட்டை பெற்றுக்கொடுப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியதாகும். அதற்கமைய அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்பட்டவர்களின் சில முறைப்பாடுகள் காணாமற் போயுள்ளமையால் அவர்களுக்கான சலுகைகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான காலமொன்றை பெற்றுக்கொடுத்தல் வேண்டும். மேலும், அரச சேவை பிரிவில் இடம்பெற்ற பழிவாங்களுக்கான நிவாரணங்களை வழங்க சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு அதிகாரங்களை வழங்குதல், அரச தலைவர் தேர்தல் இடம்பெற்று ஒரு வருட காலப்பகுதிக்குள் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளானவர்களுக்கு நிவாரணங்களை வழங்குதல் உள்ளிட்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. (ம-22)

## கோத்தாவின்...

வரையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கின் தீர்ப்பு இன்று வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் நாடெங்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு தலைமை நீதிபதி யசந்த கோதாகொட, அர்ஜுன ஒபேசேகர மற்றும் மகிந்த சமயவர்தன ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் குறித்த மனு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த மனு தொடர்பான விசாரணைகள் நேற்றுப் பிற்பகல் 1.30 மணி முதல் மாலை 6.15 மணி வரையில் இடம்பெற்றன.

இதன்போது, அரசமைப்பின் 30ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அரச தலைவரின் நிறைவேற்று அதிகாரங்களை ஒட்டுமொத்தமாகப் படிக்க வேண்டும் என்று பொது நிர்வாக மற்றும் உள்துறை அமைச்சர் வஜிர அபேவர்தன சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சனக டி சில்வா தெரிவித்தார்.

அரசமைப்பின் 42ஆவது பிரிவின்படி தனது கடமைகளின்போது நாடாளுமன்றத்துக்கு அரச தலைவர் பொறுப்பு என்று அரச தலைவர் சட்டத்தரணி சனக டி சில்வா மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் தெரிவித்தார். நிறைவேற்று அதிகாரங்கள் அமைச்சரவை மூலம் பயன்படுத்தப்படுகின்றன என்று அரசமைப்பின் 43ஆவது பிரிவு கூறுகின்றது என்றும் அவர் கூறினார்.

கடந்த ஆண்டு ஒக்ரோபரில் நாடாளுமன்றத்தைக் கலைக்க அரச தலைவருக்கு வரம்பற்ற அதிகாரங்கள் இருப்பதாக சட்டமா அதிபர் கூறியிருந்தாலும், உயர்நீதிமன்றத்தின் ஏழு பேர் கொண்ட நீதிபதிகள் குழு, அரச தலைவருக்கு அதிகாரங்கள் இல்லை எனக் குறிப்பிட்டதையும் சுட்டிக் காட்டினார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச சார்பில் முன்னிலையான அரச தலைவர் சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா, நிர்வாகத்தின் தலைவர் அரச தலைவராக இருப்பதாகவும், அமைச்சர்களை நியமிக்கவும், அமைச்சுக்களில் பணியாற்றவும் அதிகாரம் இருப்பதாகவும் கூறினார்.

19ஆவது திருத்தத்துக்கு முன்னர், அரச தலைவராக மகிந்த ராஜபக்ச மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டதாகவும், அவரது நடவடிக்கைகளை நீதிமன்றத்தில் சவால் செய்ய முடியாது என்றும் கூறினார். ரிட் மனுவை தவறான குற்றச்சாட்டில் பதிவு செய்துள்ளதால் அதைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் அவர் கோரினார்.

கோத்தபாய ராஜபக்சவுக்கு இரட்டை குடியுரிமை வழங்கப்பட்டபோது, அவர் உட்பட 21 பேருக்கு குடியுரிமை வழங்கப்பட்டது என்றும் அவர் கூறினார். இந்த மனுவை பேராசிரியர் சந்திரகுப்த தேனுவர மற்றும் காமினி வியங்கொட ஆகியோர் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-22)

## இலங்கையிலும்...

உள்ளடக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நுகேகொடையை சேர்ந்த விஜய குண்டுப்பிட்டிய என்பவராலேயே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த வழக்குத் தொடர்பில் எதிர்வரும் 10ஆம் திகதி நீதிமன்றம் விசாரிக்கவுள்ளது. இதன்போது 'நோட்டா' என்ற தெரிவை வாக்குச் சீட்டில் இணைக்க முடியுமா?, அதற்கான ஏற்பாடு அல்லது சட்ட முறைமை என்பன தொடர்பில் நீதிமன்றம் கரிசனை செலுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அயல் நாடான இந்தியாவில் இவ்வாறு நோட்டா என்ற முறைமை நடைமுறையில் உள்ளது. வேட்பாளர்களில் அல்லது கட்சிகளில் அதிருப்தி கொள்ளும் பட்சத்தில் மக்கள் அங்கு 'நோட்டாவுக்கு' நேரே புள்ளடியை இடமுடியும். இதன்படி இந்தியத் தேர்தல்கள் சிலவற்றில் சில கட்சிகள் பெற்ற வாக்குகளை விட நோட்டோ பெற்ற வாக்குகள் அதிகம் என்பது பதிவு.

இந்தியாவை விட கிரேக்கம், பிரான்ஸ், ஸ்பெய்ன் ஆகிய நாடுகளிலும் நோட்டா நடைமுறையில் உள்ளது. (ம)

## கெமி...

யாழ்ப்பாண நீதிவான் பீற்றர்போல் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதியை சேர்ந்த இளைஞரொருவர் கடந்த 18ஆம் திகதி அவரது உறவினர் ஒருவரின் கொண்டாட்ட நிகழ்வில் கலந்துகொண்டிருந்த வேளை குறித்த குழுவினர் ஆயுதங்களுடன் வருகைதந்து குறித்த இளைஞனை அவர்களது பெற்றோர்கள் முன்னிலையில் கடத்திச் சென்றுள்ளனர். இதுகுறித்து உடனடியாக யாழ் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு பெற்றோர் நேரில் சென்று முறைப்பாடு பதிவு செய்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டார் என்ற குற்றச்சாட்டில் நபரொருவர் மாத்திரமே கைது செய்யப்பட்டிருந்தார். குறித்த வழக்கு யாழ்ப்பாண நீதிமன்ற நீதிவான் பீற்றர்போல் முன்னிலையில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

முறைப்பாட்டாளர் சார்பில் முன்னிலையாகிய சட்டத்தரணி கௌதமன், கேமி குழுவினருக்கும் பொலிஸாருக்கும் இடையில் நெருக்கிய தொடர்பு உள்ளது. அந்தக் குழுவினர் எவ்வித தயக்கமும் இல்லாமல் நடமாடுவதுடன் குற்றச் செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். இந்தக் குழுவால் அண்மைக்காலமாக வாள் வெட்டுச் சம்பவங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் இதுவரையில் எவரும் கைது செய்யப்படவில்லை. கெமி குழுவினர் தொடர்பான ஒளிப்படங்கள், காணொலிகள் உள்ளபோதிலும் பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை - என்று மன்றுரைத்தார்.

வழக்கை விசாரித்த நீதிவான், ஏன் குறித்த குழுவினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை என்று பொலிஸாரை விசாரித்தார். குறித்த அடாவடிச் சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்கள் அனைவரும் உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார். வழக்கு மேலதிக விசாரணைக்காக எதிர்வரும் 17ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ம)

## வடக்கு...

வருகின்றன.

அரச அமைப்புக்கள், பொதுமக்கள், தனியார் நிறுவனங்கள் என்பவற்றின் உதவியுடனேயே மேற்படி பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டு வருகின்றன. இதைவிட தன்னார்வ அடிப்படையில் பனம் விதைகளை நடுகை செய்வதற்கு முன் வருவோருக்கும் விதைகள் வழங்கப்படவுள்ளன.

பனையின் பெருக்கத்தை அதிகரிக்கும் நோக்கில் வடமராட்சியை சேர்ந்த ஒருவர் சுமார் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பனம் விதைகளை சபைக்கு அன்பளிப்பு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-17)

## களமிறங்குகிறார்...

தேர்தலில் கோத்தபாய போட்டியிடுவதை கடுமையாக விமர்சித்தவர் வெல்கம. அவரை எதிர்த்து தேர்தலில் போட்டியிட தான் தயார் என்றும் தெரிவித்திருந்தார். எனினும் வெல்கம வேட்பாளராகக் களமிறங்க வாய்ப்பில்லை என்று சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர தெரிவித்ததை அடுத்தே அவர் தனித்துக் களமிறங்கவுள்ளார் என்று தெரியவருகிறது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.4
தாவடி காளி அம்பாள் விளையாட்டுக்கழகம் நடத்தும் அழைக்கப் பட்ட தாச்சி விளை யாட்டுக் கழகங்களுக்கு இடை யிலான 20 வயதுக்குட்பட்ட அணிக ளுக்காக தாச்சி தொடரில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக்கழக அணி, சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி அரையிறு திக்கு முன்னேறின.
நேற்று முன்தினம் தாவடி காளி அம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற முதலாவது ஆட்டத்தில் ஆனைக் கோட்டை சித்தி விநாய கர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட் டுக்கழக அணி 6:5 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற இரண்டா வது ஆட்டத்தில் நவாலி தென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சங்கானை கிங்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி 11:5 என்ற புள்ளிகள் அடிப்படை யில் வெற்றி பெற்றது. (23)

# 23 வயதுப் பிரிவினருக்கான தொடரா? 23 வயதுக்குட்பட்ட பிரிவுத் தொடரா?

## குழப்பத்தால் மீண்டும் இடம்பெறுகிறது தொடர்

யாழ்ப்பாணம், ஒக். 4
டயலொக் நிறுவனத்தின் அனுசர ணையில் நடைபெற்ற அரச தலை வர் கிண்ணத்துக்கான கரப்பந்தாட் டத் தொடரில் சம்பியன் அணியை அறிவித்த பின்னர், யாழ் மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அசமந் தப் போக்கால் மீண்டும் தொடர் தற்போது இடம்பெற்று வருகிறது.
23 வயதுக்குட்பட்ட பிரினருக்கான தொடர் என்பதை 23 வயதுப் பிரி வினருக்கான தொடர் என்று ஏற் பாட்டாளர்கள் தவறுதலாகக் கருதி யமையே இந்த நிலைக்குக் கார ணம் என்று தெரியவருகிறது.
அரச தலைவர் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் மாவட்ட ரீதியில் நடத்தப்பட்டு சம்பியன் பட் டத்தை வெல்லும் ஓர் அணி மட்டும் தேசியமட்ட போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டுள் ளது. இதன் இறுதியாட்டம் அண் மையில் நடைபெற்றது. இதில் தொண்டமானாறு கலையரசி அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் அணி மோதியது. கலையரசி அணி வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை வென்றது. ஆனால் 23 வயதுக்குட்பட்ட பிரி வில் வயது கணிக்கப்பட்டதில் தவ றிழைக்கப்பட்டது என யாழ் மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் அறிவித்து மீண்டும் தொடரை நடத்தி வருகிறது.
இது தொடர்பாக தொண்டமானாறு கலையரசி வீரர்கள் கருத்துத் தெரி விக்கையில்,
இறுதியாட்டம் நடைபெற்று முடிந்து நாம் சம்பியன் என அறிவித்த பின்னர் மீண்டும் எவ்வாறு போட் டியை நடத்த முடியும். வயது தவ றாக கணிக்கப்பட்டது. அணிகளின் தவறில்லை. யாழ். மாவட்ட கரப் பந்தாட்டச் சங்கத்தின் தவறு. அதி லும் 23 வயதுக்குட்பட்ட பிரிவில் 23 வயது வீரர்களே பங்குபற்றி யுள்ளனர். இதில் 22 வயது வீரர் கள் மட்டுமே விளையாடவில்லை. அப்படி இருக்கும்போது எவ்வாறு மீண்டும் போட்டியை நடத்துவது. இது பங்குபற்றிய அனைத்து அணிகளுக்கும் பொதுவாகவே அமைந்துள்ளது - என்றனர்.
இது தொடர்பாக யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவ ருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது; கொழும்பில் நடைபெற்ற கலந்துரையாடலில் பிறந்த திகதி வேறாக குறிப்பிடப்பட்டது. அதனை வைத்து போட்டிகள் நடைபெற்று முடிந்த பிறகே மாற்று பிறந்த திகதி கிடைக்கப்பெற்றது. இதனாலேயே தொடரை மீண்டும் நடத்த தீர்மா னித்தோம்-என்றார்.
23 வயதுக்குட்பட்ட பிரிவினர் என் பதில் 22 வயது வீரர்களும் விளை யாட முடியும் என்பது எல்லோருக் கும் தெரியும் விடயமாகும். இது தொடர்பாக கொழும்புக்கு கலந்து ரையாடலுக்குச் சென்றவர்கள் ஏன் கேள்வி எழுப்பவில்லை. அவர்கள் சொல்வதைக் கேட்டுவிட்டு வருவ தற்கு கொழும்புக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை என்று ஆர்வலர்கள் விசனம் வெளியிட் டுள்ளனர். (422)

## கரப்பந்தாட்டத் தொடர்;

# வளர்மதி - கலையரசி இறுதியில் பலப்பரீட்சை

கரணவாய், ஒக்.4
டயலொக் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறும் அரச தலைவர் தங்க கிண்ணத் துக்கான 23 வயதுப் பிரிவு ஆண்களுக் கான கரப்பந்தாட்டத் தொடரில் புத்தூர் வளர் மதி விளையாட்டுக் கழகம், தொண்டமா னாறு கலையரசி விளையாட்டுக் கழகம் இறுதிப் போட்டிக்கு முன்னேறின.
இதன் அரையிறுதியாட்டங்கள் நேற்று முன் தினம் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றன. முதலில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழகம் மோதியது. 5செற்களைக் கொண்ட போட்டி யில் 25:19 25:19 25:23 என்ற செற் கணக் கில் கைப்பற்றி 3:0 என்ற புள்ளிகள் அடிப் படையில் வென்று இறுதிக்குத் தகுதி பெற் றது புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகம்.
தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரை யிறுதியாட்டத்தில் தொண்டமானாறு கலை யரசி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் மோதியது. இதில் முதல் செற்றை 25:20 என்ற செற் கணக்கில் கலையரசி கைப்பற்றி யது. அடுத்த செற்றை 31:29 என கலைமதி கைப்பற்றியது. தொடர்ந்து அபாரமாக செயற்பட்ட கலையரசி விளையாட்டுக்கழகம் அடுத்த இரு செற்களையும் 25:20 25:21 என்ற செற் கணக்கில் கைப்பற்றி 3:1 என்ற கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்குள் நுழைந்தது.
இறுதியாட்டம் இன்று வெள்ளிக்கிழமை புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இரவு 7 மணிக்கு இடம் பெறவுள்ளது. (108)

## விளையாட்டுக்கழக பொதுமண்டபம் திறப்பு

வடமராட்சி கிழக்கு கொடுக்கிளாய் ஆழியவளை சக்திவேல் விளையாட்டுக் கழகத்தின் பொது மண் டப திறப்பு விழா நிகழ்வு நேற்றுமுன்தினம் முற் பகல் 10மணிக்கு கழகத் தலைவர் செ.பாலகோபி தலைமையில் ஆரம்பமானது.
ஆழியவளை கொடுக்கிளாயை சேர்ந்த மூத்த உறுப்பினரும் புலம்பெயர்ந்து வசிக்கும் ஆறு முகம் நவரநீதராசாவின் அன்பளிப்பில் கட்டப் பட்ட மண்டபத் திறப்பு விழாவின் ஆரம்ப நிகழ் வாக மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமானது. தொடர்ந்து மண்டபத்தை கழகத்தின் மூத்த உறுப் பினர் ம.சௌந்தரராசா சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து வருடாந் தம் நடத்தப்படுகின்ற வடமராட்சி கிழக்கு பிரதேசத் துக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையிலான மென்பந்து துடுப்பாட்ட போட்டியின் ஆரம்ப நிகழ்வு களும் இடம்பெற்றது. இதில் 12 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான போட்டிகள் ஆரம்பமாகின. (160)

## கராத்தே போட்டி முடிவுகள்

இலங்கை தேசிய கராத்தே தோ சம்மேளனத்தால் நடத்தப்பட்ட வடமாகாண கராத்தே சுற்றுப் போட்டி யில் கோல்டன் சோட்டோக்கான் கராத்தே மாசல் ஆட்ஸ் மாணவர்கள் 5 தங்கம், 2 வெள்ளி, ஓர் வெண்கலம் உட்பட 8 பதக்கங்களைச் சுவீகரித்தனர்.
கடந்த சனி,ஞாயிற்றுக்கிழமைகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற வடமாகாண கராத்தே போட்டியில் அனோஜிதன் 14 வயதுப் பிரிவு ஆண்களுக்கான குமித்தே,காட்டா போட்டி யில் தங்கப்பதக்கத்தையும்.நிருசன் 21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான குமித்தே போட்டியில் தங்கப்பதக்கத்தையும். ஸ்ரீபன் 20 வயதுப்பிரிவு ஆண்களுக்கான குமித்தே போட்டியில் தங்கப் பதக்கத்தையும், துஷாந் 20 வயதுப்பிரிவு ஆண் களுக்கான குமித்தே போட்டியில் தங்கப்பதக்கத் தையும், காட்டா போட்டியில் வெள்ளிப்பதக்கத்தை யும்,கவிசன் 8 வயதுப்பிரிவு ஆண்களுக்கான குமித்தே போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர். (23)

## கராத்தே போட்டியில்

# சதீஸ்குமார் பிராயன் பதக்கங்களை குவித்தார்



இலங்கை கராத்தே தோ சம்மேள னத்தால் நடத்தப்பட்ட வடமாகாண கராத்தே சுற்றுப் போட்டியில் புனித பத்திரிசியார் கல்லூரியின் மாண வன் சதீஸ்குமார் பிராயன் ஓர் தங் கப் பதக்கத்தையும், ஓர் வெள்ளிப் பதக்கத்தையும், ஓர் வெண்கலப் பதக்கத்தையும் கைப் பற்றினார்.
கடந்த வாரம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம் பெற்ற வட மாகாண கராத்தே போட்டியில் 7 வயதுப் பிரிவு ஆண்களுக்கான குமித்தே போட்டியில் தங்கப் பதக்கத்தையும், குழு காட்டா போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும், தனிக் காட்டா போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினார். (23)

# யாழ். இந்து மாணவன் சங்கீர்த்தன் பதக்க வேட்டை



யாழ்ப்பாணம்,ஒக்.4
இலங்கை கராத்தே தோ சம் மேளனத்தால் நடத்தப்பட்ட வடமாகாண கராத்தே சுற் றுப் போட்டியில் யாழ்ப்பா ணம் இந்துக்கல்லூரி மாண வன் ச.சங்கீர்த்தன் ஓர் தங் கப் பதக்கத்தையும், இரண்டு வெண்கலப் பதக் கங்களையும் கைப்பற்றினார்.
கடந்த வாரம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம் பெற்ற வட மாகாண கராத்தே போட்டியில் 12 வயதுப் பிரிவு ஆண்களுக்கான குமித்தே போட்டியில் தங்கப் பதக்கத்தையும்,குழு காட்டா போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும், தனிக் காட்டா போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினார். (23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈச்சமோட்டை வி.க. அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது



யாழ்ப்பாணம், ஒக்.4

தெல்லிப்பழை வித்தகன் விளையாட்டுக் கழகம் நடராஜா ஜெகநாதன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்திய அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் 8 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டத் தொடரில் ஈச்சமோட்டை விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.

கடந்த வாரம் அளவெட்டி வேள்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஈச்சமோட்டை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை லெவின்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஈச்சமோட்டை விளையாட்டுக் கழக அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது. அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய ஆனைக்கோட்டை லெவின் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றது. இதில் துசி 28 ஓட்டங்களையும், சிந்து 9 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் லதீஸ் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஈச்சமோட்டை விளையாட்டுக்கழக அணி 6.3 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அணி சார்பில் சரவணன் 22 ஓட்டங்களையும், கரி 18 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் தீபன், டிலான் ஆகியோர் தலா ஓர் இலக்கைக் வீழ்த்தினர். (23)



## கரைதுறைப்பற்று பி. செ. கிண்ணம் வென்றது

முல்லைத்தீவு மாவட்ட அரச திணைக்களங்களுக்கு இடையிலான மாவட்டச் செயலர் வெற்றிக் கிண்ணத்துக்கான ஒவர் கேம் கரப்பந்தாட்டத் தொடரில் கரைதுறைப் பற்று பிரதேச செயலக அணிகிண்ணம்வென்றது.

நேற்று வியாழக்கிழமை முல்லைத்தீவு பிரதேச சபை மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவு முல்லைத்தீவு மாவட்ட செயலக அணியை எதிர்த்து கரைதுறைப்பற்று பிரதேச செயலக அணி மோதியது. இதில் 38:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (23)

## ஆஸி. வீராங்கனை அலீசா ஹீலி புதிய சாதனை

இலங்கை மகளிர் அணிக்கு எதிராக சிட்னியில் இடம்பெற்ற 3ஆவது ரி-20 போட்டியில் ஆஸ்திரேலிய வீராங்கனை அலீசா ஹீலி புதிய சாதனையைப் படைத்தார்.

இலங்கை பெண்கள் அணிக்கு எதிராக இடம் பெற்ற ரி- 20 போட்டியில் ஆஸ்திரேலிய வீராங்கனை அலீசா ஹீலி 61 பந்துகளில் 7 ஆறு ஓட்டங்கள், 19 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 148 ஓட்டங்களைக் குவித்து பெண்களுக்கான பன்னாட்டு ரி- 20 போட்டியில் ஆகக் கூடுதலான ஓட்டத்தைக் குவித்து புதிய சாதனையைப் பதிவு செய்தார். இவர் 46 பந்துகளில் தனது சதத்தை பூர்த்தி செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



வடக்கு-கிழக்கு பிறீமியர் லீக்

# வல்வை எவ்.சி. - ரில்கோ இறுதியில் நாளை மோதல்





யாழ்ப்பாணம், ஒக்.4

வடக்கு-கிழக்கு பிறீமியர் லீக் கால்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டம் நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இரவு 7 மணிக்கு மின் ஒளியில் இடம் பெற்றவுள்ளது.

இறுதியாட்டத்தில் வல்வை எவ்.சி. அணியை எதிர்த்து ரில்கோ அணி மோதவுள்ளது. இன்றைய நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் மற்றும் மதிப்புறு விருந்தினர்களாக முன்னாள் இலங்கை துடுப்பாட்ட அணி தலைவரும், எம்.சி.சியின் தலைவருமான குமார் சங்கக்கார, இலங்கை கால் பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் அனுர டீசில்வா, யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ.ஆனல்ட் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (23)



## மானிப்பாய் ஏஞ்சல் வாகை

யாழ்ப்பாணம், ஒக். 4

இலங்கை பாடசாலைகள் கூடைப் பந்தாட்ட சம்மேளனம் நடத்தும் தேசிய ரீதியிலான கூடைப்பந்தாட்டத் தொடரில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி வெற்றி பெற்றது.

நேற்று வியாழக்கிழமை கொழும்பு நாலந்தாக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி மோதியது. இதில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி 53 : 49 என்ற புள்ளிகள் அப்படையில் வெற்றி பெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணியை எதிர்த்து கொழும்பு பன்னாட்டுப் பாடசாலை அணி மோதியது. இதில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி 53:42 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (23)

# ரியல் மட்ரிட் - ப்ரூஜ் கழகம் ஆட்டம் சமநிலையில்

ஐரோப்பியக் கழங்களுக்கிடையில் இடம் பெற்று வரும் லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டியொன்று சமநிலையில் முடிவடைந்தது.

ரியல் மட்ரிட் - ப்ரூஜ் கழகத்துக்கும் இடையிலான போட்டியில் இரு அணிகளும் ஏட்டிக்குப் போட்டியாக ஆடின. ஆட்டம் ஆரம்பித்த 9ஆவது நிமிடத்தில் ப்ரூஜ் கழக அணி தனது முதலாவது கோலைப் பதிவு செய்தது. அந்த அணியின் வீரர் இம்மானுவேல் முதலாவது கோலைப் பதிவு செய்தார். அவர் மீளவும் 39ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் போட முதல் பாதி ஆட்டத்தில் ப்ரூஜ் கழக அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலையில் காணப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்த 10ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணி வீரர் ரமோஸ் அணி சார்பில் முதலாவது கோலைப் பதிவு செய்தார். பின்னர் இரு அணி வீரர்களும் முட்டி மோதிக் கொண்டு ஆக்ரோசமாக ஆட ஆரம்பித்தனர். ஆட்டத்தின் 85ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணி வீரர் காஸ்மீரா ஓர் கோலைப் பதிக்க ஆட்டம் விறுவிறுப்பானது. இறுதியில் இரு அணிகளாலும் மேலதிக கோல்களை பதிவு செய்ய முடியாமல் போக ஆட்டம் 2:2 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.


ரியல் மட்ரிட் அணி வீரர்கள் 17 தடவைகள் எதிரணியின் கோல் கம்பங்களை நோக்கி பந்துகளை நகர்த்தியிருந்த போதிலும் அவர்களால் இரண்டாம் பாதி ஆட்டத்திலேயே 2 கோல்கள் பெறப்பட்டன. அத்துடன் 14 கோணர்கள் கிடைத்தும் அவர்களால் மேலதிக கோல்களை போட முடியாமல் போனது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமாலய பலத்துடன் இந்திய அணி

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய ரோகித் சர்மா, அகர்வால் வலுவான ஓட்டங்களைப் பதிவு செய்தனர். நேற்றுமுன்தின நாள் முடிவில் அணி இலக்கு இழப்பின்றி 202 ஓட்டங்களை எடுத்திருக்கும்போது மழை குறுக்கிட்டதால் ஆட்டம் நிறுத்தப்பட்டது.





களத்தில் ரோகித் சர்மா 115 ஓட்டங்களுடனும், மயங்க் அகர்வால் 84 ஓட்டங்களுடனும் நேற்றைய நாளுக்காகக் களமிறங்கினர். இருவருக்குமிடையில் இணைப்பாட்டமாக 317 ஓட்டங்கள் பகிரப்பட்டன. ரோகித் 6 ஆறு ஓட்டங்கள் 23 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 176 ஓட்டங்களில் ஆட்டமிழந்து பவிலியன் திரும்பினார். பின்னர் இணைந்த புஜாரா 6 ஓட்டங்களுடன் வெளியேற, வந்தார் கோக்லி. அவர் பந்துகளை வீணடித்து 20 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். மயங்க் அகர்வால் சிறப்பாக விளையாடி டெஸ்ட் போட்டியில் தனது முதலாவது இரட்டைச் சதத்தை பதிவு செய்தார். அவர் 215 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்தார். பின்னர் இணைந்த ஜடேஜா கைகொடுக்க அணி 7 இலக்குகளை இழந்து 502 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. பந்து வீச்சில் மகாராஜ் அதிகபட்சமாக 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

நேற்றைய தனது முதல் இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய தென்னாபிரிக்கா அணிக்கு அஸ்வின் ஆரம்பமே அதிர்ச்சி கொடுத்தார். அணி 14 ஓட்டங்களைப் பெற்ற போது ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மார்க்கிராமை 5 ஓட்டங்களுடன் பவிலியன் திருப்பினார். அடுத்து வந்த டி ப்ரூயின் 4 ஓட்டங்களிலும், டேனி ஓட்டமெதனையும் பெறாது வெளியேறினர். அணி ஆரம்பமே 3 இலக்குகளைப் பறிகொடுத்து பரிதவித்தது. பின்னர் இணைந்த எல்கர் 27 ஓட்டங்களுடனும், பவுமா 2 ஓட்டங்களுடனும் களத்திலுள்ளனர். பந்து வீச்சில் அஸ்வின் 2 இலக்குகளையும், ஜடேஜா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

## நாங்கள் மோசமாக பந்து வீசவில்லை ரோகித், மயங்க் சிறப்பாக ஆடினர்

*மகாராஜ் வெளிப்படை*



நாங்கள் மோசமாக பந்து வீசவில்லை. ரோகித் சர்மா, மயங்க் அகர்வால் சிறப்பாக துடுப்பெடுத்தாடினார்கள் என தென்னாபிரிக்கா அணி வீரர் மகாராஜ் தெரிவித்துள்ளார்.

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ரோகித் சதம் கடந்தார். மயங்க் அகர்வால் இரட்டைச் சதம் கடந்து சிறப்பாக துடுப்பெடுத்தாடி அணிக்கு வலுச் சேர்த்தனர்.

இந்த நிலையில் தென்னாபிரிக்கா அணி வீரர் மகாராஜ் நாங்கள் மோசமாக பந்து வீசவில்லை என்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாங்கள் மோசமாக பந்து வீசினோம் என்று நான் கூறமாட்டேன். என்னுடைய தனிப்பட்ட கணிப்பு என்னவெனில், யாராவது ஒரு துடுப்பாட்ட வீரர் களம் இறங்கி, பந்து வீச்சாளரின் பந்தை துவம்சம் செய்தால், அவர் வீசிய பந்து மோசமானதல்ல.

மயங்க் அகர்வால் சிறப்பாக ஆடினார். அதேபோல் ரோகித் சர்மாவும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். பந்து வீச்சாளர்கள், அவர்களால் என்ன செய்ய முடியுமோ, அதைச் செய்தார்கள். இது இந்தியாவின் நாளாக அமைந்துள்ளது. நாங்கள் மோசமாக பந்து வீசியதாக நான் பார்க்கவில்லை - என்றார்.



SLAS (Open/Limited) வகுப்புக்கள்
சனி (5/10)
9.00 - 3.30
தவசேகர்
பௌநந்தி
ஞாயிறு (6/10)
9.00 - 3.30
தவசேகர்
கருணதாஸ்
விசேட SLAS வளவாளர்
தொடர்பு 0766883394
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதியில் பஸ்நிலையத்திலிருந்து 100m தூரத்தில்)

SLAS Open/Limited
P. உமாசங்கர் & வளவாளர்கள்
கருத்தரங்கு தொடர் 21
கிரகித்தல் - A. பௌநந்தி
நுண்ணறிவு - S. நவநீதன்
05.10.2019 சனி
9.00 am - 5.00 Pm
"முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களுடன்"
GK. இலங்கை நூல் பெற்றுக்கொள்ளலாம்.
NEC
076 166 1986, 077 741 7143

SLAS Open/Limited
P. உமாசங்கர் & வளவாளர்கள்
கருத்தரங்கு தொடர் 22
பொது அறிவு
இலங்கை & உலகம்
S. அன்ரன் பெரேரா
06/10/2019 ஞாயிறு
9am- 5.00 pm
"முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களுடன்"
GK. இலங்கை நூல் பெற்றுக்கொள்ளலாம்.
நாவலர் கல்வி நிலையம்
076 166 1986, 077 741 7143

SLAS 13
கருத்தரங்கு தொடர்
05.10.2019 சனி 9 Am
P.கமல்தாசன்
மற்றும்
R. திரவியராஜ் (SLAS)
இணைவுடன் ②
பொதுவிவேகம்,
உளச்சார்பு
நாவலர் கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்
077 1116 739, 076 166 1986

அமெரிக்க லொத்தர் இலவச விசா
பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2021ல் நீங்களும் அமெரிக்காவில்..
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
0768226241
V2 Travels
யாழ்ப்பாணம் 0768226243
கிளிநொச்சி 0768226240
நெல்லியடி 0776699892
சாவகச்சேரி 0768226242
திருகோணமலை 0768226237
மானிப்பாய் 0768226238
சுன்னாகம் 0764550670
கொடிகாமம் 0764550675
புதுக்குடியிருப்பு 0764550673
மருதங்கேணி 0764550671
பருத்தித்துறை 0768226230
வல்வெட்டித்துறை 0776697960

CTHI
ஆரம்பம்
Oct 5 & 8 2019
Special Offer
30,000/=
ஹோட்டல் மனேஜ்மென்ட்
100% வேலை
90% செய்முறை வகுப்புக்கள்
படிக்கும் போதே கைநிறைய சம்பாதிக்க வெளிநாட்டில் உயர் கல்வி
No.1544, KKS Road, Jaffna.
0760579999, 0213146171

வீடு வாடகைக்கு
திருநெல்வேலி சந்தியிலிருந்து 400m தூரத்துக்கு உட்பட்ட 4 அறைகள் ஒரு ஹோல், குளியலறை, சமையலறை வாகனங்கள் விடக்கூடிய வசதிகளைக் கொண்டமைந்த வீடு ஒன்று வாடகைக்கு விடப்படும். அலுவலகமாகவும் பயன்படுத்த முடியும்.
077 165 0817

அரங்க விழா
2019
ஒக்டோபர்
04-07
ஆற்றுகை நேரம்
2.30, 4.30, 6.00
கைலாசபதி கலையரங்கம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வேலையாள்கள் தேவை
ஒட்டிசுட்டான், முல்லைத்தீவில் அமைந்திருக்கும் தங்கம் அடைவு பிடிக்கும் கடைக்கு 20 - 35 வயதுடைய A/L சித்திபெற்ற பெண்கள் வேலைக்குத் தேவை. (மாங்குளம், முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, நெடுங்கேணி ஆகிய இடங்களில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
077 296 0791, 075 044 4044

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org